# செந்தமிழ்ச் செல்வி

திங்கள் வெளியீடு

சிலம்பு ௪௭ | திருவள்ளுவர் ஆண்டு ௨௦௦௪, மாசி மார்ச் 1973 | பரல் ௭


# திருக்குறள் பணியே கழகத்தின் தனிப்பெரும் பணி

(முன் பரல் ௬ பக்கம் ௩௨௪ தொடர்ச்சி)

கருவிலே திருவுடைய நுண்மாண் நுழைபுலச் செம்மல் திரு இளவழகனார் சென்னையில் முதன் முறை, கழகப் புலவராக 1927 திசம்பர் முதல் 1930 பிப்பிரவரி முடிய அமர்ந்து பணியாற்றிய காலத்தில் நீதிவெண்பா, நீதிநெறி விளக்கம், ஏலாதி, நான்மணிக் கடிகை, முதுமொழிக் காஞ்சி, பழமலையந்தாதி ஆகிய ஆறு நூல்கட்கும் சொற்பொருள் விளக்கவுரை எழுதினர். அவை கழகப் பதிப்புகளாக அச்சிடப்பெற்று வெளிவந்துள்ளன. 'ஜினேவா வீரன்' என்னும் கொலம்பசு வரலாற்றைப் பள்ளித் துணைப்பாட நூலாக அமையும் வகையில் எளிய இனிய செந்தமிழ் நடையில் எழுதியுள்ளார்.

அவர் 'அகப்பொருள் விளக்கம்' பற்றி எழுதிய பன்னிரு கட்டுரைகள் செந்தமிழ்ச் செல்வி 6ஆவது சிலம்பிலும் 'புறப்பொருள் விளக்கம் பற்றி எழுதிய பன்னிரு கட்டுரைகள் 7ஆவது சிலம்பிலும் விளக்கப் படங்களுடன் வெளியிடப் பெற்றன. இவ்விருபத்து நான்கு கட்டுரைகளும் அறிஞர் பெருமக்கள் உள்ளங் கவர்ந்தன. அவற்றின் அருமை பற்றி முதுபெரும் புலவர் பண்டித நாவலர் வேங்கடசாமி நாட்டாரவர்கள் என்னிடம் மிகவும் வியந்து பாராட்டி யுரைத்த துண்டு. அகப்பொருள் விளக்கக் கட்டுரைத் தொகுப்புப் 'பண்டைத் தமிழர்

இன்பியல் வாழ்க்கை' என்ற தலைப்பினும், புறப் பொருள் விளக்கக் கட்டுரைத் தொகுப்புப் 'பண்டைத் தமிழர் பொருளியல் வாழ்க்கை' என்ற தலைப்பினும் 1945ஆம் ஆண்டில் 383, 392ஆம் எண் கழக வெளியீடுகளாக அச்சிடப் பெற்றன.

தாகூர் சட்டவிரிவுரையாளர் பேராசிரியர் கா சுப்பிரமணிய பிள்ளையவர்கள் 'தமிழ் இலக்கிய வரலாறு' எழுதுவதற்குத் திரு இளவழகனுர் விடுமுறை நாள்களிலும், இரவு நேரங்களிலும் துணைபுரிந்தனர். அதனைக் கழகப் பதிப்பாக அச்சிடக் கருதிக் கழக அலுவல் நேரங்களில் அவர் திருத்தப்படி செய்து மேற்கோள் விளக்கக் குறிப்புகளை எழுதி முடித்தனர். பின்னர், பேராசிரியர் கா. சு பிள்ளை யவர்கள் தமிழ் இலக்கிய வரலாற்றைத் தமது சொந்தப் பதிப்பாக வெளியிட விரும்பிய தால் கழகம் இசைந்து கையெழுத்துப்படியினை அவர்களிடம் ஒப்புவித்தது. திரு பிள்ளையவர்கள் பிரிவுக்குப்பின் அதன் மறு பதிப்பினைக் கழக வெளியீடாக அச்சிடவும் அவர்களுடைய மக்களுக்கு உரிமை ஊதியம் (ராயல்டி) வழங்கி வரவும் வழிவகை செய்ய முயன்றதில் அவர்களின் வாக்குப் பிறழ்வினுல் அதனைப் பதிக்கும் உரிமை வேறு பதிப்பாளர்க்குப் போகவும் உரிமை ஊதியம் இழக்கவும் நேரிட்டது மிகவும் வருந்துதற்குரியதே.

திரு இளவழகனுர் 1930 பிப்பிரவரித் திங்களில் கழகப் பணியினின்றும் விலகிக் கொண்டனர். தமக்குக் கல்வி யறிவுறுத்திய தனித்தமிழ்த் தந்தை மறைமலையடிகளார் திருப்பெயரால் ஒரு பதிப்புக் கழகம் நிறுவத் திட்டம் வகுத்தே கழகப் பணியினின்றும் விலகினர் என்பது பின்னர்த் தெரிய வந்தது. அவருடைய செந்தமிழ்ப் புலமையிலும் தனித்தமிழ் நடையிலும் மிக்க மதிப்பு வைத்த நாமக்கல்லில் காவல்துறை வட்ட ஆய்வாளராக விருந்த துடிசைக்கிழார் அ. சிதம்பர முதலியார் நன்கொடை திரட்டி ஒரு குறிப்பிடத்தக்க தொகை யினை வழங்கினர் அத் தொகையினைக் கொண்டு 'மறைமலை யடிகள் கல்விக் கழகம்' என்ற பதிப்பகத்தைப் பறங்கிமலை புதுப் பேட்டைத் தெருவில் நிறுவி நடத்தலாயினர்.

1931 சனவரித் திங்கள் திரு இளவழகனுர் தமது கல்விக் கழகத்திற்காகத் தமிழ்நூல் விலைப்பட்டி $50\frac{1}{2} \times 35$ செ.மீ. அளவுள்ள வெண்ணிறத்தாளில் 10,000 படிகள் சாது அச்சுக் கூடத்தில் அச்சிட்டுள்ளனர் அதன் மேல்புறம் $50\frac{1}{2} \times 3$ செ.மீ. அளவுள்ள பகுதியின் இரு பக்கங்களிலும் கல்விக் கழகத்தின் முழுமையான முகவரி தமிழிலும் ஆங்கிலத்திலும் அச்சிடப் பெற்றுள்ளது.

ஒரு பக்கமுள்ள முகவரியின் கீழ்,

"முதன்மையான குறிப்பு: இக் கழகத்தின் நூல்கள் வாங்குவார் யாவர்க்குந் தமிழ் நலங் கருதித் தபாற் செலவுகள் குறைத்தனுப்பப்படும். இதற்காக இக் கழகத்தில் ஒரு முதற் பொருள் நிறுவப்பட்டிருக்கின்றது" எனவும்,

பின் பக்கத்திலுள்ள முகவரியின் கீழ்,

"முழுமையான குறிப்பு: ஒரே தடவையில் ஆசிரியர் மறைமலையடிகள் நூல்கள் அவ்வளவும் மொத்தமாய் வாங்கும் அன்பர்களுக்குப் பெருக்கி யெடுக்கப்பட்ட அடிகளின் திருவுருவப் படம் ஒன்று இனமாய் அனுப்பப்படும்"

எனவும் அச்சிடப் பெற்றுள்ளன.

மேலே குறிப்பிட்ட $50\frac{1}{2} \times 3$செ.மீ. அளவுள்ள பகுதியினை ஒரு தனி மடிப்பாக மடித்த பின்னர் அப்படியே மீதியுள்ள பகுதியை நான்கு மடிப்புகளாக மடித்தால் $15\frac{1}{2} \times 10$செ. மீ. அளவில் முன்பக்கம் ஒரே பார்வையில் 10 பக்கங்களும், பின் பக்கம் 10 பக்கங்களும் அமைகின்றன. முகப்புப் பக்கத்தில் தமிழிலும் ஆங்கிலத்திலும் 'மறைமலையடிகள் கல்விக் கழகத் தமிழ் நூல் விலைப்பட்டி' என்றும் அதன்கீழ் நடுவணதாக மறைமலையடிகளார் முழுமையான திருவுருவப் படமும் படத்தின்கீழே அடியிற்காணும் அடிகளார் பொன் மொழிகள் மூன்றும் அவற்றின்கீழ் ஆங்கிலத்தில் கல்விக் கழகத்தின் முகவரியும் அச்சிட்டிருப்பது அழகிய தோற்றந் தருகின்றது.

பொன் மொழிகள் வருமாறு:

"எல்லா மக்களுக்குங் கல்விப் பயிற்சி இன்றியமையாதது"

"கல்வியாகிய விளக்கைக் கொண்டு எல்லாம் வல்ல ஆண்டவன்றன் பேரின்ப வெள்ளத்தைத் தெரிந்து சென்று அவ்வின்பத்தை நுகர வம்மின்கள்"

"நாம் நம்மவரெல்லார்க்கும் நம் அருந்தமிழ்த் தெய்வக் கல்வியைப் புகட்ட முன் நிற்போமாக!" —மறைமலையடிகள்

முகப்புப் பக்கத்தின் அடியிலுள்ள பக்கத்திலும், இடப்பக்கமுள்ள பக்கங்கள் இரண்டிலும் கல்விக் கழகத்தின் நோக்கங்கள் 'ஓர் அறிவிப்பு' என்ற தலைப்பில் காணப் பெறுகின்றன. எஞ்சிய 6 பக்கங்களிலும் ஆறுமுக நாவலர், பேராசிரியர் கா. சுப்பிரமணிய பிள்ளை, டாக்டர் சாமிநாதையர், பண்டித வேங்கடசாமி

நாட்டார், திரு வி. கலியாண சுந்தர முதலியார், சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார் முதலியோர் நூல்கட்கு விலைப்பட்டி காணப்படுகின்றது.

பின் ஒரே பார்வையிலுள்ள 10 பக்கங்களில் திரு இளவழகனார் எழுதிக் கழக வெளியீடாக அச்சிட்ட 'இராமலிங்க அடிகள் வரலாறும் திருவருட்பா ஆராய்ச்சியும்' என்ற நூல் விளம்பரமும், கிடைக்கப் பெறும் நூல்களைப் பெறுதற்குரிய குறிப்பும், மற்றும் 6 பக்கங்களில் மறைமலையடிகளார் நூல்கட்கும், ஞான சாகரம் (அறிவுக் கடல்) என்னும் இதழுக்கும் விளக்கமான விளம்பரமும் அச்சிடப் பெற்றிருக்கின்றன. அடிகளார் நூல் விளம்பரத்தின் அடியில்,

"ஆசிரியர் மறைமலை யடிகளின் அழகழகான திருவுருவப் படங்களும் திருவுருவச் சிலைகளும் எவ்வகையில் எவ்வடிவில் எவ்வண்ணத்தில் வேண்டுமாயினும் அங்ஙனமே இக்கழகத்தி லிருந்து வேலை திறமாகவும் விலை நயமாகவும் செய்வித்துக் கொடுக்கப்படும்; கழகங்கள், கல்லூரிகள், அவைகள், இல்லங்கள், நூல் நிலையங்கள், இதழ் நிலையங்கள் முதலான வற்றில், தமிழ் மக்களுக்கு ஒரு கலங்கரை விளக்கமென ஒளிரும் அருமை அடிகளின் அழகுருவத்தை அன்பர்கள் உடனே அமைத்துக் கொள்ளல் நலமாகும். விரிவான செய்திகட்குக் கடித மெழுதுக" என்ற குறிப்புக் காணப்படுகின்றது.

கல்விக் கழகத் தமிழ்நூல் விலைப்பட்டியைப் பற்றி ஏன் இத்துணை விரிவாக எழுதுதல் வேண்டுமென்று சிலர் வினவுதல் கூடும். இத்தகைய அழகிய விளம்பரத்தைக் கண்ணுற்றவர் ஒரு சிலராகவும் கண்ணுறாதவர் பலராகவும் இருத்தல் கூடும். பிற்காலத்தில் மக்களால் பெரிதும் மதித்து வணங்கத்தக்க பெரும்புலவர் ஒருவர் தம் அருமை ஆசிரியர் பெருந்தகையார் பால் வைத்த ஆரா அன்பினையும் மிக்க மதிப்பினையும் உலகினர் அறிந்து கொள்ளும்பொருட்டேயாகும். மேலும் இவ்விலைப்பட்டி அமைப்பில் திரு இளவழகனாரின் கைத்திறனும் அறிவுத் திறனும் பிணைந்திணைந்து துலங்குகின்றன.

அவர் அடுத்துத் தமது கல்விக் கழக வெளியீடாக 1931 நவம்பரில் வெளியிட்ட நூல் துடிசைக்கிழார் அ. சிதம்பர முதலியார் எழுதிய 'இங்கித மணவியல்' என்னும் திருமண நிகழ்ச்சி விளக்கம் என்பதாகும். ஆசிரியர் அதன் உரிமை யினைக் கழகத்துக்கே வழங்கியுள்ளனர். அதற்கு ஆசிரியர் மறைமலை யடிகளார் வரைந்தளித்த மதிப்புரை அடியில் வருமாறு:

'இங்கிக மணவியல்' என்னும் இந்நூல் தமிழர்க்குரிய மணமுறைகளை ஆராய்ச்சி முறையில் நன்கு வகுத்துக்காட்டி, இந்நாட்டவராகிய தமிழர்கள் மேற்கொண்டு செயற்பாலவாகிய மணச் சடங்கு முறைகளைத் தெளிவாக விளக்குகின்றது. பண்டுதொட்டு நாகரிக வாழ்க்கையிற் சிறந்த தமிழ் மக்கள் தாம் செய்யும் சடங்குகளைத் தமது தெய்வத் தமிழ்மொழியிலேயே தமிழ் மந்திரங்களைக் கொண்டு நடப்பிக்க வேண்டிய முதன்மை இதன்கண் நன்கு வற்புறுத்தப்பட்டிருக்கின்றது. ஒவ்வொரு மணவினைக்குந் தமிழ் மந்திரச் செய்யுள்களுஞ் செவ்வையாகச் செய்து சேர்க்கப்பட்டிருக்கின்றன. ஆதலால், நம் நாட்டவர்க்கு இந்நூல் நன்கு பயன்படும். ஞான முறையிற் சென்றவர்க்கு இத்துணை விரிவான சடங்குகள் வேண்டப்படாமையால், இவற்றுட் சில சுருக்கியுஞ் செய்யப் படலாமென்பது இதன் ஆசிரியரால் இடையிடையே காட்டப்பட்டிருக்கின்றது. இந்நூலின் இடையிடையே வந்த சில வடசொற்களும் அடுத்த பதிப்பிற் களையப்படுமென்று நம்புகின்றேன்."

இந்நூல் சென்னை இம்பீரியல் அச்சகத்தில் அச்சிடப் பெற்றது. இதன் விலை அணா 6.

கல்விக் கழகத்தோடு மறைமலையடிகள் திருப்பெயர் இணைக்கப் பெற்றிருப்பதால் அடிகளார்க்கு இக் கழகத்தில் பணப் பொறுப்பு இருக்குமோ என்ற பேச்சு உலாவத் தொடங்கிற்று. எனவே, திரு இளவழகனார் 7-7-32இற் 'பறங்கிமலை மறைமலையடிகள் கல்விக் கழக வளர்ச்சி' என எழுதியனுப்பிய அறிக்கை வருமாறு:

"தமிழ்நாட்டுக்கு ஓர் அறிவுஞாயிறாய் ஒளிவிட்டு இலங்கும் ஆசிரியர் மறைமலையடிகள்பால் அடியேன் கல்வி பயின்ற நன்றியைத் தெரிவிக்கும் பொருட்டாகவும், அடிகள் நம் தமிழ்நாட்டுக்குச் செய்துள்ள அரும்பெரு நன்மைகளை அனைவரும் என்றும் நினைவுகூர்தற்பொருட்டாகவும் உலகமெங்குங் கலைவல்ல அறிஞர்கட்கு அரும்பெருஞ் சிறப்புகள் பல அடையாளமுகத்தாற் காணப்படுதல்போல் நமதினிய தமிழ்நாட்டிலும் அங்ஙனமொரு சிறப்புக் காணப்படாத குறையை நிரப்பும் பொருட்டாகவும் இக் கல்விக் கழகம் அடிகள் இசைவின்மேல் அடிகள் திருப்பெயரை ஏற்று "மறைமலையடிகள் கல்விக் கழகம்" என்னும் பெயரால் சென்னையை அடுத்த பறங்கிமலையில் 1930இல் அடியேனால் துவக்கப்பெற்றது. இது துவங்கப்பெற்று இரண்டாண்டுகள் ஆகின்றன. இக் கழகம் நம் தமிழர் மொழிக்கும், சமயத்துக்கும், நாகரிக வாழ்க்கைக்கும், அடிகள் நோக்கங்களைப் பின்பற்றி உறுதொண்டு செய்யும் உறுதியுடையது.

இதுகாறும் இக்கல்விக் கழகத்திலிருந்து 'இராமலிங்க அடிகள் வரலாறும் திருவருட்பா ஆராய்ச்சியும்' என்னும் ஒரு நூலும் "திருமண நிகழ்ச்சி விளக்கம்" என்னும் ஒரு நூலும் வெளி வந்திருக்கின்றன. தமிழகத்துப் புலவர் பெருமக்கள் திருவுருவப் படங்கள் பல பெருக்கி யெழுதி வைக்கப்பட்டிருக்கின்றன. இத்திங்களிற்

கழகத்துக்கென ஓர் அச்சுக் கூடமும் (Printing Press) அமைக்கப் பட்டிருக்கின்றது. வரும் கார்த்திகைத் திங்களில் "முல்லைக் கொடி" எனப் பெயரிட்டு இருகிழமைக் கொருகால் வெளிவரும் (Fortnightly Paper) தனித்தமிழ் இதழுந் தொடங்கப்படும். இவ் விதழ் வெளிவந்தபின் கழகத்தைப் பற்றிய விளக்கமான அறிக்கை வெளிவரும்.

"அன்பின் காரணமாக அடிகள் பெயர் மட்டும் ஏற்று நடை பெறுதலன்றி வேறன்மையின் இக் கழகத்தின் பணப் பொறுப்பு முழுமையும் (Finance) இக் கழகத்துக்கே உரியது. இப் பணப் பொறுப்பு அடிகளுக்காவது அடிகளைச் சார்ந்தார்க்காவது ஏதுந் தொடர்பில்லை. திருவருளால் அடிகள் திருப்பெயர் இக் கழகத் தோடு பொருந்தி நீடு விளங்குக!

"இக் கழகத்தின் இத் தமிழ்த் தொண்டுகளுக்கு அன்பர்கள் மனமுவந்து உதவும் நன்கொடைகள் அன்புடன் வரவேற்கப்படு கின்றன. திருவருளால் அன்பர்கள் முன் வருவார்களாக! நலம்"

இதனை அடுத்து 8-7-1932இல் திரு இளவழகனார் எழுதிய கடிதம் வருமாறு :

"வணக்கம். லோகோபகாரிக்கு அனுப்பிவிட்டேன். அடுத்த இதழில் வெளியிடுவதாகத் தெரிவித்திருக்கின்றார். அதற்கு இத்துடன் படி எடுத்து வைத்திருக்கின்றேன். சிறிதே வேறுபாடு உள்ளது. கழகம் தொடங்கி இரண்டாண்டுகளே ஆகின்றன. அருள் அடிகள் ஞானசாகரத்திற் கீழ்க்குறிப்பெழுதும்போது அடிமையின் எண்ணங்கள் நிறைவேறுதற்கான நல்லெண்ணம் அன்பர்கள் கொள்ளுமாறு சில வரிகள் தக்கவாறு எழுதியருளுமாறு பெரிதும் வேண்டுகினறேன்—நலம்."

1933இல் கல்விக் கழகத்துக்கு மிதித்தியக்கும் அச்சுப் பொறி (Treadle) ஒன்று வாங்கி ஓர் அச்சகம் நிறுவப்பெற்றது. கழகவழிப் பிறைத்திங்கள் இதழ் ஒன்றை வெளியிட விரும்பினர். அதற்கு என்ன பெயர் வைக்கலாம் என்று கருதியபோது கவி சுப்பிரமணிய பாரதியார் வாக்கிலெழுந்த

"அன்று பாரி முல்லைக் கொடிக்குத் தேரை ஈந்தார், இதோ, முல்லைக்கொடி! தமிழரீர், தமிழ்த் திருமொழியின் தனிப் பெருநலனெலாம் இப் பைங்கொடியின் இன்பத் தழைப்பிலே யுள்ளது" என்னும் பொன்மொழி நினைவுக்கு வரவே 'முல்லைக் கொடி' என்ற பெயரையே சூட்டி மகிழ்வாராயினர். அதன் முதல் இதழ் (கிளை க. தளிர் க) 13-4-1933 இல் வெளியிடப் பெற்றது. அதன் ஆண்டுக் கையொப்பம் ரூ. 2-50 ஆகும்.

முதல் இரண்டு இதழ்களில் மறைத்திரு மறைமலை யடிகளார் எழுதிய 'அம்மையப்பராம் அருள்வாவி', 'அருளும்

பொருளும்' என்னும் இரண்டு கட்டுரைகளில் ஒவ்வொன்றும் இதழுக்கு ஒவ்வொரு பக்கமாக இரண்டு பக்கங்களே அமைந்து முடிவு பெருமல் காணப்பெறுகின்றன. ஒவ்வோரிதழிலும் கட்டுரைகள் 1. செந்தமிழ்ப் பூங்கா, 2. மொழிக் கல்வி, 3. சமயக் கல்வி, 4. தொழிற் கல்வி, 5. நாட்டியல் வரலாறுகள், 6. வாழ்க்கைமுறைக் கல்வி, 7 இயல்பொருட் கல்வி, 8. தமிழ்ப் பயிற்சிகள், 9 உவப்பு நகைப்புகள், 10. நிகழ்ச்சிகள் என்ற தலைப்புகளால் ஒவ்வொரு பக்க அளவிலே 10 கட்டுரைகளும், 2 பக்க அளவில் இதழ் ஆசிரியர் தலைப்புரையும் வருதல்வேண்டும் என்ற திட்டம் கடைப்பிடிக்கப்பெற்றுள்ளது. இதன் 16ஆவது இதழ் 30-11-1933 இல் வெளிவந்துள்ளது. மறைமலையடிகள் நூலகத்திலே முதல் 16 இதழ்களில் 8, 11, 12, 13, 14 ஆகிய 5 இதழ்கள் இல்லை. 16 இதழ்களுக்கு மேல் எத்தனை இதழ்கள் வெளிவந்துள்ளன என்பதும் அறியக்கூடவில்லை.

மறைமலையடிகளார் முல்லைக் கொடிக்கு எழுதிய இரண்டு கட்டுரைகளும் முடிவு பெறவில்லை. அவர்கள் அவற்றை எழுதி முடித்தபின் பகுதி பகுதியாக அனுப்பிவைத்திருக்கமாட்டார்கள். ஏனெனில், அடிகள் எப்போதுமே கட்டுரைகளையோ நூல்களையோ முழுதும் எழுதி முடித்தபின் அச்சுக்கோப்பதற்குக் கொடுப்பதில்லை. ஒரே காலத்தில் நாலைந்து நூல்கள் அரைகுறையாகவே எழுதப்பட்டுத் தம் ஞானசாகரம் என்னும் அறிவுக் கடல் இதழில் வெளிவந்து கொண்டிருக்கும். பின்னர் அவை இடையிடையே தொடர்ந்து எழுதப்பெறும். ஆனால், அவ்வந் நூல் கட்குரிய நடையிலும் பொருட்டொடர்பிலும் யாதொரு மாற்றமும் காணப்பெறு து. இஃது அடிகளாருடைய தனிப்பேரறிவாற்றல் களைக் குறிப்பதாகும். அதனாற்றான் முல்லைக்கொடிக்கெழுதிய இரண்டு கட்டுரைகளும் முற்றுப்பெருமல் நின்றுவிட்டனவெனக் கருத வேண்டியதாகிறது. முடிவு பெற்றிருப்பின் அவர்கள் எழுதிவைத்திருந்த கையெழுத்துப் படிகளுடன் அவ்விரண்டும் இருந்திருக்கும். அங்ஙனம் அவை காணப்பெறவில்லை. அடிகளார் 1920க்குப் பின் பிறமொழிச் சொற்களைக் கலந்து எழுதிய கட்டுரைகளையும் நூல்களையுந் திரும்ப அச்சிடுகையில் அவற்றிலுள்ள வடசொற்களை அறவே நீக்கித் தூய தமிழ்ச் சொற்களைப் பெய்து அச்சிடுவாராயினர்.

அடிகளார் முல்லைக்கொடி ஒவ்வொரு தளிருக்கும் எழுதிவரும் கட்டுரைகள் இரண்டுக்கும் ரூபா இருபத்தைந்து கைமாறு கொடுத்துவருவதாகத் திரு இளவழகனர் 31-3-1933 இல் அடிகளாருக்கு எழுதிய கடிதத்திற் காணப்பெறுவது :

"அடியேன் நடத்தும் 'முல்லைக் கொடி' என்னும் தாளுக்கு அடிகள் திங்கடோறும் அருள் கூர்ந்து எழுதித்தரும் இரண்டு அல்லது மூன்று கட்டுரைகட்கு அவை எழுதும் உழைப்பிற்காக அடியேன் திங்கடோறும் ரூபா இருபத்தைந்து கொடுத்தாலும் அக் கட்டுரைகளின் பதிப்புரிமை முற்றும் அடிகளுடையதாகும்."

முல்லைக் கொடியினைத் தொடர்ந்து நடத்த முடியாத நிலையில் அதற்குத் துணையாசிரியராக விருந்த தமிழறிஞர் திரு கு. ஞானசம்பந்தம் அவர்களை வேலையினின்றும் நிறுத்தி வைக்கப் பெற்றமை அவருக்கு 7-9-34 இல் திரு இளவழகனார் வழங்கிய சான்றிதழினால் தெரியவருகிறது.

"திருவாளர் கு. ஞானசம்பந்தம் என்பவர் மறைமலையடிகள் கல்விக் கழகம் என்னும் இக் கழகத்திலிருந்து வெளிவரும் பிறை வெளியீடாகிய 'முல்லைக்கொடி' என்னுஞ் செந்தமிழ்தழுக்கு ஒன்பது திங்கள் துணையாசிரியராக விருந்து அலுவல் பார்த்திருக்கின்றார். பொருள்நிலை மேலும் இடந்தாராமையால் அவர் அவ்வலுவலிலிருந்து நீங்க நேரிட்டது.

பின்னர், திரு கு. ஞானசம்பந்தம் நம் கழகப் பதிப்புத் துறையில் ஓராண்டு காலம் பணிபுரிந்து வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

முல்லைக் கொடியை நிறுத்தியபின் சென்னையில் தமிழ் வகுப்புகளும், சைவசமய விரிவுரைகளும், சீவகாருணியச் சொற்பொழிவுகளும் ஆற்றிவந்தனர். சென்னைப் புலால் மறுத்தல் சங்கத்திற்கு 'ஏன் புலால் மறுத்தல் வேண்டும்?' என்ற நூலையும், தென்னிந்திய சீவரட்சக சபைக்கு 'மகா வீரர் வரலாறு', 'சீவகாருணியப் பாடல் திரட்டு' ஆகிய இரண்டு நூல்களையும் எழுதிக் கொடுத்தனர்.

1935 இறுதியில் அவர் பறங்கிமலையிலிருந்த கல்விக் கழக அச்சகத்தை வாலாஜாபாத்துக்கு எடுத்துச் சென்று அங்கே வைத்து நடத்திவந்தார். அங்கேயுள்ள பள்ளி ஆசிரியர்களுக்குச் சைவசித்தாந்த வகுப்புகள் நடத்தினர்.

பின்னர்க் கல்விக் கழகத்தோடு இணைந்திருக்கும் தமது பெயரை நீக்கிவிடுமாறு மறைமலையடிகளார் விரும்பியபடி நீக்கி விட்டதாகத் திரு இளவழகனார் 16-7-35 இல் எழுதிய கடிதம் வருமாறு:

"அடிகள் கட்டளைப்படியே அடியேன் இங்கு வைத்து நடத்துங் கல்விக் கழகத்தின் பெயரிலிருந்து தேவரீர் பெயரை இன்று மாற்றிவிட்டேன். இனி, இக் கல்விக் கழகம் 'இளங்கோவடிகள் கல்விக் கழகம்" என்று பெயர் வழங்குதற்குத் திருவருட்

கட்டளை கிடைத்திருக்கிறது. செய்தி அடுத்துவரும் புதினங்களில் வெளிவரவும், பிறவும் வரைவில் ஏற்பாடு செய்கின்றேன்.

பெரும் புலமைமிக்க திரு இளவழகனார் 1930இல் கழகப் புலமைப் பணியினின்றும் விலகிப் பதிப்பகமும் அச்சகமும் நிறுவியதும், 'முல்லைக்கொடி' என்னும் பிறைத் திங்கள் இதழை வெளியிட்டதும் பொருள் இடம் காலங் கருதாது மேற்கொண்ட செயலாகும் என்பதை 1920 முதல் 1930 வரை பத்து ஆண்டு காலமாகப் பதிப்புத் துறையிற் கழகவழி யான் மெய்யாகவே அறிந்த பட்டறிவினைக் கொண்டு இங்கே விளக்குவது தவறாகாது.

கழகம் பங்கு ஒன்றுக்கு ரூ. 10 விழுக்காடு 5,000 பங்குகட்கு ரூ. 50,000 மூலத் தொகை ஏற்படுத்தி 1920 செப்டம்பரில் தொடங்கப்பெற்றது. அம் மூலத்தொகை முழுதும் கழக அமைச்சர் என் அருமைத் தமையனார் பிரிவுக்குப்பின் 1945 இலேதான் வரவாயிற்று. தொடக்க காலத்தில் கழகப் பங்குகளின் பேரில் தொகை வரவாக வரவாகச் சமய நூல்களும், பிற்கால இலக்கியங்களும், மூவர் தேவாரம், பரஞ்சோதி திருவிளையாடற் புராண உரை, குமரகுருபரர் பிரபந்தத்திரட்டு உரைவிளக்கம், மெய்கண்ட சாத்திரம் 14இன் மூலம், சிவஞான சித்தியார் சுபக்கம் இருவருரை ஆகியவற்றோடு, தொல்காப்பியம் எழுத்து நச்சினார்க்கினியம், சொல் சேனாவரையம் ஆகிய நூல்களும் அச்சிட்டு வெளியிடப்பெற்றன. ஒவ்வொரு நூலும் விற்பதற்கு 10 ஆண்டுகட்குமேல் 20 ஆண்டுகள் வரை ஆயிற்று. திருநெல்வேலியில் தலைமை நிலையத்தையும் சென்னையில் கிளை நிலையத்தையும் அமைத்துக் கழகம் மிகவும் சிக்கனத்தோடு பதிப்புப் பணியையும் நூல் விற்பனையினையும் நடத்தியது.

கழகந் தொடங்கி 3 ஆண்டுகட்குப் பின்னரே 'செந்தமிழ்ச் செல்வி' என்னுந் திங்கள் இதழை வெளியிட முன் வந்தது. இருபத்தெட்டு ஆண்டுகள் கழித்தே தனக்கென 'அப்பர் அச்சக'த்தை நிறுவியது. கழகம் பதித்து வெளியிட்ட நூல்களோடு பிற பதிப்பாளர் நூல்களையும் வாங்கி விற்று வந்தது. தொடங்கி இரண்டு மூன்று ஆண்டுகள் வரை விற்பனை ரூ. 15,000 க்கு மேலில்லை. ஆண்டொன்றுக்குப் பின்னர் 15 ஆண்டுகள் வரை ரூ. 20,000 முதல் ரூ. 40,000 வரை படிப்படியே விற்பனை உயர்ந்து வரலாயிற்று. 1940 முடியக் கழகம் 281 நூல்களையே அச்சிட்டு வெளியிட்டது. பள்ளிப் பாடப் புத்தக நூல்களை 1928 முதல் ஒவ்வொன்றாக வெளியிட்டமையினாலேதான் புத்தக விற்பனை கூடுதலாயிற்று.

1928இல் முதற்பால பாடமும், 1929இல் இரண்டாவது பாடநூலும், 1932இல் மூன்றுவது பாடநூலும் வெளியிட்டது. அவை சில மாவட்டக் கழகப் பள்ளிகளிலும் சில நகராட்சிப் பள்ளிகளிலும் பாடமாக வைக்கப்பெற்றன. உயர்நிலைப் பள்ளி கட்கும், கல்லூரிகட்கும் பாடமாக வைப்பதற்கேற்ற துணைப்பாட நூல்கள் சிலவற்றைக் கழகம் வெளியிட்டது. பள்ளி இறுதித் தேர்வு. சி பிரிவுக்கு ஒரு சில ஆண்டுகளில் கழக நூல்கள் பாடமாக வைக்கப்பெற்றன. கல்லூரி இடைநிலைக் கலைத் தேர்வுக்கும் முதுநிலைக் கலைத்தேர்வுக்கும் நேரிய முயற்சியினுல் ஒருசில ஆண்டுகளில் கழக நூல்கள் பாடமாக வைக்கப் பெற்றன. அங்ஙனம் பள்ளி கல்லூரிகளில் கழக நூல்கள் பாடமாக வைக்கப்பெற்றதன் பின்னரே கழகம் ஆண்டுதோறும் பல துறைகளில் அரிய பல நூல்களைத் தொடர்ந்து வெளியிட்டு வரலாயிற்று.

கழகந் தொடங்கி இரண்டாண்டுகள் வரை புத்தக விற்பனை யினுல் போதிய ஆதாயம் இன்மையால் பங்குகட்கு ஆதாயம் (Dividend) ஒன்றும் கொடுக்கவில்லை. ஒன்றிரண்டு ஆண்டுகள் புத்தக இருப்புக்குரிய அடக்க விலையினைச் சிறிது உயர்த்தி வைத்துப் பங்குகட்கு $2\frac{1}{2}\%$, $3\%$ விழுக்காடு ஆதாயம் கொடுக்க வேண்டியதாயிற்று. 1940 வரை 100க்கு 5 விழுக்காட்டுக்கு மேல் ஆதாயம் கொடுக்கவில்லை. 1941 முதல் கழக அமைப்புக் குறிப்பிற் (Memorandum of Association) கண்டபடி கூடுத லான உயர்நிலை ஆதாயம் $6\%$ ஆண்டுதோறும் கொடுத்து வரப்பெறுகின்றது. அதற்குமேல் கூடுதலான ஆதாயம் பெறப் பங்காளிகட்கு உரிமையில்லை.

பதிப்புத்துறையில் கழகப் பணியினை ஆற்றியதாற் பெற்ற பட்டறிவினைக் கொண்டே திரு இளவழகனுரவர்கள் தொடங்கிய கல்விக் கழகப் பணி தட்டுத் தடையின்றி நீளவும் நடை பெறுவது இயலுவதன்று என யான் கண்டறிந்தது.

பதிப்புத் துறையிற் புதிதாகப் புகுவார்க்கு மேலே கூறிய குறிப்புகள் சிறந்த பாடமாக அமையும் என்பதற்காகவே ஈண்டு விளக்கமாகக் கூறியுள்ளேன்.

கழகச் செயற்குழுத் தலைவராயிருக்கும் பாகனேரி திருவாளர் மு. காசிவிசுவநாதன் செட்டியாரவர்கள் தமதூரி லுள்ள தனவைசிய இளைஞர் தமிழ்ச் சங்கத்தில் அமைந் திருக்கும் திருவள்ளுவர் நூல் நிலையத்திற்கு ஏராளமான நூல்களை வாங்கி வழங்கியுள்ளனர். மேலும் அதற்கு

நூல்களை வழங்கும் பொருட்டே சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகவழித் தமது பொருளுதவியால் சங்க இலக்கியங்களையும் பிற்கால சமய இலக்கியங்களையும் பாகனேரி த. வை. இ. தமிழ்ச் சங்க வெளியீடுகளாக அச்சிட விரும்பினார்கள். அதன்படி நச்சினார்க்கினியர் உரையுடன் கூடிய கலித்தொகையினை அச்சிடத் தீர்மானிக்கலாயிற்று. அதற்குத் திரு இளவழகனார் உரை விளக்கமும், கலித்தொகை மாட்சி என்ற ஆராய்ச்சியுரையும் எழுதித் தந்தனர். அவை அறிஞர் பெருமக்களால் பெரிதும் போற்றப்பெறுகின்றன. 1938 ஆகஸ்ட்டுத் திங்களில் கலித்தொகை உரையும் விளக்கமும் அழகிய கட்டடஞ் செய்யப்பெற்று வெளிவந்தது. பாகனேரியிலுள்ள திருவள்ளுவர் நூல் நிலையம் அண்மையில் இராமநாதபுர மாவட்ட நூலக ஆணைக் குழுவினரிடம் ஒப்படைக்கப்பெற்ற செய்தி மகிழ்தற்குரியது.

அதே ஆண்டு பிப்பிரவரித் திங்களில் திரு இளவழகனார் தொல்காப்பியம் பொருளதிகாரம் அகத்திணையியலுக்கு விளக்கம் எழுதினார்கள். அதனைச் சேலம் திரு. ஆ. மாணிக்கம் தமது தமிழ்நெறி விளக்கப் பதிப்பக வெளியீடாக அச்சிட்டனர். அதற்குப் பேராசிரியர் கா. சுப்பிரமணிய பிள்ளையவர்கள் ஆராய்ச்சிமிக்க அணிந்துரை நல்கினர். இந்நூல் கல்விக் கழகத்தின் அச்சகத்திலேயே 14 × 9 செ. மீ. அளவில் அச்சிடப் பெற்ற கையடக்கமான பதிப்பாகும். அதைப்போல மற்றும் எட்டு இயல்களுக்கும் விளக்கம் எழுதுவதான திட்டமுள்ளது. ஆனால், அது நிறைவேறவில்லை.

இளவழகனார் 1935 ஆகஸ்ட்டு திங்களில் பத்துப்பாட்டில் ஒன்றாகிய முல்லைப் பாட்டுக்கு உள்ளுறையும் ஆராய்ச்சி அகராதியும் எழுதி 12 × 9 செ. மீ. அளவில் தமது கல்விக் கழக அச்சகத்திலேயே அச்சிட்டு வெளியிட்டனர். அதற்குரிய செலவு முழுவதையும் கூட்டுறவுத் துணைப் பதிவாளராகவிருந்த தமிழ்ப் பெருமகனார் செ. தெ. நாயகம் அவர்கள் ஏற்றுக்கொண்ட செய்தி கழிபேருவகை தருகின்றது. அதற்குப் பேராசிரியர் ச. வையாபுரிப் பிள்ளை அவர்கள் அணிந்துரை வரைந்துள்ளனர்.

'இதனைத் தொகுத்தமைத்த ஆசிரியர் தமது முன்னுரையில் கூறிய அடியிற்கண்ட பகுதி' அறிஞர்கள் தம் மனத்தகத்தே கொண்டு அவ்வழியைக் கடைப் பிடிக்கத் தூண்டுவதாகும்.

*"தங்கி மிகாமை வைத்தான் தமிழ்ச் சாத்திரம்" என்னும் திருமூலர் திருமந்திரத்துக் கேற்ப நமக்குக் கிடைத்துள்ள நல்ல தமிழ்*

நூல்கள் சிலவே யாகும். அவைகளுள்ளும் தொல்காப்பியம், பத்துப் பாட்டு, புறநானூறு, கலித்தொகை, திருக்குறள் போன்ற சில நூல்கட்கேனும் சொல்விடாத அகராதிகள் பழைய உரைக் குறிப்புகளுடன் உருவாக்கிக் கொள்ளுதல் முதன்மையாயிருக்கின்றது. இன்ன சொல் இன்ன காலத்துச் சொல்; இன்ன பொருளில் இன்ன நூலில் வழங்கியிருக்கின்றது' என்று எளிதாகத் தெரிந்து கொள்வதற்கு இவை உதவியாயிருக்கும். ஒரு சிறிய எளிய சொல்லும் விடாமல் எல்லாம் தொகுக்கப் பெறுதல் வேண்டும். இந்த அகராதியில் ஒரு சொல் காணப்படவில்லையென்றால் அச்சொல் அந்த நூலிலும் இல்லையென்று திட்டமாகத் துணிதற்கு இடமிருத்தல் வேண்டும். அப்போதுதான் ஆராய்ச்சி தங்கு தடையில்லாமல் திருகிச் செல்லும். அறிஞர்கட்கும் வீண் காலப்போக்கிராது.

"இனி இங்ஙனமே பொருட் குறிப்புக்கள், இலக்கணக் குறிப்புகள், கலைக் குறிப்புகள், சொற்பொருட் காரண குறிப்புகள் முதலியவற்றின்மேலும் இயன்ற ரையில் விடாமல் அகராதிகள் அமைவது ஆராய்ச்சிக்கு மிகு உதவியாயிருக்கும்"

1937இல் மீண்டும் கழகத்திலமர்ந்து புலமைத் தொண்டாற்றும்படி எழுதி வேண்டினேன். அதற்கு அவர்கள் வாலாஜாபாத்திலிருந்து 5—9 1937இல் அடியிற் கண்டபடி மறுமொழிக் கடிதம் விடுத்தனர்.

"தங்கள் கழகத்துத் திங்கள் இதழ் செந்தமிழ்ச் செல்விக்கு நான் இதழாசிரியர் பொறுப்பேற்றுத் தொண்டு புரிய விருப்பமே. கட்டுரைகள் வருவித்தல், ஒழுங்கு செய்தல், கடைசியாக ஒருமுறை அச்சுப்படி பார்த்தல் முதலான பதிப்பலுவல்களெல்லாம் நான் தற்காலம் இருக்கும் இவ்விடத்திலேயே வைத்துக் கொள்கின்றேன், நானுஞ் சில கட்டுரைகள் எழுதுகிறேன். இதழின் மொத்தப் பொறுப்பும் நான் ஏற்றுச் செய்ய வேண்டியிருத்தலின் தாங்கள் அதற்கானதொரு திங்கள் வருவாய் எனக்கு இடஞ் செய்து அதனைத் திங்கடோறும் அனுப்பிவரின் நன்று"

இத் திட்டத்தைக் கழகச் செயற் குழுவினர் ஏற்றுக் கொள்ளவில்லை.

திரு இளவழகனார் 1940இல் மீண்டும் கழகப் புலவராக அமர்த்தப் பெற்று 1945 வரை கழகத்தின் பதிப்புத்துறையிலே சிறந்த தமிழ்த் தொண்டு புரிந்தனர்.

தொல்காப்பிய மூலத்துக்குச் சொற் குறிப்பு விளக்கமும் நுண் பொருட் குறிப்பும் எழுதியது தொல்காப்பியம் பயில்வார்க்குப் பெரிதும் பயன்படுகின்றது. நாலடியார்க்கு நல்லுரை எழுதியுள்ளனர். பள்ளித் துணைப்பாட நூலாக அமையும் வகையில் 'சொல்லரசர்' என்ற நூலை இனிய எளிய செந்தமிழ் நடையில் எழுதித் தந்தனர்.

ஔவைப் பிராட்டியார் அருளிய ஆத்திச்சூடி, கொன்றை வேந்தன் முதலிய நீதி நூல்களிலுள்ள அறப் பண்புகளை எடுத்துக் கட்டுரை வடிவில் இளமாணவர்கள் உள்ளங் கவரும் வகையில் எளிய இனிய தமிழில் 'ஔவையார் சொல்லமுதம்' என்ற நூலும், அங்ஙனமே அதிவீரராம பாண்டியர் அருளிய வெற்றி வேற்கைக்கு எழுதிய 'அதிவீரராமர் அறநெறி' என்ற நூலும், சிவப்பிரகாச முனிவர் அருளிய 'நன்னெறி'க்கு எழுதிய 'சிவப்பிரகாசர் செந்நெறி' என்ற நூலும் மாணவர்க்கு மட்டுமே யன்றி அந்நீதி நூல்களை இளமையில் கற்ற முதியோர்க்கும் சுவைமிக்க விருந்தளிப்பன வாகும்.

சங்க இலக்கியங்களிலுள்ள அரிய கருத்துக்களை யெல்லாந் திரட்டிச் சீரிய தலைப்புகளில் உயரிய ஆற்றொழுக்கான செந்தமிழ் நடையில் சங்கநூற் கட்டுரைகள்' என்னுந் தலைப்பில் இரண்டு புத்தகங்களை எழுதினர். அவற்றில் முதற் புத்தகம் கல்லூரி இடைநிலைகலைத் தேர்வுக்குப் பாடமாக அமைக்க பெற்றது.

சங்க இலக்கியங்களிலிருந்து மக்கள் நல்வாழ்க்கைக்கு வேண்டிய அரிய கருத்துக்கள் அடங்கிய பாக்களைத் தொகுத்துச் 'சங்க இலக்கிய இன்கவித் திரட்டு' என்ற தலைப்பில் மூன்று பகுதி களாக அமைத்துப் புதுமுறையில் அறிஞர்கள் போற்றும் வகையில் விளக்கம் எழுதியுள்ளனர். இம் மூன்று பகுதி களும் கோவைப் பெருமகனார் சர். ஆர். கே. சண்முகஞ் செட்டியா ரவர்கள் உள்ளத்தைப் பெரிதுங் கவர்ந்தன. ஒருமுறை நுங்கம் பாக்கத்திலுள்ள தமது மாளிகைக்குத் தமியேனையும் திரு இளவழகனாரையும் வருமாறு அழைத்துச் சங்க இலக்கிய இன்கவித் திரட்டு மூன்று பகுதிகள் ஆங்கில நூல்களைப் போல் தமிழ் மக்கட்கு நன்கு பயன்படும் வகையில் அமைந்திருக் கின்றன என்றும், இத்தகைய நூல்கள்தாம் தமிழ்வளர்ச்சிக்கு ஆக்கந் தரும் என்றும் பாராட்டி யுரைத்து ஊக்கமூட்டினர். 1955இல் திரு இளவழகனார் கோவைக்குச் சென்றிருந்தபோது தமது இல்லத்திலே விருந்தளித்துக் கோவைத் தமிழ்ச் சங்கச் சார்பில் 'சங்கநூற் பெரும் புலவர்' என்ற பட்டம் அளித்து வெண் பொற்காசு நூறும் வழங்கினர் என்பது தமிழ் மக்கள் என்றென்றும் பெருமைப்படுதற்குரிய தொன்றாகும்.

இம் மூன்று திரட்டு நூல்களையும் மாவட்டக் கல்வி அதிகாரியாக விருந்து ஓய்வு பெற்ற திரு இர. பாலகிருட்டிண முதலியார் பி.ஏ. எல்டி.) அவர்கள் 'The Golden Anthology of Ancient Tamil Literature' என்னுந் தலைப்பில் ஆங்கிலத்தில்

மொழிபெயர்த்துத் தர 1959 இல் முதல் இரண்டு புத்தகங்களும், 1960இல் மூன்றுவது புத்தகமும் கழகவழி அச்சிட்டு வெளியிடப் பெற்றன. அவற்றிற்குத் தமிழ்ப் பேராசிரியர் டாக்டர் அ. சிதம்பர நாதன் செட்டியார், எம்.ஏ., பி.எச்டி. முகவுரை வழங்கி யுள்ள னர்.

இரண்டாவது முறை 1940 முதல் 1945 வரை கழகப் புலவராக அமர்ந்திருந்த போது விடுமுறை நாள்களிலும் இரவு நேரங்களிலும் சமய விரிவுரைகள், திருக்குறள் வகுப்புகள், சித்தாந்த சாத்திர வகுப்புகள் முதலியன நடத்திப் புகழ் பெற்று வந்தனர். மார்கழித் திங்களில் காலை நேரத்தில் திருவெம் பாவைச் சொற்பொழிவுகள் ஆற்றுவர். பெருந்திரளான மக்கள் அவற்றை முறையாகக் கேட்டுத் திரு இளவழகனார்பால் மிக்க அன்பும் மதிப்பும் வைக்கலாயினர்.

சென்னைச் சிவனடியார் திருக்கூட்டச் சார்பில் சிவஞான போத விரிவுரை தொடர்ந்து நடைபெற்றது. அதனை ஆற்றிய திரு இளவழகனார்க்குச் 'சிவநெறிச் செஞ்சொற் கொண்டல்' என்ற பட்டமும் ரூபா ஆயிரமும் அளிக்கப்பெற்றன. அதே போல் திருமந்திர விரிவுரையும் கிழமைதோறும் முறையாக நடைபெற்றது. அதற்காகப் பெரும்பொருள் பரிசாக வழங்கப் பெற்றது.

சூளை சமரச சன்மார்க்கசங்கச் சார்பில் 'அருட்பெருஞ் சோதி அகவல்' விரிவுரை நடைபெற்றது. அதன் பொருட்டு அறச்செல்வி திருவாட்டி பதுமாவதி அம்மையாரால் ரூபா ஆயிரம் வழங்கப் பெற்றது.

1945 ஆம் ஆண்டு முதல் சென்னைச் சிவனடியார் திருக் கூட்டச் சார்பில் அதன் செயலர் தொண்டர்சீர் பரவுவார் திரு ம. ரா. சம்பந்தம் அவர்கள் விருப்பப்படி திரு இளவழகனார் முயற்சியினால் திருக்கழுக்குன்றத்தில் 'திருமுறைப் பெருவிழா' தொடங்கப் பெற்று ஆனிமகந்தோறும் இன்றுகாறும் மிகவுஞ் சிறப்பாக நடைபெற்று வருகிறது.

1950 முதல் 1957 வரை ஆண்டுதோறும் தமிழகம் முழுவது முள்ள பாடல்பெற்ற திருக்கோயில்கட்குப் பகுதி பகுதியாக நூற்றுக்கணக்கான அன்பர்களுடன் சென்று வழிபட்டதோடு 1958இல் வடநாட்டுத் திருக்கோயில்கட்குஞ் சென்று வழி பட்டார்.

கழகப் பணியினின்றும் விலகியபின் இவர்கள் சென்னை இறைபணி மன்றச் சார்பில் பெரியபுராண விரிவுரையும்,

சிவனடியார் திருக்கூட்டச் சார்பில் சிவஞான சித்தியார் விரிவுரையும் ஆற்றிச் சென்னையிலுள்ள சைவ நன்மக்கள் உள்ளங்களைப் பெரிதுங் கவர்ந்தனர்.

1959இல் மதுராந்தகம் மாம்பாக்கத்தில் குருகுலமும் திருக்குறள் பீடமும் அமைத்துப் போற்றி வருகின்றனர். பின்னர் அங்கே உயர்நிலைப்பள்ளி யொன்றும் பிறவும் தொடங்கி நடத்தி வருகின்றனர்.

1960 இறுதி நாளில் குருசாமி முதலியார் உயர்நிலைப் பள்ளியில் மெய்கண்ட நூல்கள் பதினான்கையும் பற்றித் தொடர்பாக 14 நாள்கள் அவர் விரிவுரை யாற்றியதை யொட்டி, மெய்யுணர்வு விழா மிகவுஞ் சிறப்பாக நடைபெற்றது. அன்று 'அழகரடிகள்' என்ற தீக்கைத் திருப்பெயர் பெற்றார். இங்கே ஒன்றை யான் குறிப்பிடுவது முதன்மையாகும்.

1944இல் கழகத்தை நிறுவிய என் அருமைத் தமையனார் திருவாளர் திருவரங்கனார் இறையடி சேர்ந்தமையினாலும் அடுத்த ஆண்டில் என் அருமை அண்ணியார் தனித் தமிழ்த் திருவாட்டி நீலாம்பிகையார் இறையடி சேர்ந்தமையாலும் 'கழக வெள்ளிவிழா' நடைபெற வாய்ப்பில்லாது போயிற்று.

1956 இல் முப்பத்தாறு தத்துவங்களைக் குறிப்பதாகவுள்ள 'கழக மெய்யுணர்வு விழா'வை நடத்தத் தீர்மானித்து அறிக்கை அச்சிட்டு அனுப்பியபின் மறைமலையடிகள் எழுதிய விருப்ப ஆவண வழக்கு உயர்நீதி மன்றத்தில் நடைபெற்றமையால் எண்ணியபடி மெய்யுணர்வு விழாவும் நடைபெற வாய்ப்பில்லாது போயிற்று. அதனால் 1960இல் திரு இளவழகனாரவர்கள் நடத்திய 'மெய்யுணர்வு விழா' எனக்குப் பெரியதோர் இன்பம் அளித்தது என்பது ஈண்டுக் குறிப்பிட வேண்டியதாயிற்று. கழகத்தின் 1008ஆவது வெளியீட்டு விழாவிலே திரு இளவழகனார் சீரிய முறையில் கழகத்திற்கு ஆற்றிய புலமைத் தொண்டைப் பாராட்டி வெள்ளியம்பலவாணர் திருவுருவம் பரிசளிக்கப் பெற்றது.

எனவே, 1961 இல் கழகத்தின் ஆயிரத்தெட்டாவது வெளியீட்டு விழாவையும் 1970இல் கழகப் பொன் விழாவையும் மிகவுஞ் சிறப்பாக நூற்காட்சியுடன் நடத்திக் கழகத்தின் தமிழ்த் தொண்டு சமயத் தொண்டுகளை உலகறியச் செய்யலாயிற்று.

திரு இளவழகனாரவர்கள் கழகப் புலவராக அமர்ந்து எழுதிய நூல்களாலும் செந்தமிழ்ச் செல்வியிலும் முல்லைக்கொடி

யிலும் எழுதிய கட்டுரைகளாலும், ஆங்காங்கே ஆற்றிய சமய விரிவுரைகள், இலக்கிய விரிவுரைகள் ஆகியவற்றாலும் இவர் தம் புகழ் தமிழ் வழங்கும் பகுதிகளிலெல்லாம் நன்கு பரவலாயிற்று.

மேலும் அவர் தெளிவுடைச் சிந்தனையாளர்; நூல்களை ஆராயும்போது நுனித்து நுனித்துச் சென்று உட்பொருள் காணுந் திறலினர்; நினைவாற்றல் மிக்கவர்; கேட்பவர் மனத்தில் பசுமரத்தாணிபோல் பதியும்படி பேசுவர். அவர் பேச்சில் ஆரவாரம் இருக்காது. ஆனால், இனிமையும், தெளிவும், அழுத்தமும் இருக்கும். அவர் கையெழுத்து அச்செழுத்துப்போல் அழகாயிருக்கும். அவர் கையெழுத்துப்படியில் பெரும்பாலும் அடித்தல் திருத்தல்கள் இருக்கமாட்டா. அவர் கையெழுத்துப் படியை அச்சுக் கோப்பவர் மகிழ்வோடு செய்வர். செய்யுள் இயற்றுந்திறன் பெற்றிருப்பினும் அதனை விரும்புவதில்லை.

இனி இவர் உலகப் பொது மறையாந் திருக்குறளுக்குச் செய்த தொண்டினைப் பற்றி அறிந்து மகிழ்வோம்.

சேலம் பண்டிதர் சுகவனம் சிவப்பிரகாசனார் கருணீகர் வகுப்பிற் பிறந்தவர். ஏழு சீரால் ஒன்றேமுக்கால் அடியிலுள்ள தெய்வத் திருக்குறட் பாக்களின் பொருட்பொதிவினை நான்குசீர் கொண்ட ஓரடியிற் புகுத்தடைத்துக் காட்டிய நுண்ணறிவாளர். 133 அதிகாரங்களையும் அவ்வாறே அமைத்துக் ‘குட்டிக் குறள்’ என்னும் பொன்ருப் புகழ்தரு நூலை ஆக்கி வழங்கிய அருந்திறலறிஞராவர். 1925இல் திரு இளவழகனார் குட்டிக் குறள் முதல் நூற்பாவுக்குமட்டும் 60 பக்க அளவில் தனித்தமிழ் விளக்கப் பேருரை வரைந்தனர். திருக்குறள் முதற்பா குட்டிக் குறளில் அமைந்துள்ளதை அடியிற் காண்க.

“அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு”

என்ற முதற் குறளின் கருத்து,

“உலகுக் கெல்லாம் ஒருபொருள் முதலே”

என்ற குட்டிக் குறளில் அமைந்திருப்பது எத்துணை வியப்பையும் நுட்பத்தையும் தருகின்றது. பார்மின்கள்! சேலமாவட்டம் மோகனூர் திரு கி வா. சகந்நாதன் அவர்கள் 1926இல் குட்டிக் குறள் முதல் பத்து அதிகாரங்கட்குமட்டும் சொற்பொருள் விளக்கவுரை எழுதினர்.

1946ஆம் ஆண்டில் குட்டிக் குறள் நூற்பாவும் திரு இளவழகனார் எழுதிய தனித்தமிழ் விளக்கப் பேருரையும் தனி நூலாக வெளிவந்துள்ளது. அதற்கு இலண்டன் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர் எம். எஸ். எச். தாம்சன் ஆங்கிலத்தில் ஓர் அணிந்துரை வழங்கியுள்ளனர்.

1928இல் பேராசிரியர் கா. சுப்பிரமணிய பிள்ளையவர்கள் இயற்றிய 'திருக்குறள் பொழிப்புரை'யினைக் கழகம் பதிப்பிடும் போது கழகப் புலவராக அமர்ந்திருந்த திரு இளவழகனார் அதன் மெய்ப்புகளைக் கருத்தூன்றிச் செவ்வனே திருத்தி உருவாக்கினர்.

1940இல் சென்னையில் ஞாயிறுதோறும் திருவள்ளுவர் தொண்டர் படையினர்க்குத் 'திருக்குறள் வகுப்புகள்' நடத்தினர்.

1954-55 இல் சென்னையில் ஞாயிறுதோறும் 10 நாள்கள் சில பேட்டைகளில் அன்பர் குழாத்தோடு திருக்கோயில் வழிபாடும் திருக்குறட் சொற்பொழிவும் செய்து வந்தனர். அதனைத் தொடங்கி வைத்தவர் மதிப்பிற்குரிய இராஜாஜி அவர்களாவர். 'தமிழகக் கல்வி, நிதி அமைச்சர் மாண்புமிகு சி. சுப்பிரமணியம் அவர்களும், அறிஞர் கல்கி அவர்களும் நிறைவுநாள் விழாவிலே கலந்து பாராட்டுரை பகர்ந்து சிறப்பித்தனர்.

1961-62 இல் நுண்மாண் நுழைபுலமிக்க தமிழ்ப் பேரறிஞர் இராவ்சாகேப் கு. கோதண்டபாணி பிள்ளையவர்கள் தம் முளத்திலெழுந்த புதிய கருத்துக்களைப் பழந்தமிழ்ச் சொல், சொற்றொடர்களால் குறட்பாவாக ஆக்கிய 'ஈரடி இருநூறு' என்னும் நூலுக்குத் திரு இளவழகனார் விளக்கவுரை எழுதியுள்ளனர். அந்நூலுரிமையினை மாம்பாக்கம் குருகுலத்துக்கே இந்நூலாசிரியர் வழங்கியுள்ளார்.

1962இல் அவர் 'திருவள்ளுவமாலை'க்கு எழுதிய விளக்கம் 'தமிழ்மறைச் சிறப்பு' என்னும் நூல் வடிவில் வெளியிடப் பெற்றது.

1964இல் ஞாயிறுதோறும் சிவனடியார் திருக்கூட்டச் சார்பில் சென்னை மல்லீசுரர் கோயில் அநுபூதி மண்டபத்தில் 'திருக்குறள் விரிவுரை' ஆற்றிவந்தனர். தவயோகி சுத்தானந்த பாரதியார் 'திருக்குறள் அடிகள்' எனப் பாராட்டியுரைத்தனர். ஒவ்வொரு கிழமையும் ஓரதிகாரத்துக்கு நிகழ்த்தப்பெறும் விரிவுரை படி எடுக்கப்பெற்று அன்பர்கள் பொருளுதவி கொண்டு 'திருக்குறள் கடிதங்கள்' என்ற தலைப்பில் 32 பக்க அளவில் குருகுலத் திருக்குறள் நிலையத்தாரால் வெளியிடப்பெற்றன. அதன்

விலை 30 காசு. மறைமலையடிகள் நூல் நிலையத்தில் ஒரு சில கடிதங்கள் மட்டுமே உள்ளன. எத்தனை கடிதங்கள் வெளிவந்துள்ளன என்பது அறியக்கூடவில்லை.

திரு இளவழகனார் பொதுவாகப் பண்டைத் தமிழ் இலக்கண இலக்கியங்கள், பன்னிரு திருமுறை, மெய்கண்ட நூல்கள், தாயுமானவர், பட்டினத்தார் திருப்பாடல்கள், இராமலிங்க அடிகள் திருவருட்பா முதலிய நூல்களைத் திருந்தக் கற்ற பெரும் புலமையுடையவராயினும் உலகு புகழ்பெற்ற ஒப்பில் பெருந் தமிழ்மறையாந் திருக்குறளில் தனிப்பெரும் புலமை நிரம்பியவர் எனின் அது மிகையாகாது.

அருளாசிரியர் மறைமலையடிகள் இளமைக் காலத்தில் சங்க இலக்கிய நடைபோல் தீந்தமிழ்ச்சொற்கள் கெழும இயற்றியருளிய 'திருவொற்றிமுருகர் மும்மணிக் கோவை' என்னும் நூலைத் திரு இளவழகனார் தம் ஆசிரியரிடமே பாடங் கேட்டு அவர்கள் உவந்தேற்கத்தக்க வகையில் நல்லுரை வரைந்தது வரலாற்றுச் சிறப்புடைத்து.

மதுராந்தகத்தில் குருகுலம் திருக்குறள் பீடம் அமைத்து அறவழி நின்று அருந்தொண்டாற்றி வரும் முதுபெரும் புலவராந் தவத்திரு அழகரடிகளே 'திருக்குறள் அறம்' பற்றி எழுதுதற்கும் பேசுதற்கும் பெருந்தகுதியுடையவர் எனக் கழகந் தேர்ந்தெடுத்ததும், டாக்டர் மு. வரதராசனர் மனமுவந்து ஒப்புக்கொண்டதும் சாலப் பொருத்தமாகும்.

**டாக்டர் மு. வ. திருக்குறள் பரிசுச் சொற்பொழிவு முதல்விழா**

1970 ஆகஸ்ட்டு 8, 9 ஆம் நாள்களில் சென்னை மாவட்ட நூலக மண்டபத்தில் சிலம்புச்செல்வர் ம. பொ. சிவஞானம் அவர்கள் தலைமையில் தவத்திரு அழகரடிகள் 'திருக்குறள் அறம்' என்னும் நூலை யொட்டிப் பேசினர் முதல் நாள் அறநிலைய ஆணையர் திரு கே. எஸ். நரசிம்மன் ஐ. ஏ. எஸ். அவர்கள் 'திருக்குறள் அறம்' என்ற சொற்பொழிவு நூலை வெளியிட்டுப் பாராட்டினர். இரண்டாம் நாள் சொற்பொழிவு முடிந்ததும் உயர்நீதிமன்ற நடுவர் மதிப்புமிக்க பி. ஆர் கோகுல கிருட்டிணன் அவர்களால் பரிசுத் தொகை (வெண் பொற் காசு 500) தவத்திரு அழகரடிகளுக்கு வழங்கப்பெற்றது.

உலகப் பொதுமறை, நூலின் அமைப்பும் சிறப்பும், அறத்தின் வீறு, நல்லாறு, வகையும் தொகையும், ஏற்கும் முறைகள், எதிரும் இடர்கள், கடக்கும் வழிகள், உதவும் துணைகள், அடையும் பயன்கள், வாழ்க்கை வடிப்புகள், முடிப்புரை ஆகிய பன்னிரண்டு தலைப்புகளில் 'திருக்குறள்

அறம்' 480 பக்க அளவில் இனிய செந்தமிழ் நடையில் அமைந்து அழகொளியும் அறிவொளியும் வீசுகின்றது.

**அழகரடிகளுக்கு ஒரு வேண்டுகோள் :**

தவத்திரு அழகரடிகள் தாம் எழுத எண்ணி அரைகுறையாக விட்டுள்ள நூல்களை எழுதி முடித்தல் வேண்டுமென்பது எனதவா. தொல்காப்பியம் பொருளதிகாரத்தில் அகத்திணையியலுக்கு எழுதிய விளக்கம் போல் மற்ற எட்டு இயல்களுக்கு விளக்கமும், பத்துப்பாட்டில் முல்லைப்பாட்டுக்கு எழுதிய சொற்குறிப்பகராதி போல் எஞ்சிய ஒன்பது பாட்டுகட்குச் சொற்குறிப்பகராதியும் எழுதுதல்.

மெய்கண்ட நூல்கள் பதினான்கில் திருவுந்தியார், திருக்களிற்றுப்படியார் ஆகிய இரண்டிற்கும் கழக வெளியீடாக அச்சிட எழுதிய தெளிவுரை போல் எஞ்சிய பன்னிரு நூல்கட்குந் தெளிவுரை எழுதுதல்.

1942 இல் நெல்லையில் ஐந்து நாள்கள் என் அருமைத் தமையனார் மெய்கண்ட சாத்திர மாநாடு நடத்தியபோது திரு இளவழகனார் கோடிட்ட தனித் தனிக் குறிப்பேடுகளில் மெய்கண்ட சாத்திர நூற்பாக்களைத் திருத்தமாகச் சீர்பிரித்து எழுதியுள்ளார். அவற்றிற்கு விளக்கவுரையோ அல்லது தொல்காப்பியத்துக்கு எழுதியதுபோல் சொற்குறிப்பும் பொருட்குறிப்புமோ எழுதுதல்.

முதுபெரும்புலவர் டாக்டர் சாமிநாதையரவர்கள் தம் வணக்கத்துக்குரிய ஆசிரியர் வரலாறும் தம் வரலாறும் எழுதியதுபோல் அழகரடிகளும் தம் அருளாசிரியர் மறைமலையடிகள் வரலாறும் தம் வரலாறும் இன்றே இன்னே எழுதத் துவங்குதல்.

மேலே குறிப்பிட்டவற்றை யெல்லாம் எழுதி முடிப்பதற்கு அடிகள் தமது குருகுலத்தில் மேற்கொண்டிருக்கும் அறப் பணிகளைத் தக்கவரிடம் ஒப்புவித்தலே நன்றாகும்.

இனி, 'திருக்குறள் பொருள்' பற்றிப் பொருளியற் பேரறிஞர் டாக்டர் பா. நடராசனாரும் 'திருக்குறள் இன்பம்' பற்றி அண்ணாமலைப் பல்கலைகழகத் தமிழ்த் துறைத் தலைவர் டாக்டர் வ. சுப. மாணிக்கனாரும் எழுதவும் பேசவும் ஒப்புதலளித்துள்ளனர்.

அடுத்த இதழில் சித்தாந்த கலாநிதி ஔவை சு. துரைசாமி பிள்ளை அவர்கள் எழுதிய 'தெய்வப்புலவர் திருவள்ளுவர்' என்னும் நூலைப் பற்றிய செய்தி தொடங்கும்.

(தொடரும்)

—வ. சு.

# இறைமையில் இசைந்த வாழ்வு

[திரு. மா. சண்முகசுப்பிரமணியம்]

## வாழ்வும் வளர்கலைகளும்

(முன் இதழ் ௯௯ உஆம் பக்கத் தொடர்ச்சி)

**வாழ்க்கை வளையம் :**

காலை ஒன்பது மணி. மின்சார இரயில் வண்டி சென்னையிலுள்ள "கடற்கரை" இரயில் நிலையத்தில் வந்து நிற்கின்றது. நாம் வண்டியிலிருந்து இறங்குகின்றோம். நம் கையிலே ஒரு பை. அதில் மதிய உணவும் அலுவலகப் பதிவுகளும் உள்ளன. நம்மோடு ஏறத்தாழ நானூறு பேர்கள் இறங்குகின்றனர். அலுவலகத்திற்கு நேரமாகிவிட்டது. வேகமாக நடக்கின்றோம், அலுவலகத்தை நோக்கி. நம்முடன் இறங்கிய நானூறு பேர்களுமே அவ்வாறுதான் விரைந்து செல்லுகின்றனர். இன்னும் பத்து நிமிடங்கள் கழித்து அடுத்த வண்டி வந்து நிற்கின்றது. அதிலிருந்தும் பலர் கூட்டமாக இறங்குகின்றனர், அலுவலகம் நோக்கி விரைகின்றனர். சென்னை மாநகரிலுள்ள எழும்பூர், பூங்கா, கோட்டை போன்ற ஒவ்வோர் இரயில் நிலையத்திலும் சிறிது நேரத்திற்கொரு முறை மின்வண்டி வந்து நிற்கின்றது. சாரை சாரையாக அலுவலகங்களில் வேலை பார்ப்போர் இறங்கிச் செல்லுகின்றனர். மாலை ஐந்து அல்லது ஐந்தரை மணிக்கெல்லாம் திரும்பி வருகின்றது இக்கூட்டம். அவர்கள் முகத்திலே காலையிலிருந்த தெளிவு இப்பொழுது இல்லை. வேலையால் ஏற்பட்ட சோர்வுடன் இரயிலிலே மீண்டும் ஏறி வீடுகளுக்குச் செல்லுகின்றனர்.

இது, நம்போன்ற பெரும்பாலரின் அன்றாட வாழ்க்கையாகும்.

மின்சார வண்டி இணைப்பு இல்லாத பகுதிகளில் வாழ்வோர் பேருந்து வண்டிகளில் செல்லுகின்றோம். தம் வருவாய்க்கும் வசதிக்கும் ஏற்ப ஒரு சிலர் சொந்தக் 'கார்' களிலே அலுவலகம் சென்று திரும்புகின்றனர்.

இவ்வாறு காலையில் அலுவலகம் போவதும் மாலையில் வீடு திரும்புவதும் முறையாக நடைபெறுகின்றன. இருபது அல்லது இருபத்தைந்து வயதில் தொடங்கி ஐம்பத்தைந்து அல்லது அறுபது வயதுவரை இது தவருமல் நடைபெற்று வருகின்றது.

இருபத்தைந்து வயதிலே இவ்வாழ்க்கைப் பயணத்தைத் தொடங்கும்பொழுது நமது சுருண்ட தலைமயிரை வாரிவிட்டுச் சுறுசுறுப்பாக நடந்து சென்றோம். நம் நடையில் ஒரு மிடுக்கும் நம் பார்வையிலே ஒரு செருக்கும் அன்று இருந்தன. பத்தாண்டுகளுக்குள் அந்த மிடுக்கும் செருக்கும் ஓரளவு மறைந்துவிட்டன. இன்னும் சில ஆண்டுகள் சென்றபின் கறுகறுவென்றிருந்த தலைமயிர் நரைத்துவிட்டது நம்மில் சிலருக்கு! இன்னும் பலருக்கு அஃது உதிர்ந்துபோய் தலை வழுக்கையாகி விட்டது! அலுவலகத்திற்கும் வீட்டிற்குமான பயணம் நடந்துகொண்டுதான் இருந்தது. நம் குடும்பம் பெருகியது. குடும்பக் கவலைகளால் நம் முகத்திலே ஒரு சோர்வு, நடையிலே ஒரு தளர்ச்சி. நாம் எதிர்பார்த்த தெல்லாம் நடவாமையால் ஓர் ஏக்கம். ஓடும் வண்டியோடு ஒன்றிவிடுகிறது நம் வாழ்க்கை! நாள்கள் செல்லுகின்றன. 'அப்பா' என்றும், 'அப்பா' என்றவர்களின் பிள்ளைகள் 'தாத்தா' என்றும் நம்மை அழைப்பதைக் கேட்டுக் கேட்டு நாம் முதுமை எய்திவிட்டதை உணருகின்றோம். அறுபது வயதும் ஆகிவிட்டது. வேலையிலிருந்து ஓய்வுபெறுகிறோம்.

வேலையிலிருந்து ஓய்வுபெற்றபின் இன்னும் சில ஆண்டுகள் அலுவலகப் பயணமில்லாத அயர்ந்த வாழ்வு! அதற்குப் பிறகு......?

நமக்குப் பின் நம் பிள்ளைகள் நம் தொழிலைத் தொடர்ந்து செய்கின்றனர். இவ்வாறு, வாழ்க்கை வளையம் இடையறாது சுழல்கின்றது! இந்த இலட்சக்கணக்கான பேர்களில் ஒருவராக நாமும் வாழ்ந்து, வயிறு வளர்த்து, ஓய்ந்து பின் மாய்ந்து மறைவதா?

**வேடிக்கை மனிதர்கள்:**

அலுவலகப் பதிவுத் தாள்களையும் வங்கிக் கணக்குப் புத்தகங்களையும் புரட்டிப் புரட்டி எழுதுவதைத் தவிர வேறு ஆற்றல் எதுவுமே நம்மிடம் இல்லையா? அன்றாடச் செய்தி இதழ்களையும், வார இதழ்களையும் படித்துப் பொழுதுபோக்கு வதைத்தவிர வேறு எதுவும் நம்மால் செய்ய இயலாதா? அவரைப்பற்றியும் இவரைப்பற்றியும் ஆர்வத்தை ஈர்க்கும் அரசியலைப்பற்றியும் அயராது பேசுவதைத்தவிர வேறு பயனுள்ள முயற்சிகளுக்கு நாம் தகுதியற்றவர்களா? இவ்வாறும் சில வேளைகளில் நாம் நினைக்கின்றோம். பிறகு இந்நினைப்பு மறைந்துவிடுகிறது!

"தேடிச் சோறு நிதந் தின்று—பல
சின்னஞ்சிறு கதைகள் பேசி—மனம்
வாடித் துன்பமிக உழன்று—பிறர்
வாடப் பல செயல்கள் செய்து—நரை
கூடிக் கிழப்பருவ மெய்திக்—கொடுங்
கூற்றுக் கிரையெனப் பின்மாயும்—பல
வேடிக்கை மனிதரைப் போலே—நான்
வீழ்வே னென்று நினைத்தாயோ?" —பாரதியார்.

நம் ஒவ்வொருவரது இதயக் குரலின் எதிரொலியைத் தான் இப்பாடலிலே கேட்கிறோம்!

உண்மைதான். தேடிச் சோறு நிதந் தின்று சின்னஞ் சிறு கதைகள் பேசி, வாடித் துன்பமிக எய்தி வேடிக்கை மனிதரைப்போல் நாம் வாழ்வது உப்பற்ற வாழ்க்கைதான், உயிரற்ற வாழ்க்கைதான்.

இதற்கு என்ன செய்வது?

**புழுதியில் கிடக்கும் வீணை:**

நம் வாழ்வை நடத்த நம்மால் இயன்றதைச் செய்து உழைக்கின்றோம். வேறு என்ன நம்மால் செய்ய முடியும்?

நாம் எண்ணில்லாத பேர்களைப் பார்க்கின்றோம். அவர்களில் ஒருவரது முகத்தைப்போல் இன்னொருவருக்கு முகம் இருக்கின்றதா? ஒவ்வொருவரும் ஒவ்வொருவிதமான முகத் தோற்றம் உடையவர்கள். எத்தனையோ கோடி மக்கள் இருந்தும் அவர்கள் ஒவ்வொருவர் முகவமைப்பும் ஒவ்வொரு விதமாக இருப்பதெனில், அஃது அதிசயந்தானே? இவ்வாறு, மக்கள் ஒவ்வொருவருக்கும் விதவிதமான முகத்தோற்றத்தினை அளித்துள்ள இயற்கை, ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு தனித் திறனை அளித்திருக்காதா? அளித்திருக்கத்தான் செய்யும். அத்திறன் என்னவென்று நமக்குத் தெரியவில்லை. அத்திறனை ஆய்ந்து காணும் ஆர்வமும் நம்மிடம் இல்லை. நம்மிடம் ஆற்றல் ஏதுமில்லை என்று நாமே முடிவுசெய்துவிட்டோம். எனவே, 'வேடிக்கை மனிதர்' களாக நாம் வாழ்கின்றோம்!

எல்லையில்லா ஆற்றலுடையது இறைமை: இந்த இறைமையுடன் நாமும் இணைந்துள்ளோம் என்ற உணர்வே இறையுணர்வு என்று கண்டோம். அளவற்ற ஆற்றலுடைய இறைமை நம் இதயத்தில் உள்ளது என்ற நிலையில், நாம் ஆற்ற லேதுமின்றியா இருப்போம்? நம்முள் அடங்கியுள்ள

ஆற்றலை நாம் இன்னும் தெரிந்துகொள்ளவில்லை. ஆதலால், தான் ஆற்றலேதுமில்லாத அவல நிலையில் நாம் வாழ்கின்றோம்.

"நல்லதோர் வீணை செய்தே - அதை
நலங்கெடப் புழுதியில் எறிவதுண்டோ?"

ஆம் இசையெழுப்பும் வீணையாக உள்ள நாம் நலங் கெட்டுப் புழுதியிலே கிடக்கின்றோம். இறையுணர்வால் நம் இதய நாம்பு இன்னிசையை எழுப்பும்பொழுது, புழுதியிற் கிடந்த வீணை பொற்புடன் பொலிந்திடும்.

கலை வேலைப்பாடுகள் நிறைந்த அழகான ஐம்பொன் சிலை ஒன்று கவனிப்பாரற்று மூலையில் கிடக்கின்றது. எவருமே அதை மதிக்கவில்லை. ஒருநாள் அதை எடுத்தார்கள். படிந்திருந்த தூசியையும் படர்ந்திருந்த மாசினையும் துடைத்தார்கள். மெருகேற்றினார்கள். ஆஹா! அந்தச் சிலையின் கவர்ச்சிதான் எவ்வளவு! அதன் முகத்திலே ஒளிரும் அழகொளியை என்னென்பது!

மூலையில் கிடந்த சிலைபோல்தான் ஆற்றல் நம்முள் முடங்கிக் கிடக்கின்றது. அதனை மலரச் செய்வதும் மணம் வீசச் செய்வதும் நம்மால்தான் முடியும். அவ்வாறு செய்வது நம் கடமையுமாகும்.

"சொல்லடி சிவசக்தி! - எனைச்
　　சுடர்மிகும் அறிவுடன் படைத்துவிட்டாய்,
வல்லமை தாராயோ - இந்த
　　மாநிலம் பயனுற வாழ்வதற்கே?"

"இந்த உலகத்திற்குப் பயன்படுமாறு நான் வாழ வேண்டும், அதற்குத் தகுந்த வல்லமை வேண்டும்" என்று இறைமையிடம் வேண்டுகின்றது நம் உள்ளம். ஆடு மாடு மற்ற விலங்கினங்கள் எவையும் இவ்வாறு வேண்டுவது இல்லை. பகலவன் போல் சுடர்விடும் பகுத்தறிவு நமக்கு இருப்பதால் உலகத்துக்குப் பயன்பட நாம் வாழவேண்டும் என்று விரும்பி வேண்டுகின்றோம். உலகுக்குப் பயன்பட நாம் வாழ வேண்டும், என்ற சீர்மைமிகு ஆர்வம் நம் சிந்தையில் எழுந்துவிட்டாலே போதும், நம் உள்ளுறையும் ஆற்றல் உருப்பெற்று மலரத் தொடங்கி விடுகின்றது.

**நம்பினோர் கெடுவதில்லை:**

புகழ் பெற்ற கவிஞனாக இன்று ஒருவன் விளங்குகிறான்.

அவன் எவ்வாறு கவிஞன் ஆனான்?

உலகுக்குப் பயன்படும் உயர்ந்த கவிதைகளை இயற்ற வேண்டும் என்ற ஆர்வம் அவன் உள்ளத்திலே பொங்கி எழுகின்றது.

"............என்றன்
பாட்டுத் திறத்தாலே - இவ்வையத்தைப்
பாலித்திட வேண்டும்"

என்று ஆர்வத் தீயினை வளர்க்கின்றான் கவிஞன்.

இந்த ஆர்வத்தால் ஒரு நம்பிக்கை பிறக்கின்றது அவனது உள்ளத்திலே. 'என்னால் கவிதை எழுத முடியும்' என்ற நம்பிக்கையோடு பேனாவை எடுத்து எழுதத் தொடங்கினான். கவிதை உருவாகியது.

இந்த ஆர்வமும் நம்பிக்கையும் அவனிடம் இல்லையெனில் கவிதை உருவாகியிருக்காது. அவனும் கவிஞனாகியிருக்க மாட்டான் இவ்வாறு, உள்ளத்து எழும் நம்பிக்கையே ஒருவனை உயர்ந்த கவிஞனாக ஆக்குகிறது.

"எள்ளளவு நம்பிக்கையிருந்தாலும் போதும். "மலையே நீ நகர்வாய்" என்று நாம் சொன்னால் மலை நகர்ந்துவிடும். அகத்திலே நம்பிக்கை உடையோரால் ஆகாத காரியம் ஏதுமில்லை"—மாத்யூ-17.

இஃது இயேசுநாதரின் பொன்மொழி.

எல்லாம் வல்ல இறைமை நம் இதயத்தில் இசைந்துள்ளது என்ற உறுதியான நம்பிக்கை நமக்கு இருந்தால் போதும், இயலாத காரியம் என்று எதுவுமே இருப்பதில்லை. எவ்வளவுக்கெவ்வளவு இந்த நம்பிக்கை வலுக்கின்றதோ அவ்வளவுக்கவ்வளவு நம் ஆற்றலும் வளருகின்றது.

25 அல்லது 60 'வாட்ஸ்' மின்சாரத்திலே விளக்கு எரிகின்றது. இன்னும் அதிக 'வாட்ஸ்' மின்சாரத்தில் விசிறி சுழலுகின்றது. இன்னும் மிக அதிகமான 1000 'வாட்ஸ்' மின்சார ஆற்றலால் பெரிய பெரிய இயந்திரங்கள் இயங்குகின்றன. மின்சாரத்தின் ஆற்றலுக்கு அளவுண்டு. இறைமையின் ஆற்றலுக்கு அளவேது? எனவே, இறைமை நம் இதயத்தில் இசைந்து நின்றிடில், இயலாத செயலென்று ஏதுமிருப்பதில்லை. மின்சாரம் பாய்வதற்குக் கம்பி சாதனமாக இருப்பதுபோல், இறைமையின் ஆற்றல் இயங்குவதற்கு நாம் ஒரு சாதனமாகவே உள்ளோம். நம்மைச் சாதனமாக்கிக்கொண்டு நம்வழியாக,

இறைமையாற்றல் இயங்குகிறது என்ற நம்பிக்கை நம் உள்ளத்தில் உறுதியாகப் பதிந்துவிட்டால் இறைமையின் ஆற்றல் நம்வழியாக இயங்குவதை நாம் காணலாம்.

*"நம்பினோர் கெடுவதில்லை;*
*நான்கு மறைத் தீர்ப்பு;*
*அம்பிகையைச் சரண்புகுந்தால்*
*அதிக வரம் பெறலாம்"* (பாரதியார்)

**தன்னம்பிக்கையின் தகைமை :**

நம்பினோர் கெடுவதே இல்லை. இஃது அனுபவத்தால் உணர்ந்த உயர் ஞானிகள் ஓர்ந்து கண்ட உண்மை. எதை நம்ப வேண்டும்? வெற்றிக்கு வழி வகுப்பது தன்னம்பிக்கை (Self confidence) என்பார்கள். தன்னம்பிக்கை என்றால் என்ன? நம்மீது நமக்கு ஏற்படும் நம்பிக்கைதான் தன்னம்பிக்கை. எப்பொழுது அஃது ஏற்படுகிறது? 'என்னால் எதுவும் முடியும்' என்று எண்ணிக்கொண்டால் மட்டும் போதுமா? என்னால் எப்படி முடிகிறது என்பதை உணர்ந்து நாம் உறுதிபெற வேண்டும். அதுவே உண்மையான தன்னம்பிக்கை ஆகும்.

**"என் உள்ளத்திலே உறைகின்றது இறைமை. இறைமையின் ஆற்றல் எல்லையற்றது, அளவிடற்கரியது. இத்தகைய ஏற்றமிகு இறைமையோடு நாமும் இணைந்துள்ளோம். இந்த இணைப்புணர்வால் இறைமையளிக்கும் ஆற்றலை நாம் பெறுகின்றோம். நம் வழியாக அந்த ஆற்றல் இறைமையின் எல்லையற்ற ஆற்றல் இயங்கும், இயங்கியே தீரும்" என்ற திண்ணமான எண்ணமே நம்பிக்கை ஆகின்றது இத்தகைய நம்பிக்கை உடையவர்கள் எண்ணியதை எண்ணியாங்கு எய்துகின்றனர்.**

இறைமைபற்றி இவ்வாறான நம்பிக்கை கொள்வதைத் தான் இறைமையிடம் 'சரண் அடைதல்' என்கின்றனர். நம்பிக்கையால் நாம் ஆற்றல் அடைவதையே 'வரம் பெறுதல்' என்கின்றனர்.

*"தேடியுனைச் சரணடைந்தேன்*
*தேச முத்துமாரி!*
*கேடதனை நீக்கிடுவாய்*
*கேட்ட வரந் தருவாய்!"* (பாரதியார் ப. 64)

**கலைகளிலே கலந்து நிற்பது இறைமை :**

நாம் ஒவ்வொருவரும் ஒரே வகை ஆற்றலை விரும்புவதில்லை. நாம் எல்லாருமே ஓவியர்களாகி விட்டால் வேறு

கலைகள் இல்லாமலன்றே போய்விடும்? ஒவ்வொருவரும் அவரவர் தன்மைக்கும் தகைமைக்கும் ஏற்ப வெவ்வேறு வகை ஆற்றலைப் பெறுகின்றோம். ஆனால், ஆற்றல்கள் அனைத்திற்கும் அடிப் படையாக இறைமையே இலங்குகின்றது என்ற உண்மையை நாம் ஓர்ந்து காணலாம்.

ஓவியம் ஒன்றைப் பார்த்து மகிழ்கின்றோம். அந்த ஓவியத்தின் அழகு நம் மனத்தை மயக்குகின்றது. கற்சிலை யொன்றைக் கண்டு களிக்கின்றோம். அக்கற்சிலையின் கவின் தோற்றம் நம் உள்ளத்தைக் கவர்கின்றது. உயர்ந்த கவிதை ஒன்றைப் படிக்கின்றோம். அக்கவிதையின் நயம் நம் கருத்தினை ஈர்க்கின்றது.

ஓவியத்தின் அழகிலும், சிற்பத்தின் சிறப்பிலும், கவிதை யின் கருத்திலும் பொதுவாக உள்ளது என்ன? நம் உள்ளத் தினை ஈர்க்கும் தன்மைதான். நம்மை மறந்து நாம் அவற்றுடன் ஒன்றி அனுபவிக்கின்றோம். நம் உள்ளத்தினை ஈர்த்து ஒன்றச் செய்யும் தன்மைதான் அவற்றின் தனிச் சிறப்பாகின்றது. இத்தகைய சிறப்புடையவற்றைத் தெய்வீகமான ஓவியம் என்றும், தெய்வீகச் சிற்பம் என்றும், தெய்வீகக் கவிதை என்றும் ஏற்றுகிறோம். போற்றுகின்றோம்.

ஓவியம், சிற்பம், கவிதை இவற்றில் தெய்வீகம் எங்கிருந்து வந்தது?

அருணோதயத்தின் அழகிலே ஆழ்கடலின் அமைதியிலே, விண்மீன்கள் சிமிட்டலிலே வெட்டவெளிப் பரப்பிலே, ஐம்புலன் களுக்கும் அப்பாற்பட்ட ஏதோ ஒன்றை நம் உள்ளம் உணருகின்றதே, அதைத்தானே நாம் இறைமை என்கின்றோம். ஓவியம் காவியம் போன்ற உயர்ந்த கலைகளிலும் இத்தகைய இறைமை உணர்வினையே நாம் பெறுகின்றோம். கண் ணுக்குப் புலனாகும் வண்ண வடிவத்திற்கு அப்பால் கண் ணுக்குப் புலனாகாத அழகினை உணர்த்தும் ஓவியந்தான் உயர்ந்த ஓவியமாகிறது. எனவே, அதனைத் தெய்வீகமான ஓவியம் என்கிறோம். அறிவுக்குப் புலனாகும் அடுக்குச் சொற்களுக்கு அப்பால், அறிவுக்குப் புரியாத அறிவினை உணர்த்தும் காவியந்தான் உயர்ந்த காவியமாகின்றது. அதனைத் தெய்வீகமான காவியம் என்று சிறப்பித்துக் கூறுகிறோம். இசைகளெல்லாம் நம் காதுக்கு இனிமையாகவே ஒலிக்கின்றன. நாம் எதைத் தெய்வீக இசை என்று கூறுகின்றோம்? கேட்கப்படும் இசையொலிகளுக்கு அப்பால் கேளாத ஒலியாக ஒன்றை உணருகின்றோமே அத்தகைய

இசையைத்தான் தெய்வீக இசை என்று பாராட்டுகிறோம். புலன்களுக்கு அப்பாற்பட்ட இன்பமும் அழகும் எதில் உள்ளதோ அதைத் தெய்வீகமானது என்று நாம் ஏற்றிப் போற்றுகிறோம்.

உயர் கலைகள் அனைத்திலும் இத்தகைய இன்பமும் அழகும் இணைந்துள்ளன. ஐம்புலன்களுக்கும் அப்பாற்பட்ட அழகும் இன்பமும் அருங்கலைகளிலே அடங்கியிருப்பதால் தான் அவற்றைத் தெய்வீகக் கலைகள் எனத் தெளிந்து நாம் பேணுகின்றோம்.

ஐம்புலன்களுக்கு அப்பாற்பட்ட இன்பமே இறைமை என்று கண்டோம், இத்தகைய இன்பத்தினைக் கலைகளிலும் நாம் காணுகின்றோம். இவ்வாறு, கலைகளிலே கலந்து நிற்கும் இறைமையினை ஓர்ந்துதான், கலைமகளைக் கடவுளெனக் கருதி மிகப் போற்றுகிறோம். ஐம்புலன்களுக்கு அப்பாலான அழகும் இன்பமும், அறிவும் உண்மையும் அமைந்திலங்கும் எதனையும் இறைமையென ஏத்துகிறோம்.

> "வெள்ளைத் தாமரைப் பூவில் இருப்பாள்,
> வீணை செய்யும் ஒலியில் இருப்பாள்:
> கொள்ளை இன்பங் குலவு கவிதை
> கூறு பாவலர் உளளத் திருப்பாள்:
> உள்ளதாம் பொருள் தேடி உணர்ந்தே
> ஓதும் வேதத்தின் உள்நின் றொளிர்வாள்:
> கள்ள மற்ற முனிவர்கள் கூறும்
> கருணை வாசகத்து உட்பொருளாவாள்" (பாரதியார்)

கலைகளில் இறைமையை உணர்ந்தோர் இறைமையைக் கலையாகவே கண்டு போற்றினர்.

> "பொருளுடைக் கலையே......"
> (திருவாசகம். பிடித்தபத்து ப. 144)

> "கலையாரு நூலங்க மாயினான் காண்
> கலைபயிலுங் கருத்தன் காண்"
> (திருநாவுக்கரசர். திருச்சிவபுரம் ப. 253)

> "கலைபயின்ற உளத்து இனிக்கும் கரும்பினை"
> (இராமலிங்கர். ப. 204)

கலையென்பதில் இசை, சிற்பம், நடனம், ஓவியம் இவை போன்ற நுண்கலைகள் மட்டுமே அடங்குவதில்லை. ஆற்றலோடு செய்யும் தொழில்கள் எல்லாமே கலைகள்தாம். வாணிபமும்

ஒரு கலைதான், வைத்தியமும் ஒரு கலைதான். வழக்குரைப்பதும் தீர்ப்பளிப்பதும் கலைகள் தாம்.

"வஞ்ச மற்ற தொழில் புரிந்துண்டு
வாழும் மாந்தர்குல தெய்வ மாவாள்;
வெஞ்ச மர்க்குயி ராகிய கொல்லர்,
விந்தை யோர்ந்திடு சிற்பியர், தச்சர்;
மிஞ்ச நற்பொருள் வாணிகஞ் செய்வோர்,
வீர மன்னர்பின் வேதியர் யாரும்
தஞ்ச மென்று வணங்கிடுந் தெய்வம்
தரணி மீதறி வாகியதெய்வம்" (பாரதியார்)

வஞ்சமில்லாத தொழில்கள் எல்லாம் கலைகள் தாம். கவியினை இயற்றுவது கலை, கணக்கினை எழுதுவதும் கலை, இலக்கியம் படைத்தல் கலை, ஏர் பிடித்து உழுதலும் கலை. காவியம் புனைவது கலையென்றால் கழனியில் உழைப்பதும் கலை தான். அறிவும் ஆற்றலும், ஊக்கமும் உழைப்பும் அடங்கும் தொழில்கள் அனைத்தும் கலைகள் தாம். இக்கலைகளிலே நம் ஆற்றல் பெருக வேண்டுமெனில் அதற்கு உதவுவது நம் இதயத்தில் இசைந்துள்ள இறையுணர்வுதான்.

இறையுணர்வு இல்லாத கலைஞர்கள் இருக்க முடியாதா ? இறையுணர்வு இல்லாத கலை சிறக்காதா?

இறையுணர்வு இல்லாதவனும் காவியம் இயற்றலாம், ஓவியம் வரையலாம். ஆனால், அக்காவியத்திலே கனிவு இருக்காது, ஓவியத்திலே உயிர் இருக்காது. நாம் ஈடுபட்டுள்ள கலைகளிலே கலையின் உயிர்நாடி துடிக்க வேண்டுமெனில், நமக்கு இறையுணர்வு வேண்டும். இறையுணர்வு இல்லாத கலை முயற்சிகள் காகிதப்பூக்கள் போல் மணமற்றுப் போகின்றன, மதிப்பற்று மறைகின்றன.

இயற்கைக் காட்சிகளின் எழிலில் இறைமை கலந்துள்ளது. எனவே, அக்காட்சிகளை எத்தனை முறை பார்த்தாலும் நமக்குள் சலிப்புத் தட்டுவதில்லை. மாலை வானத்து மயக்கந்தருங் காட்சி மனத்திற்குத் தெவிட்டுகிறதா? காலமெல்லாம் கடலினைப் பார்த்துக்கொண்டே இருந்தாலும் கண்ணும் கருத்தும் சலிப்படைகின்றனவா? குயிலின் குரலிலே இறைமையின் இனிமை இழைந்து நிற்பதால், எத்தனை நாள்கள் குயிலின் குரலைக் கேட்டாலும் அது தெவிட்டுவதில்லை. இவ்வாறு, இயற்கைப் பொருள்களிலிருந்து நாம் பெறும் இன்பத்தில் எள்ளளவும் சலிப்பே தோன்றுவதில்லை. காரணம், இயற்கையோடு இறைமை கலந்திருப்பதுதான். இதுபோல் நம்

கலை முயற்சிகளிலே இறைமை கலந்தால் நாம் ஆக்கும் கலைப் பொருள்கள் தெவிட்டாத இன்பந்தரும் தெய்வீகத் தன்மையைப் பெறுகின்றன.

**கலைகளின் இதயம் இறையுணர்வு:**

இறைமையில் இசைந்த இதயத்தோடு ஒருவன் ஓவியம் வரைகிறுன் என்ருல் அவனையறியாமலே அந்த ஓவியத்தில் ஓர் உயிரோட்டம் அமைகின்றது. இறைமை தோய்ந்த இதயம் எழுப்பும் கீதத்திலே ஒரு தெய்வீக நாதம் இழைகின்றது. இறையுணர்வோடு ஆடும் நடனத்திலே ஒரு தெய்வீகக்களை கூடுகின்றது. தம்மை மறந்து பாடினுர், தம்மை மறந்து ஆடினுர் என்று அந்தப் பாடலையும், ஆடலையும் சிறப்பித்துக் கூறுகின்ருேம். தம்மை மறந்து பாடும்பொழுது அப்பாடலிலே தெய்வீகநாதம் எவ்வாறு இழைந்தது? தம்மை மறந்த நிலையில் ஆடும் ஆட்டத்திலே தெய்வீகக்களை கூடியது எப்படி? அவர்கள் இறைமையில் இசைந்து தம்மை மறந்த நிலையில் தான் இறைமை செயல்பட ஏதுவாகின்றது. இறைமையின் ஆற்றல் அவர்கள் வழிச் செயல்படுவதால் பாடலும், ஆடலும் தனிச் சிறப்பு எய்துகின்றன.

இந்த உண்மையினை ஆக்கக் கலைகளிலே ஈடுபட்டுள்ளோர் அனைவரும் அனுபவத்தால் அறிவார்கள்.

இந்த அத்தியாயத்தைத் தொடங்கும் பொழுது இன்னின்னவற்றை இப்படியிப்படி எழுத வேண்டுமெனத் திட்டமிட்டுத் தொடங்கவில்லை. பேனவைக் கையிலெடுத்து எழுத முனைந்தவுடன் ஊற்றுப் பேனவில் ஒரு சீராக வரும் மையினைப் போல் உள்ளத்தில் ஊறும் கருத்துக்கள் ஒவ்வொன்ருய் வருகின்றன. கருத்தோடு சொற்களும் கலந்தே வருவதால் வருத்தம் சிறிதுமின்றி வரைகின்றது எழுதுகோல். இதற்குமுன் எண்ணுத இனிய கருத்துக்களை, பள்ளியிற் பயிலாத தெள்ளுதமிழ்ச் சொற்களில் அள்ளிக் கொடுக்கும் அருமை எது?

அமெரிக்காவில் பிறந்த தலைசிறந்த ஆங்கில உரைநடை ஆசிரியர் எமர்சன் (Emerson) என்பவர். அவர் சீரிய சிந்தனையாளருமாவார் "நான் எழுதியனவெல்லாம் என்னுடையவை அல்ல. ஏதோ ஓர் ஆற்றல் என் உள்ளத்தில் புகுந்து காட்டிய கருத்துக்களே என் எழுத்துக்களில் இடம் பெற்றுள்ளன" என்று அவர் கூறியுள்ளார். ஷேக்ஸ்பியருக்கு அடுத்துப் புகழேணியில் நிற்பவர் மில்டன் (John Milton) என்ற ஆங்கிலக் கவிஞர். கண்ணிழந்த குருடராக இருந்தும் அவர்

உயர்ந்த கவிதைகள் இயற்றினர். ஆன்றமைந்த கருத்துக்களைக் கொண்டவை அவர் தம் கவிதைகள். 'இழந்த சுவர்க்கம்' (Paradise Lost), "மீண்ட சுவர்க்கம்" (Paradise Regained) போன்ற மாகாவியங்களை அவர் இயற்றியுள்ளார். அவர் கூறுகின்றார்: "சில வாரங்களில் எதுவுமே எழுத வாராது. திடீரென்று இரவிலே ஏதோ ஒன்று உள்ளத்தைத் தட்டி எழுப்பும். என் மகளைக் கூப்பிட்டு வெள்ளமாகப் பொங்கி வரும் கவிதைகளை அள்ளி அள்ளிச் சொல்லுவேன். அவள் அதை வேகமாக எழுதிக் கொள்ளுவாள்" - அவர் இயற்றிய காவியங்களின் கதை பற்றி அவரே கூறியுள்ளது இது.

பிகாசோ (Picasso) என்பவர் உலகப் புகழ் பெற்ற ஓவியர். "நான் எந்தச் சித்திரத்தை வரையத் தொடங்கினாலும், ஏதோ ஒன்று என்னுடன் சேர்ந்து அதை வரைந்து கொண்டேயிருக்கும்", என்பது அவர் கூற்று.

ஜேம்ஸ் வாட் (James Watt) என்ற விஞ்ஞானியே நீராவியால் ஓடும் இரயில் இன்ஜினைக் கண்டுபிடித்தவர். "நானு இதைக் கண்டுபிடித்தேன்! கணத்திலே தோன்றி மறைந்த உள்ளுணர்வு என்ற ஒலி உணர்த்தியது தான் இது", என்று அவர் விளக்கியுள்ளார். (Article entitled "How visions helped world's great achievers" - by Weble Garrison - Indian Express - Sunday Standard. dated April, 11, 1971,)

நம் நாட்டிலும் மாகாவியங்கள் இயற்றியோரையெல்லாம் வரகவிகளாகவும், மெய்ஞ்ஞானிகளாகவுமே போற்றுகின்றோம். இவ்வாறு கவிஞர்களும், கலைஞர்களும், விஞ்ஞானிகளும் இறையுணர்வின் துணை கொண்டே தத்தம் துறைகளிலே ஏற்றம் பெற்றுள்ளனர். இதனால் தான்,

*"கலை ஞானம் கல்லாமே கற்பித்தானை..."* *(நாவுக்கரசர்)*

என்று இறைமை ஏத்தப்படுகின்றது.

இறைமையைப் பாடும் இதயத்தின் குரலை இறைமையின் குரலாகவே எண்ணி மகிழ்கின்றனர் அடியார்கள்:

*"என்னெஞ் சத்துள்ளிருந்து இங்கு இருந்தமிழ்*
*நூலிவை மொழிந்து"* *(திருவாய்மொழி)*

**தொழில்களனைத்துமே கலைகள் தாம்:**

நாம் ஒவ்வொருவருமே புகழ் பெற்ற கவிஞராகவோ, கலைஞராகவோ ஆகிவிட இயலாமல் இருக்கலாம். அவ்வாறு ஆகவேண்டும் என்ற அவசியமும் இல்லை.

அறிவும் ஆற்றலுங்கொண்டு நாம் செய்யும் எல்லாத் தொழில்களுமே கலைத்தொழில்கள்தாம் என்று கண்டோம். அந்தந்தத் தொழில்களை நாம் திறம்படச் செய்கின்றோமா? நாம் சாதாரண எழுத்தராக இருக்கலாம். வங்கியில் பணம் எண்ணுபவராக இருக்கலாம். வணிகராக இருக்கலாம். வழக்கறிஞராக இருக்கலாம். நாம் ஈடுபட்டுள்ள தொழிலைச் செவ்வனே செய்கின்றோமா என்பதே நாம் சிந்தித்தல் வேண்டும். நாம் எந்நிலையில் இருந்தாலும் எத்தொழிலைச் செய்தாலும் அந்நிலையிலும் அத்தொழிலிலும் நாம் சிறந்து விளங்க வேண்டும். எதைச் செய்தாலும் அதைக் குறைபாடின்றி, ஆர்வத்துடனும் அக்கறையுடனும் செய்வது நமது கடமை. இந்த ஆர்வமும் அக்கறையும் இல்லாததால்தான் சாதாரணத் தொழிலைச் செய்வதில் கூட நாம் திறமையற்றவர்களாக மதிக்கப்படுகின்றோம்.

**கைகொடுத்துதவக் காத்திருக்கிறது இறைமை:**

நம் வாழ்க்கை மலர்ந்து மணம் பெற வேண்டும், வளர்ந்து வளம் பெறவேண்டும் என்றால், நாம் செய்யுந் தொழில்களனைத்தையும் சீர்படச்செய்தல் இன்றியமையாததாகும். இதைச் செய்வதில் நம் உதவிக்கெனக் கையாளாக நின்று, நம் தொழில்களில் கலந்து நின்று உதவுகின்றது இறைமை. தீங்கவிதை எழுதுவதற்கு எவ்வாறு உதவுகின்றதோ இறைமை அவ்வாறே சாதாரணத் தொழில்களை நலமுறச் செய்வதற்கும் அஃது உதவுகின்றது.

> ‘கையாளென நின்றடியேன் செய்
> தொழில்கள் யாவுந் கைகலந்து
> செய்வாள்; புகழ் சேர் வாணியுமென்
> னுள்ளே நின்று தீங்கவிதை— பெய்வாள்”.

என்று பாடுகின்றார் பாரதியார்.

நம் கையாளாக நின்று நம் தொழிலில் கைகொடுத்து உதவுவதற்குக் காத்து நிற்கிறது இறைமை. இந்த இறையுணர்வோடு நாம் செய்யும் செயல்களெல்லாம் சிறப்படைகின்றன. ஆலைகளிலும் கல்விச் சாலைகளிலும், அலுவலகங்களிலும், அகன்ற வயல்களிலும், எத்தொழிலைச் செய்வதில் நாம் ஈடுபட்டிருந்தாலும், இறையுணர்வோடு நாம் அதைச் செய்தோமாயின் உழைப்பின் தன்மை உயர்கின்றது, உற்ற பலனும் சிறக்கின்றது.

---

# சேனாவரையரும் உரையாசிரியரும்

[பேராசிரியர், ஆ. சிவலிங்கனார், மயிலம்]

## 2. அலியும் கடவுளும்

உலகப் பொருள்கள் உயர்திணை யென்றும் அஃறிணை யென்றும் இருபிரிவில் அடங்கும். அவற்றுள் மக்களாகிய பொருள் உயர்திணையிலும், அவரலபிறவாகிய பொருள் அஃறிணையிலும் அடங்கும். அவ்விரண்டு திணைகளிலும் சொற்கள் வழங்கும். மக்களைக் குறிக்கும் சொற்கள் ஆண்பாற் பெயர்ச்சொல், பெண்பாற் பெயர்ச்சொல், பலர்பாற் பெயர்ச் சொல் என மூவகைப்படும். இம் மூவகைச் சொற்களுக்கும் அவற்றை யுணர்த்தும் இறுதி யெழுத்துகள் பெரும்பாலும் உண்டு. இவை கொண்டுமுடியும் வினைகளுக்கும் அப்பால்களை யுணர்த்தும் இறுதி யெழுத்துகள் உண்டு. அவன் வந்தான், அவள் வந்தாள், அவர் வந்தார் எனக் காண்க.

மக்களில் ஆணிலும் சேராமல் பெண்ணிலும் சேராமல் இருதன்மைகளும் கலந்த வடிவங்கள் ஓரோரிடங்களில் காணப் படும். அவற்றை யுணர்த்தும் சொற்கள் பேடு, பேடி, அலி என்பனவாகும். பெண்தன்மை மிகுந்து ஆண்தன்மை குறைந்து காணப்படும் வடிவமும், ஆண்தன்மை மிகுந்து பெண் தன்மை குறைந்து காணப்படும் வடிவமும் 'பேடு' என்ற சொல்லால் உணர்த்தப்படும். பேடி என்ற சொல்லாலும் அவை உணர்த்தப்படும். ஆண்தன்மையும் பெண்தன்மையும் மிகுதியும் குறைவும் இல்லாது ஒத்தநிலையில் உள்ளவடிவம் அலி என்ற சொல்லால் உணர்த்தப்படும். (இச் சொல்லாலேயே மற்றைய இரண்டு வடிவங்களையும் உணர்த்துதலும் உண்டு.) இவ்வலி என்பது அஃறிணையில் சேரும். ஆனால், பேடு பேடி என்ற சொற்கள் எத்திணை எப்பாலில் சேரும் என்பது ஆசிரியர் தொல்காப்பியர் சொல்ல நேர்ந்தது.

'பேடு', 'பேடி' என்பன ஆண்பாலையோ பெண்பாலையோ குறிக்கும் இறுதி எழுத்து இல்லாதன. ஆனால், இவற்றால் உணர்த்தப்படும் வடிவம் பெண்மை மிகுந்து ஆண்மை குறைந்த வடிவமாக இருக்குமானால் அவ்வடிவம் பெண்பாலில் சேர்த்தற் குரியதாகும்; ஆண்மை மிகுந்து பெண்மை குறைந்த வடிவமாக இருக்குமானால் அது ஆண்பாலில் சேர்த்தற்குரியதாகும். ஆனால், அவற்றை யுணர்த்தும் 'பேடு', 'பேடி' என்பனவற்றுக்

குப் பால் காட்டும் இறுதியில்லாததால் நாமே வடிவத்துக் கேற்றவாறு அச் சொற்களை ஆண்பாற் சொல் என்றோ பெண்பாற் சொல் என்றோ பிரித்துச் சொல்ல வேண்டும். அப்படிச் சொல்லும்போது அவ்வப் பாலுக்குரிய இறுதி எழுத்துடைய வினைகளால் முடித்தல் வேண்டும். பேடு வந்தான், பேடி வந்தான், பேடு வந்தாள், பேடி வந்தாள் எனச் சொல்லலாம். இவற்றின் பன்மையாகப் பேடர் வந்தார், பேடியர் வந்தார் என்பன சொல்லலாம்.

இவைபோலவே தெய்வப் பெயர்ச் சொற்களும் பாலறி விக்கும் இறுதியெழுத்துடையனவல்ல. அவற்றையும் இவை போலச் சொல்லவேண்டும். கடவுள், தேவு என்பனவற்றைக் கடவுள் வந்தான், கடவுள் வந்தாள், தேவு வந்தான், தேவு வந்தாள் எனச் சொல்லவேண்டும். இக் கருத்தில் தான் ஆசிரியர்,

> "பெண்மை சுட்டிய உயர்திணை மருங்கின்
> ஆண்மை திரிந்த பெயர்நிலைக் கிளவியும்
> தெய்வம் சுட்டிய பெயர்நிலைக் கிளவியும்
> இவ்வென அறியும் அந்தம் தமக்கிலவே
> உயர்திணை மருங்கிற் பால்பிரிந் திசைக்கும்"
>
> (தொல். சொல். 4.)

என்றார். 'பெண்மை சுட்டிய ஆண்மை திரிந்த பெயர்' என்றால், 'பெண்மை மிகுந்தும் ஆண்மை குறைந்தும் உள்ள வடிவம்' என்பதாகும். இவ்வடிவம் பற்றிய பெயர்ச்சொல் உயர்திணையிடத்து ஆண் பெண்பாலுள் ஒன்றிற் பிரிந்து இசைக்கும் என்றார் ஆசிரியர். அப்பால் எதுவாகும் என்பதற்கு அவரே,

> "ஆண்மை திரிந்த பெயர்நிலைக் கிளவி
> ஆண்மை யறிசொற் காகிட னின்றே" (தொ. சொ.)

என்றார். ஆதலின் இது பெண்பாலில் இசைக்கும். (இது கொண்டு ஆண்மை சுட்டிய பெண்மை திரிந்த பெயர்நிலைக் கிளவி ஆண்பாலாய் இசைக்கும் என்னலாம்.) இதற்கு எடுத்துக் காட்டாகச் சேனாவரையர் பேடி வந்தாள், பேடர் வந்தார் பேடியர் வந்தார் எனக் காட்டினார்.

நச்சினார்க்கினியர் பேடி வந்தாள், பேடியர் வந்தார் எனக் காட்டினார். இவ்விருவரும் 'பேடி' என்ற சொல்லைப் பெண் பாலாகக் கொண்டு காட்டினர். 'பேடி' என்பதில் இகரம் பெண்பாலுக்குரியதாகக் கொண்டனர்.

ஆனால், இளம்பூரணரோ பேடி வந்தான், பேடி வந்தாள், பேடியர் வந்தார் எனக் காட்டினர். அவர் கொள்கை 'பேடி' என்பது, பெண்மைசுட்டிய ஆண்மைதிரிந்த வடிவத்துக்கும், ஆண்மைசுட்டிய பெண்மைதிரிந்த வடிவத்துக்கும் உரிய பெயர்ச் சொல் என்பதாகும். இதுவே சிறந்ததாம். ஏன் எனின், ஆசிரியர் இவ்வென அறியும் அந்தம் தமக்கில என்றதால் 'பேடி' என்பதில் இறுதி இகரம் பாலுணர்த்துவதில்லை என்ன வேண்டுமன்றோ? இளம்பூரணர், உரையாசிரியர் உரையையே முழுவதும் தழுவியவராதலின், உரையாசிரியர் கொள்கையும் இதுவே. அதனால் சேனாவரையர் முதலியோர் 'பேடி' என்றதைப் பெண்பாற் சொல்லாகக்கொண்டு காட்டியது பொருந்தாது.

அன்றியும் உயர்திணை மருங்கிற் பால்பிரிந்திசைக்கும் என்பதற்குப் "பால் வேறுபட்டிசைத்தலாவது தாம் உயர்திணைப் பெயராய் ஆடூஉவறிசொல் முதலியவற்றுக்குரிய ஈற்றெழுத்தே தம் வினைக்கீறாக இசைத்தல்" எனச் சேனாவரையர் எழுதியிருத்தலின் 'பேடி வந்தாள்' என்பதில் 'வந்தாள்' என்ற ளகர வீற்றுப் பெண்பால் வினைச் சொல்லைக் கொண்டே 'பேடி' என்பது பெண்பாற் பெயர்ச்சொல் எனக் கொள்ளவேண்டுமே தவிரப் 'பேடி' என்பது இகர இறுதியாக இருத்தலின் பெண்பாற் பெயர்ச்சொல் எனக் கொள்ளலாகாது. அதனால், சேனாவரையரும் உரையாசிரியர் கருத்தினரே என்றும் கூறலாம்.

உரையாசிரியர் வழிநிற்கும் இளம்பூரணர் 'பேடி வந்தாள்' என்ற ஓர் எடுத்துக்காட்டு காட்டவேண்டியிருக்கப் 'பேடி வந்தான்' என ஆண்பாற்குரியதையும் காட்டியது. 'பேடி' என்பது இருபாற்கும் பொதுவானது என்பதை அறிவிக்கவும், "பெண்மைசுட்டிய ஆண்மைதிரிந்த" என்ற தொடரை, "ஆண்மைசுட்டிய பெண்மைதிரிந்த" எனவும் மாற்றிக் கொள்ளலாம் ஆதலின் ஆசிரியர் தொல்காப்பியர் இருவகைப் பாலையுமே குறித்தார் என்பதை அறிவிக்கவும் ஆகும்.

இனிப் 'பேடு' என்பதும் 'பேடி' என்பதும் இருபாற்கும் உரியவான பால் அறியப்படாத சொற்களே என்பதற்குச் சான்று காணலாம்.

> *"ஆண்மை திரிந்த பெண்மைக் கோலத்துக்*
> *காமன் ஆடிய பேடி யாடலும்"* (சிலப். 1. 6 : 56-57.)

என்றவிடத்தில் அடியார்க்கு நல்லார், "ஆண்மைத் தன்மையில் திரிதலாவது விகாரமும் வீரியமும் நுகரும் பெற்றியும் பத்தியும்

பிறவும் இன்றாதல். 'ஆண்மைதிரிந்த' என்பதனால் தாடியும், 'பெண்மைக்கோலத்து' என்பதனால் முலை முதலிய பெண்ணுறுப்புப் பலவும் உடையது ஆண் பேடு என்று பெயர் பெறும் எனக் கொள்க.'' என்றெழுதிச் சான்றாக,

''வாணன் பேரூர் மறுகிடை நடந்து
நீணில மளந்தோன் மகன்முன் ஆடிய
பேடிக் கோலத்துப் பேடு காண்குநரும்''

(மணி. 3. 123-25)

என்ற மணிமேகலை யடிகளையும் காட்டினார். 'பேடிக் கோலத்துப் பேடு' என்றதால் பேடி, பேடு என்ற இரு சொற்களுமே ஆண் பெண் பால்களுக்கு வழங்கின என அறியலாம்.

இனித் தெய்வச் சிலையாரும் 'பேடி' என்பது இருபாற்கும் உரிய பொதுச் சொல்லாகவே கொண்டார் என்றும் அறியலாம். அவர்,

''பேடி என்பது பெண் பிறப்பில் தோன்றிப் பெண்ணுறுப்பின்றித் தாடிதோற்றி ஆண்போலத் திரிவது''

என்று பேடிக்கிலக்கணம் எழுதி, 'அப்பேடி என்னும் சொல்லொடு தொடரும் வினைச்சொல் ஆண்பாலறிசொல்லானும் ஒலிக்கும்' என்றும் எழுதினார், மேலும் ''ஆண்மை திரிந்த பெயர்நிலைக் கிளவி'' (தொ. சொ. 12) என்ற நூற்பாவில்,

''ஆண்மைதிரிந்த பெயர்நிலைக்கிளவி பெண்மையறி சொற்காகும் என்றது ஆண்மையறிசொற்காகும் இடமின்று என எதிர்மறை வாய்பாட்டால் கூறினமையால் சிறுபான்மை ஆடூஉவறி சொல்லால் வருவன உளவேற் கொள்க''

என்றும் எழுதியமை காணலாம்.

இக்காலத்தும் ஆற்றலில்லாத—அஞ்சுகின்ற ஒருவனைப் பார்த்து 'பேடிப்பயல்' என்று கூறுதலினாலும் 'பேடி' என்பது இறுதி எழுத்துப்பற்றி இன்ன பாலுக்குரியது என்று கூற இயலாது என அறியலாம்.

இனிப் 'பெண்மைசுட்டிய' என்னும் நூற்பாவில் வந்த சொற்களின் பொருள்கள்பற்றி உரையாசிரியரைச் சேனாவரையர் மறுக்கு மாற்றைக் காண்பாம்.

'ஆண்மைதிரிந்த பெயர்நிலைக்கிளவி' என்றவிடத்துப் 'பெயர்நிலைக்கிளவி' என்பதற்குப் 'பெயர்ச்சொல்' என்றார் சேனாவரையர். உரையாசிரியர் 'பெயர்' என்பது ஆகு பெயராய்ப் பொருள்மேல் நின்றது' என்றார். ஆண்மைதிரிதல் என்பது சொல்லுக்கில்லை; பொருளுக்கேயுண்டு ஆதலின் 'பெயர்' என்பதற்குப் 'பொருள்' எனக் கொண்டார் உரையாசிரியர். அதனால், ''பெண்மை......பெயர்நிலைக்கிளவி'' என்பதை, ''ஆண்மைதிரிந்த பெயரில் (பொருளில்) பெண்மை சுட்டிய நிலைக்கிளவி'' எனக் கொண்டார் என்னலாம். பொருள் ஆண்மைதிரிந்து விட்டதால் அஃது ஆண்மை திரிபெயர் எனப்பட்டது. ''ஆண்மைதிரிந்த பெயர்நிலைக்கிளவி'' (தொ. சொ. 12) எனப் பின்னும் ஆண்டார் ஆசிரியர். இதையே ''தன்மை திரிபெயர்'' (தொ. சொ. 56) எனவும் ஆண்டனர். ஆண்மைதிரிந்த பெயர்நிலைக்கிளவி ஆண்மை யறிசொற்காகிடன் இன்று ஆதலின் அது பெண்மைசுட்ட வேண்டியதாயிற்று, எனவே, 'ஆண்மைதிரிந்த பொருளில் பெண்மையைக் குறிக்க வேண்டி நிலைபெற்ற சொல் (பேடி) உயர்திணை மருங்கிற் பால்பிரிந் திசைக்கும்' என்றார் உரையாசிரியர்.

இப்படிப் பொருள் கொள்வதால் உரையாசிரியர்' 'பெயர்' என்பதற்குப் 'பொருள்' எனக் கொண்டதும், 'பெண்மை சுட்டிய' என்றவிடத்துச் 'சுட்டிய' என்பது வினையெச்சம் என்றதும் பொருந்தும் என்னலாம்.

இப்படியே 'தெய்வம் சுட்டிய பெயர்நிலைக்கிளவி' என்பதற்கும் உரையாசிரியர் கருத்தாகத் ''தெய்வத்தைக் கருத வேண்டி அத்தெய்வப் பொருளில் நிலைபெற்றகிளவி'' என்று பொருள் கொள்ளவேண்டும்.

'பெயர்நிலைக்கிளவி' என்பதற்குப் 'பெயர்ச்சொல்' எனக் கொள்ளாமல் 'பொருளில் நிலைபெற்ற சொல்' எனக் கொள்வதற்குப் பின்வருவது துணைபுரியும்.

ஆசிரியர் உயர்திணை முப்பால் உடையது எனச் சொல்ல வந்த இடத்தில்,

> ''ஆடூஉ வறிசொல் மகடூஉ வறிசொல்
> பல்லோர் அறியும் சொல்'' (தொ. சொ. 2.)

என்றாரே யல்லாமல் ஆடூஉச்சொல். மகடூஉச்சொல், பல்லோர் சொல் என்றாரல்லர். ஆடூஉவை அறிவிக்கும் சொல் மகடூஉவை

யறிவிக்கும் சொல், பல்லோரை யறிவிக்கும் சொல் எனப் பொருள் கொள்ளுமாறு கூறுதலின் 'பெண்மைசுட்டிய பெயர் நிலைக்கிளவி' என்றவிடத்தும் 'பெண்மையைச் சுட்டவேண்டிப் பொருளில் நிலைபெற்ற சொல்' என்றே பொருள் விரிக்கப்பட வேண்டும். அதுபோலவே 'தெய்வத்தைச் சுட்டவேண்டி அத்தெய்வப் பொருளில் நிலைபெற்ற சொல்' எனப் பொருள் கொள்ளவேண்டும். எனவே 'சுட்டிய' என வரும் இரண்டும் 'செய்யிய' என்னும் வாய்பாட்டுப் பொருளையும், 'பெயர்' என வரும் இரண்டும் 'பொருள்' என்னும் பொருளையும் தரும் என்னலாம்; தவறில்லை.

இப்படிக் காணுவதால் சேனாவரையர் பின்வருமாறு மறுப்பது பொருந்துவதில்லை யென்னலாம்.

> "சுட்டிய என்பது செய்யிய என்னும் வினையெச்சம் என்றும் ஆண்மைதிரிதல் சொற்கின்மையின் பெயர் நிலைக்கிளவி யென்பது ஆகுபெயராய்ப் பொருள்மேல் நின்றது என்றும் உரையாசிரியர் கூறினாராலெனின்: ஆண்மைதிரிதல் பெண்மைத்தன்மை யெய்துதற் பொருட்டன்றிப் பேடிக்கு இயல்பாதலின் பெண்மை சுட்டவேண்டி ஆண்மைதிரிதல் என்றல் பொருந்தாமையானும் பொருளே கூறலுற்றாராயின் ஆசிரியர் பேடியும் தெய்வமும் என்று தாம் கருதிய பொருள் இனிது விளங்கச் சுருங்கிய வாய்பாட்டாற் சூத்திரிப்பா ராகலானும் அவர்க்கது கருத்தன்மை யான் உரையாசிரியர்க்கும் அதுகருத்தன் றென்க."

இம்மறுப்பில் உரையாசிரியர்க்கும் கருத்தில்லை யென்றவர் உரையாசிரியரை மறுப்பானேன்? உரையாசிரியர் பெயர்நிலைக் கிளவி யென்பது பொருளை யுணர்த்தும் என்றார் எனக் கொண்டு சேனாவரையர் மறுத்தார். ஆனால் அவரே, "உரையாசிரியர் 'பெயர்நிலைக்கிளவி' யென்பது 'பொருள்' என்பதை யுணர்த்திய தாகச் சொல்லியிருக்கமாட்டார்; 'பெயர்' என்பதே 'பொருள்' என்பதை யுணர்த்தியது என்றுதான் சொல்லியிருப்பார்" எனக் கருதினமையாலும், அப்படியானால் அது தவறில்லையென முடிபு கொண்டமையாலுமே, 'உரையாசிரியர்க்கும் அது கருத்தன்று' என்று கூறினர்.

'பெயர்நிலைக்கிளவி' என்பதற்குப் 'பொருளில் நிலைபெற்ற சொல்' எனப் பொருள் கொள்ளும்போது 'நிலைக்கிளவி' என்பது வினைத்தொகையாதலின் மிகாது 'நிலைகிளவி' என்றே

யிருத்தல் வேண்டும். ஆனால் செய்யுளின்பத்துக்காக 'நிலைக் கிளவி' என வலிமிகுந்தது எனக் கொள்ளல் வேண்டும்.

இனித் தெய்வம் சுட்டிய பெயர்நிலைக்கிளவிக்கும் இவ்வென அறியும் அந்தம் தமக்கில என ஆசிரியர் கூறிவிட்டமையால் எடுத்துக்காட்டுகளாகத் 'தேவன் வந்தான்' 'தேவி வந்தாள்' என்பன காட்டல் தவறாகும். இப்பெயர்ச் சொற்களில் னகர ளகரங்களாகிய பால்காட்டும் இறுதி எழுத்துகள் உண்டு. அதனால் 'தேவு வந்தான்' 'தேவு வந்தாள்' என்பனவே காட்டப்பட வேண்டும். 'கடவுள்' என்பது ஆண் பெண் பால்களுக்குப் பொதுவாகலின் 'கடவுள் வந்தான்'. 'கடவுள் வந்தாள்' என்றே காட்டலாம். பன்மைக்குத் 'தேவர் வந்தார்', 'கடவுளர் வந்தார்' எனக் காட்டவேண்டும்.

இதுகாறும் கூறியவாற்றால் உரையாசிரியர் (அவர்வழி இளம்பூரணர்) 'பேடி' என்பது இருபாற்கும் வரக்கூடியது என்ற கொள்கையில் 'பேடிவந்தான்', 'பேடிவந்தாள்' எனக் காட்டுவது பொருந்தும் என்பதும், 'பெயர்நிலைக்கிளவி' என்பதற்குப் 'பொருளில் நிலைபெற்றசொல்' எனப் பொருள் கொள்வதும், சுட்டிய என்பதற்கு வினையெச்சமாகப் பொருள் கொள்வதும் தவறில்லை யென்பதும், தெய்வம் சுட்டிய பெயர் நிலைக்கிளவிக்குத் 'தேவன்', 'தேவி' எனக் காட்டாமல் 'தேவு', கடவுள் என்பன காட்டவேண்டும் என்பதும் பெறப்படும்.

---

## பாலும் திணையும்

*"அலிப் பெயரின் நீக்குதற்குப் 'பெண்மை சுட்டிய' என்றும் மகடூஉப் பெயரின் நீக்குதற்கு 'ஆண்மை திரிந்த' என்றுங் கூறினார்"*

*"பெண்மை திரிதலும் உண்டேனும் ஆண்மை திரிதல் பெரும்பான்மையாகலான் 'ஆண்மை திரிந்த' என்றார்."*

*"பாலுள் அடங்காத பேடியையும் திணையுள் அடங்காத தெய்வத்தையும் பாலுள்ளும் திணையுள்ளும் அடக்கியவாறு"*

—*தொல். சொல். கிளவி. சூ. 4 சேனாவரையம்.*

# ஆப்பிரிக்கச் சுற்றுலா

## [கவியோகி சுத்தானந்த பாரதியார்]

"தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி"

என்ற திருவாசகம் தமிழகம் எங்கும் முழங்குகின்றது. தமிழர் கண்ட தனிப்பெரும் சமயம் சைவசித்தாந்தமே. சிந்து வெளியிலே முகிஞ்சதரையிலே 6000 ஆண்டுகளுக்கு முன்னிருந்த புதை பொருள்கள் கிடைக்கின்றன. அவற்றில் இலிங்கங்கள் கிடைக்கின்றன. காளைக் குறிகள் உள்ளன. வரலாறு காணுக் காலம் முதல் மனிதமரபு பயின்று வந்தது சிவயோக சாதனமே. பிற்காலம் எத்தனையோ ஆள்சுற்றிச் சமயங்கள் (Personality Cults) முளைத்துக் கிளைத்து உலகைப் பிரித்துச் சிதைத்தன. தீர்க்கதரிசிகள் எனப்படும் அருளாளரைச் சுற்றிச் சமயங்களும் கிளைச் சமயங்களும், குட்டிச் சமயங்களும் முளைப்பதால் வெவ்வேறு சமயங்கள் தோன்றி "எமது, உமது, அவரது" என்று மாந்தர் பிரிவினை பேசிச் சண்டையிட்டலைகின்றனர். இந்தச் சண்டைகளுக்கிடையே" "ஒன்றே குலமும் ஒருவனே தேவனும், ஓசை ஒலியெலாம் ஆனுய், நீயே உலகுக்கு ஒருவனுய் நின்ருய் நீயே" என்று ஒற்றுமை முரசு கொட்டி எழுந்தது திருநெறிச் சமயம்.

### 2. உள்ளம் துடித்தது

சென்ற அறுபது ஆண்டுகளாகச் சிவயோக தத்துவங்களை ஆராய்ந்தறிந்து பயின்று பெரும் பயனடைந்தேன். நான் பெற்ற செல்வத்தை மனித சமுதாயமும் பெற வேண்டும் என்று என்னுள்ளம் துடித்தது.

சைவசமயத்தை நிறைமுறையாக வாழ்ந்து பரப்பும் நிலையம் உண்டா என்று உலகெங்கும் சுற்றி ஆராய்ந்தேன். பல சமயங்களையும் கற்றறிந்து பார்த்தேன். அனைத்தும் சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நான்கு சாதன முறையில் அடங்குகின்றன. இச்சாதன முறைகளைப் பயின்று நின்று பரப்பும் சங்கம் ஏதாவது உயிர்த் துடிப்புடன் உண்டா என்று அங்குமிங்கும் சுற்றிப் பார்த்தேன். தருமபுரம், திருவாவடுதுறை முதலிய ஆதீனங்கள் சைவசமயத்திற்கே வாழுகின்றன. ஆனல், கிறிஸ்து சமயம் போலச் சைவப் பாதிரிமாரைத் தயாரித்துச் சிவமுழக்கம் செய்யும் சங்கம் உளதா என்று

பார்க்கும்போது 'டர்பான் சைவசித்தாந்த சங்கம்' என்முன் வந்தது.

## 3. சைவசித்தாந்த சங்கம்

ஒரு சமயத்திற்கு நான்கு உறுப்புகள் வேண்டும் (1) அருளநூல் (2) அதைப் பயின்று பரப்பும் அருட் பணியாளர் (3) அதை முறையாக விளக்கும் சமய நிலையம் அல்லது கோயில (4) அதற்கெனச் சின்னம். எடுத்துக் காட்டாக பௌத்தர் புத்தர், தம்மம், சங்கம், ஸ்வத்திகம் இந்நான்கையும் போற்றுவர். கிறித்துவர் பைபிள், பாதிரியார், சர்ச்சு, கிறிஸ்து சிலுவை இந்நான்கையும் போற்றுவர். இஸ்லாமியர் அல்லா, குரான், முகம்மது, பிறை, மசூதி. முல்லாக்களைப் போற்றுவர். அதேமாதிரி டர்பான் சைவசித்தாந்த சங்கம் சிவபெருமானையே இலிங்க வடிவில் வழிபடுகிறது. தேவாரத் திருமுறைகளை வேதமெனப் பயில்கிறது; சிவநெறி பரப்பும் திருத்தொண்டரைக் கொண்டுள்ளது. அழகான திருக்கோயில் களை எழுப்பி மிகமிக ஒழுங்காக வழிபாடு நடத்துகிறது. இந்தச் சங்கத்திற்கென அருளமுதும் மந்திர மாலையும் கோத்து அளித்துள்ளேன். இச் சங்கத் தொண்டர் ஆர்வமுள்ள சிவநேயர். சாதி வேறுபாடிலலாத ஆன்ம நேயா. அவர்கள் சைவவுணவே கொள்வார்; ஊனுண்பதில்லை; கட்குடிப்பதில்லை. தூய வெள்ளை அங்கியணிந்து வழிபாடு நடத்துகின்றனர். மந்திரம் தமிழே. இந்தச் சங்கத்தைக் கண்டவர் குருமணி சிவசுப்பிரமணியர். அவர் ஆங்கிலம், தமிழ், தெலுங்கு ஆகிய மும்மொழியறிஞர். அவர் திருவள்ளுவர் போல இல்லறத் துறவி; இரத்தினக் கம்பளம் நெய்து பிழைத்தவர். ஒவ்வொரு மூச்சுடனும் 'நம: சிவாய, நம: சிவாய! என்று ஐந்தெழுத்தை ஓதுகிறவர். இமைப்பொழுதும் நெஞ்சில் நீங்காது நடஞ் செய்யும் சிவநடராசனை வழுத்துகிறவர். பிற சமயங்கள் எழுந்து நம்மவரை ஒவ்வொரு நாளும் மாற்றி மயக்கும் மாயத்தைப் போக்க வீறுகொண் டெழுந்தவர். தெருத் தெருவாக இசைக் கருவிகளுடன் தொண்டர் சூழப் பாடி ஆடி ஆவேசமாகப் பேசி, நூற்றுக் கணக்கான இளைஞர்களைத் தூய சிவபத்தராக்கிய வீரர். இவ்வீறு கொண்ட சுப்பிரமணியர், தமது தொழிலையும் உதறித்தள்ளி - இரவும் பகலும் சைவநெறி விளக்கமே வாழ்வானார். மெய்யன்பர் பலர் அவரைச் சூழ்ந்தனர்; அவர் காட்டிய வழியே வாழ்ந்தனர்; சிவ பத்தியில் ஆழ்ந்தனர்; உமாபதி சிவம் என்னும் அடியார் சைவசித்தாந்த சங்கத்திற்கு 37, டெர்பி தெருவில் வசதியான கோயில் அமைககத் துணை செய்தார்; கருணானந்தர் ஆக்க வேலைகளை ஊக்கினார்.

சிவானந்தர் குரு பத்தியுடன் சங்க வழிபாட்டையும் நடத்தினர். அருணசலம் செயலாளராகி நாடெங்கும் சிவமணம் பரவச் செய்தார். தென்னுப்பிரிக்கா எங்கும் கிளை விரிந்து பரவி இன்று சைவத்திற்கு வேரும் கிளையும் மலரும் கனியுமாயிருப்பது இந்தச் சைவசித்தாந்த சங்கமே.

## 4. அழைப்பு

இச் சங்கத் தலைவர் என் நூல்களை நன்ருகப் பயின்றவர். அவர் என்னைத் தென்னுப்பிரிக்காவிற்கு வருந்தி யழைத்தார். அதற்கு முன்பே முனிசாமி பிள்ளை என்னும் தமிழ்ப் புலவர் தமிழும் சைவமும் பரப்ப வேண்டும் என்று என்னைப் பல்லாண்டுகளாக அழைந்து வந்தார். இன்னும் பலர் அழைப்புகள் வந்தன. என் நண்பர் வி. எஸ். சீநிவாச சாத்திரியார் நான் தென்னுப்பிரிக்காவில் சுற்றுலா நடத்த வேண்டும் என்று ஊக்கினர். ஆனல் இப்போதே காலம் கனிந்தது; கடமை வழிதிறந்தது.

## 5. பாஸ்-விசா-தொல்லை

தென்னுப்பிரிக்கா செல்வதென்ருல் பல இடர்களும் இடுக்கண்களும் இடைநிற்கும். நமது இந்திய அரசிற்கும் தென்னுப்பிரிக்க அரசியலுக்கும் தொடர்பு துண்டிக்கப்பட்டு ஊடல் நடக்கிறது. காரணம் அங்கே நிறவேற்றுமை, நர வேற்றுமை, புற வேற்றுமை, அகவேற்றுமைக ளெல்லாம் சட்டமணிந்து நடமாடுகின்றன. எனது பாஸ்போர்டில்கூட உகாண்டா தவிர எல்லா ஆப்பிரிக்க நாடுகளுக்கும் உரியது எனவே எழுதினர். "தென்னுப்பிரிக்கா" என்ற பெயரே யில்லை. உலக நாடுகளுக்கெல்லாம் செல்ல எனக்கு ஆணையுண்டு (Pass port). ஆப்பிரிக்க நாடுகளுக்கு மட்டும் ஆறு மாதமே தவணை குறித்தனர்.

நீர் எதற்காகச் செல்லுகிறீர்?

யோகக் கலை விளக்கத்திற் காகவே?

அரசியல் நோக்கமுண்டா?

இல்லை—அரசியல் கப்சுப்?

எப்படி விளக்கம் செய்வீர்?

யோகம், இந்தியக் கலாசாரம்,

உலக ஒற்றுமை குறித்து முறையான சங்கங்களில்

பேசுவேன், பாடுவேன், சாதன முறைகளைப் பயிற்று வேன், நானே செய்து காட்டுவேன்.

இதற்கு உமக்கு என்ன ஊதியம் கிடைக்கும்?

உழைக்கும் உவப்பே ஊதியம். எனது செலவு மிகச் சுருக்கம். நான் பணமூட்டை கட்டுவதில்லை. என்னுள் எழும் அறிவைக் கொட்டி அதன்பால் வரும் இன்ப துன்பங்களை இறைவனுக்கே பலிதானமாக்கி, எனது கடமையை நிறைவேற்றி வருவதே வழக்கம்.

உம் செலவுகளுக்கு ?

அன்பர் பொறுப்பு அவை?
நான் எதையும் கேட்பதுமில்லை, வேட்பதுமில்லை.

சரி உமக்கு ஆப்பிரிக்காவில் ஆறு மாதங்கள் சுற்ற உத்தரவு தந்தோம். இன்ன தேதி முதல் இன்ன தேதி வரையில்

மிக்க நன்றி.

இது இங்கே! இனி அங்கே காண்போம்.

டர்பானில் இந்தியக்குழு (Indian Council) உள்ளது. அதற்குத் தலைவர் டாக்டர் நாயுடு, ஜே. என். ரெட்டி முதலியோர். எனது வேண்டுகோளெல்லாம் இவர்களுக்கு அனுப்பப்படும்.

இவர்கள் "இவர் நல்லவர்; நமது நாட்டிற்கு வரலாம்" என்று உடனிசைவு எழுதுவர். அது பிரிடோரியாவில் உள்ள அரசியல் - இந்தியப் பகுதிக்குப் போகும். அங்கிருந்து 'மூன்றே மாதம் உத்தரவு. இவருக்கு உத்தர வாதமாக இவ்வளவு பணம் (ரூ.500) கட்டவேண்டும். குறித்த நாளில் இந்த நாட்டிலிருந்து புறப்பட்டுவிட வேண்டும் தாமதித்தால் ஜாமீன் பணம் போய் விடும். பெருந்தொல்லையாய்விடும். இந்திய அரசாங்கத்திட மிருந்து "இவர் மீண்டும் இந்தியாவில் புகலாம் (Reentry Certificate) என்று உறுதிச்சீட்டு வரவேண்டும்.

சரி உத்தரவுப்படி வெகுபாடுபட்டு ஓடுகிறோம், ஆடுகிறோம், நாடுகிறோம் - இன்னும் வாடுகிறோம்.

நீர் காலரா, பேதி, அம்மை நோய்களுடன் மஞ்சள் காய்ச்சலுக்கு (Yellow fever) குத்திக் கொண்டீரா?

ஓடுகிறோம் கிங் இன்ஸ்டிடுட், மஞ்சள் காய்ச்சலுக்கு ஊசி போட்டாகிறது ஓடுகிறோம் கார்ப்போரேஷனுக்கு. அம்மை பேதி காலராவுக்குக் குத்தியானது. இன்னும்,

நீர் மந்திரி, போலிஸ் தலைவர், உயர்நீதிபதி போன்ற பெருந்தகையாரிடமிருந்து நல்லொழுக்கச் சீட்டுடன், மீண்டும் இந்தியாவுக்கு வரத் தடையில்லை என்று எழுதி வாங்கி அனுப்ப வேண்டும்.

அப்படியே அனுப்பியாற்று.

சரி நீர் ரூ 64/- பெறும் டாலரே கொண்டு செல்லலாம். இருபது கிலோ தான் விமானத்தில் எடுத்துச் செல்லலாம்.

சரி உத்தரவு...இன்னும் என்ன?

மூட்டை சோதனை.

## 6. பம்பாயில்

சோதித்தாயிற்று. இந்திய விமானத்தில் ஒன்றரை மணி பறந்து பம்பாய் செல்லுகிறோம். அங்கே கிழக்காப்பிரிக்க விமான நிலையத்தைத் தேடிப் பிடித்து மூட்டையை வைக்கிறோம். நம்மிடம் உள்ள ரூபாவை டாலராக மாற்றுகிறோம். இரவு எங்கே தங்குவது? கிழக்காப்பிரிக்க விமானம் காலை நான்கு மணிக்கே புறப்படுகிறது அதுகாறும் தங்குவதற்கு இம்பீரியல் ஓட்டலுக்குப் பேசி ஏற்பாடு செய்கின்றனர்.

அந்த ஓட்டலில் தனி அறைகள், குளி வசதியுடன் அமைந்துள்ளன. மொத்த மொத்தமான தலையணைகள் எழுதப் படிக்க விளக்கு எல்லாம் உண்டு. நான் இரவு உண்ப தில்லை. ஆதலால் மெத்தையில் அமர்ந்து தியானித்தேன். இனி நடப்பதெல்லாம் இறைவன் செயல் என்றமர்ந்தேன். சிறிது கண்ணயர்ந்தேன்.

பூம் பூம் பூம்! மணி நான்கு. உந்து வண்டி பூமிடுகிறது. பல் விளக்கி முகங்கழுவிப் புறப்படுகிறேன். விமான நிலையத்தில் கிழக்காப்பிரிக்க அலுவலகத்தில் எனது பெட்டியைத் தந்து உத்தரவு முத்திரை பெற்று, பல சோதனைகளுக்குள்ளாகி விமானம் ஏறுகிறேன். காலை பத்து மணிக்கு விமானம் நைரோபி சேருகிறது.

## 7. நைரோபி

நைரோபி கெனியாவில் உள்ளது. அங்கே கெடுபிடி! எனது பெட்டியைச் சோதித்து வாங்கி வைத்துக்கொண்டனர். இதற்குள் மணி பதினொன்றானது. விமானச் சீட்டைக் காட்டி

ஜோஹான்பர்கு செல்லும் B. O. A. C. ஏற உத்தரவு வேண்டினேன். என்னுடன் பத்து நண்பரும் வேண்டினர். அலுவலர் நீண்ட நேரம் காக்க வைத்தனர். அதற்குள் நாம் ஏற வேண்டிய B. O. A. C. பறந்து போனது. இனி நாளைப் பத்து மணிதான் என்று கைவிரித்தனர்.

## 8. நீ தமிழ்! நான் தமிழ்!

அதுகாறும்? கீழே சென்றேன். அங்கே பயணிகள் உட்கார மெத்தை நாற்காலிகள் உள்ளன. அதோ உணவுச் சாலை உள்ளது. நவநாகரிகச் சாலை. ஊனும் கள்ளும் மிகுதி; ரொட்டி—பால், வேக வைத்த காய்கறி குறைவு. அதற்கும் உத்தரவு பெறவேண்டும். நான் முதலில் அனுட்டானங்களை முடிக்க வேண்டும். நைரோபியில் எங்கெங்கே பார்த்தாலும் ஆப்பிரிக்க மக்கள். ஆசியாவைத் தாண்டி ஆப்பிரிக்காவில் அடியெடுத்து வைத்திருக்கிறேன்.

நாட்டைப்பற்றி அறிய வேண்டுமே. யாரை அணுகுவது? எங்கே செல்லுவது? எங்குச் செல்ல வேண்டுமானாலும் ஆணையாளர் சீட்டு வேண்டும். முதலில் குளிக்க வேண்டுமே. குளியறை தேடிப் புகுந்தேன். அங்கே இரண்டு கெனியாக்காரர் காவல் காக்கின்றனர். கழியலுக்கு (Lavatory) செல்லவும் அவர்கள் தலையசைக்க வேண்டும். காணிக்கையும் உண்டு. நான் சென்னையிலிருந்து உளுந்துவடை செய்து வந்தேன். அதை அவர்களிடம் தந்தேன். "சுவைத்து நகைத்து

Very Good! What is this?

Tamil Cake.

What is Tamil?

Tamil is Sweet

Yes You Tamil

You too Tamil

மிக நன்று—இது என்ன? தமிழ் அப்பம்—தமிழ் என்றால் இனிமை—ஆம் நீ இனிமை—நீயும் இனிமை—தமிழ்.

இவனே கெனியா தோட்டி—கழியல், குளியல் காவல்காரன். என் முதல் நண்பன். கழியலில் காகிதச் சுருளை

உண்டு; எனக்கு நிரம்பத் தண்ணீர் தேவை. அவனுக்குப் பணம் தந்தேன். "நீ தமிழ்; பணம் வேண்டாம்" என்றான். ஒரு வாளி தண்ணீரும் பிளாஸ்டிக் குவளையும் தந்தான். அலம்பு வேலை முடிந்தது. பிறகு ஒரு துண்டும் தந்தான். சவர்க்காரமும் தந்தான். பொழிவி (Shower)யைத் திருகி விட்டுக் குளித்துத் துடைத்து நீறுபூசி சந்தனம் குங்குமம் வைத்துக் கொண்டேன். பிறகு ஒரு நாற்காலியில் அமர்ந்து அக்கமாலையை உருட்டி, "சுத்த சக்தி ஓம் சிவம்" செபம் செய்து உள்ளடங்கியிருந்தேன்.

## 9. இரண்டு பெண்டிர்

என்னையே ஓர் இளம் பெண் பார்த்துக் கொண்டிருந்தாள். பிறகு அருகே வந்தாள். அவளுடன் மற்றொரு பெண் வந்தாள்.

"You are Swami; See my hand......"

**நீர் சுவாமி; என் கைரேகை பாரும்.......**

இந்திய யோகிகள் ரேகை சோதிடம் பார்த்து அவரவர் நடை விதிகளைச் சொல்லுவார்கள் என்ற நம்பிக்கை எங்கும் உள்ளது. கெனியா ஆங்கிலேயர் ஆட்சியில் முன்னே இருந்த தால் ஆங்கிலம் அங்கே பரவியது. நாடு விடுதலை பெற்ற பிறகு அதற்குரிய தாய்மொழியான சுவாலி வளம் பெறுகிறது.

அங்கே பலர் ஆங்கிலம் நன்றாகப் பேசியதால் நான் நெருங்கிப் பழக முடிந்தது. இந்த இரண்டு பெண்களும் நைரோபி விமான நிலைய ஊணகச் சீட்டுக் கொடுப்பதுடன் விமானச் சீட்டுகளையும் சோதிப்பார்கள். மறுவிமானம் வர நீண்ட நேரம்இருந்தது. ஆதலால் அவர்கள் என்னுடன் அன்பாக அளவளாவினர். அவரால் நாட்டு வளப்பம் அறிந்தேன்.

(தொடரும்)

---

"நமச்சிவாய வாஅழ்க நாதன்றாள் வாழ்க
இமைப் பொழுதும் என்னெஞ்சில் நீங்காதான் றாள்வாழ்க"

# 'அவ்வை' சண்முகம் வாழ்க்கை நெறி

[கவிஞர் புத்தனேரி ரா. சுப்பிரமணியம்]

'அவ்வை' டி. கே. சண்முகம் அவர்களின் நாடக வாழ்க்கை மிகச் செவ்வையானது.

இருபதாம் நூற்றுண்டின் இணையற்ற நாடகக் கலைஞர்கள் டி. கே. எஸ். சகோதரர்கள் என்ற புகழுக்குக் காரணமானவர் திரு. சண்முகம். இவர் பிறந்த நகர்: திருவனந்தபுரம். பிறந்த நாள் 26-4-1912. தந்தையார் பெயர் திரு. கண்ணுசாமி பிள்ளை. இவரும் நடிகரே. தாயார் பெயர் சீதையம்மாள்.

நாடக நால்வரில் திரு. சண்முகம் மூன்றும் பிள்ளை. சங்கரன், முத்துசாமி இருவரும் இவருக்கு மூத்தவர்கள். திரு. பகவதி இளையவர்.

திரு. சண்முகம் தமது தெய்வமாகப் போற்றிய ஆசிரியர் தவத்திரு. சங்கரதாசு சுவாமிகள். சதாவதானம் தெ. பொ. கிருட்டிணசாமிப் பாவலர், எம். கந்தசாமி முதலியார் ஆகியோரும் திரு. சண்முகம் அவர்களின் நாடக ஆசிரியர் களாக—இயக்குநர்களாக—விளங்கினுர்கள்.

தம் ஆருவது வயதில் நடிகராகச் சேர்ந்தார்—சண்முகம். அதுமுதல் 55 ஆண்டுகள் நீண்ட நெடுங்காலம் நாடகக் கலை வாழ்வில் நல்ல பல புதுமைகளைச் செய்து தரம் வளர்த்த பெருமை இவருக்கே உரியது.

இவர் நடித்த பல்வகைச் சுவைமிக்க நாடகங்கள் 74; ஏற்ற தலைமைத் தனிப் பாத்திரங்கள் 109. மேனகா முதல் கப்பலோட்டிய தமிழன் வரை பல திரைப் படங்களிலும் இவர் முக்கிய பாகம் ஏற்றுப் புகழ்பெற்றுர்.

முத்தமிழ்க் கலா வித்வ ரத்தினம், அவ்வை, நாடக வேந்தர், நடிகர்கோ, கலைமாமணி, நாடகத் தொல்காப்பியர், பத்மஸ்ரீ (தாமரைச்செல்வர்) முதலானவை இவர் பெற்றசிறப்புப் பட்டங்கள்.

இலங்கை, மலேயா, பம்பாய், தில்லி, கல்கத்தா, நாகபுரி, பெங்களூர், திருவனந்தபுரம் முதலான இடங்களிலெல்லாம் இவர் தம் நாடகக் குழுவோடு சென்று சிறந்த நாடகங்கள் நடத்தி மக்களைக் கவர்ந்து பெரும் புகழ் ஈட்டினுர்.

அறிவு அபிவிருத்தி சங்கம், தமிழ் எழுத்தாளர் சங்கம், தென்னிந்திய நாடகச் சங்கம், தமிழ்நாடு சங்கீத நாடகச் சங்கம், தில்லி சங்கீத நாடக அகாடமி, தமிழ்க் கலை மன்றம், தமிழ் வரலாற்றுக் கழகம், தமிழ் வட்டம், சமாதானக் குழு, சென்னை நாட்டிய சங்கம், நடராஜா கல்விக் கழகம், சங்கரதாசு சுவாமிகள் நினைவு மன்றம், இளங்கோ கலைக்கழகம் முதலான பல கலை மன்றங்களில் பொறுப்பான பதவிகள் ஏற்றவர் சண்முகம்.

பாரதியார் சங்கம், தமிழரசுக் கழகம் இவற்றின் பொதுச் செயலாளராக இவர் ஆற்றிய பணிகள் சிறப்பாகக் குறிப்பிடத் தக்கவை. 'தமிழ் நாடகத் தலைமை ஆசிரியர்', 'நாடகக் கலை', 'நெஞ்சு மறக்குதில்லையே', 'எனது நாடக வாழ்க்கை' முதலானவை இவர் எழுதிய நூல்கள். நாடகக் கலை பற்றி வானொலிக்காகவும் ஏடுகளுக்காகவும் இவர் எழுதிய கட்டுரைகள் மிகப்பல. அவற்றுள் பல நூல் வடிவில் வெளியிடுதற்கான தகுதி உடையவை. இவரது மணிவிழா 26-4-72 இல் பெருஞ் சிறப்புடன் நடைபெற்றது.

மாநிலம் பயனுற வாழ்ந்த இவர் 15-2-197?-இல் மறை வெய்தினர்; இவரது கலைவாழ்வு நிறைவெய்தியது; ஆருத் துயர்க் கடலில் ஆழ்ந்தது கலையுலகம்.

திரு. தி. க. சண்முகம் அவர்களின் வாழ்க்கைச் சிறு குறிப்பு இவ்வளவுதான். ஆனல், இவர் மேற்கொண்ட வாழ்க்கை நெறி இணையற்றது. ஏனையோர் அனைவருக்கும் வழி காட்டி. நீண்ட நெடுங்காலமாகத் திரு. டி. கே. எஸ். அவர்களின் புகழைப்பற்றி அறிந்த எனக்கு 1947 இல் தான் இவரோடு நெருங்கிப் பழகி உள்ளன்புத் தொடர்பு கொள்ளும் நிலை ஏற்பட்டது. ஏறத்தாழக் கால் நூற்றுண்டு காலம் இவரது கலை—வாழ்க்கையோடு இரண்டறக் கலந்து பழகியவன் யான். என்னை இவர் தம் ஐந்தாம் உடன் பிறப்பாகவும் ஆருயிர் நண்பனுகவும் கருதிப் பழகிய நட்புறவை எழுத்தில் வடிக்க இயலாது. கைம்மாறு கருதாத அந்தரங்கத் தனிச் செயலாளன் போலவே நான் இவரது ஒவ்வொரு கலைப் பணியிலும் இணைந் திருந்தேன்.

திரு. சண்முகம் தம் கலைவாழ்வில் மேற்கொண்ட முக்கிய நெறிமுறைகள் வருமாறு:

எங்கும் ஒழுங்குமுறை—எதிலும் ஒழுங்குமுறை என்பது இவரது உறுதியான கோட்பாடு.

தமக்கு வரும் கடிதங்களைக் கவனமாய்ப் படிப்பார்; தரம் பிரிப்பார்; மறுமொழி எழுத வேண்டியவற்றிற்குத் தாமே தக்கவாறு தமக்கே உரிய பாணியில் அழகான பதில் வரைவார். கடிதங்களையும், செய்தி ஏடுகளையும், பிற இதழ்களையும் இவர் அடுக்கி வைத்திருந்த அழகே தனி; ஆங்கிலக் கடிதங்களை என்னிடம் அவ்வப்போது காண்பித்து மறுமொழி எழுதச் செய்து, கோப்பினில் சேர்த்து வைப்பார்

காலைக் கடன்களை முடித்தபின் முக்கால் மணி நேரம் சுதிப் பெட்டியும் வைத்துக்கொண்டு, பன்னிரு திருமுறைப் பாடல்களைத் தேர்ந்தெடுத்துத் தனிமையில் இனிமையாக மெய் மறந்து பாடுவார். 'பிடியதனுரு உமை' என்று தொடங்கிக் "கல்லாப் பிழையும் கருதாப் பிழையும்" என்ற பாடல் ஈருகப் பண் முழக்குவது இவரது வழக்கம். பாடும்போது இவரது இனிய குரலுடன் ஊதுபத்தியின் மணமும் அனைவரையும் கவரும்.

இவர் புலால் உணவை அறவே மறுத்தவர். இவருடைய உற்ருர் உறவினர் பலர் அசைவ உணவாளர்களாயினும் இவர் தம் குடும்பத்தினரும் திரு. பகவதியின் குடும்பத்தினரும் சைவ உணவாளர்களாகத் தனித்து விளங்குகின்றனர்.

அளவறிந்து நேரந்தவருமல் உணவு கொள்ளும் நற்பழக்கம் உடையவர் திரு சண்முகம். நினைத்த நேரத்தில் எதையாவது மென்று விழுங்க வேண்டுமென்ற பரபரப்போ ஆவலோ இவரிடம் என்றும் கிடையாது.

உணவில் மட்டுமன்று; எந்தக் காரியத்திலும் இவர் விரும்பத் தகாத பரபரப்போ ஆவலோ கொள்வதில்லை. எதனையும் ஆறுதலாக அமைதியாகச் சிந்தித்துத் தெளிவான முறையில் செயல்படும் பண்பு வாய்ந்தவர்.

மாசுபடாத வெளுத்த உடைகளை நிலைப்பேழையிலிருந்து மெதுவாக எடுத்து அமைதியாக அணிந்துகொண்டு இவர் வெளியே புறப்படும் பண்பும் வியப்பாக இருக்கும். பேழையிலிருந்து எந்தப் பொருளையும், துணிமணிகளையும் அவசர அவசரமாகக் களைந்து எறிந்து, அப்படி அப்படியே போட்டு விட்டுக் கிளம்பும் பழக்கம் இவரிடம் கிடையவே கிடையாது.

வெளியிலிருந்து வீட்டுக்குத் திரும்பிய பின்னும் உடைகளை முறையாக மடித்துக் கொடியில் தொங்கவிடுவார்.

துயில் கொள்ளச் செல்லும் பண்பிலும் அமைதி தவழும். தலையணை ஒருபக்கம், போர்வை ஒருபக்கம் என இவரது படுக்கை என்றுமே சுருங்கிச் சிதறிக் கிடந்ததை நான் கண்டதில்லை.

தம் நாடகக் குழுவில் சம்பந்தப்பட்ட எல்லாரையும் தம் பிள்ளைகளாகவே கருதி மதித்தார். நாடக நாளன்று ஒப்பனை அறைக்குள்ளே சென்றவுடனே "பகவதி! பிள்ளைக ளெல்லாம் வந்து விட்டார்களா?" என்று நடிகர்களைப் பற்றி இவர் வினவுவது வழக்கம்.

ஒத்திகையின் போது பாடங்களை இவர் சொல்லிக் கொடுக்கும் முறையும் நடித்துக் காட்டும் முறையும் இவர் இணையற்ற நல்லாசிரியர் என்ற உண்மையைப் புலப்படுத்தும்.

எந்த நேரமும் சிரித்த முகத்தோடு விளங்கும் இவரது கனிந்த பார்வைக்கு முன்னால் எந்த நடிகரும் உட்காருவதற்கே தயக்கம் கொள்வதுண்டு. அவ்வளவு குரு பத்தி! எடுத்துக் காட்டாக, இவருடைய மாணவர் கலைஞர் திரு. ஏ. பி. நாகராஜன் இவரது குழுவை விட்டுப் பிரிந்து நெடுங்காலம் ஆகிவிட்ட போதிலும், இப்போது அவர் புகழ் வாய்ந்த திரைப் பட இயக்குநர், வசனகர்த்தாவாகத் திகழினும் திரு. டி. கே. எஸ். அவர்களுக்கு நேர் எதிரே நின்று பேசவோ, அமரவோ துணியாத குரு பத்தியைப் பன்முறை கவனித்துள்ளேன்.

பள்ளிப் படிப்பு எதுவும் இன்றி நாடகத்தையே பள்ளியாகக் கொண்டு, தாமாகவே தமிழ் பயின்று, நூலறிவும், கேள்விச் செல்வமும் பெற்றுச் சிறந்த எழுத்தாளராகவும், பேச்சாளரா கவும் உருவானவர் சண்முகம்.

வானொலிப் பேச்சு, பத்திரிகைகளுக்குக் கட்டுரை. எது வாயினும் அதைப் பற்றி நன்கு சிந்திப்பார். என்னோடு மனம் திறந்து கருத்துக்களைப் பொழிவார். நான் சொல்லும் கருத்துக்களையும் ஆவலோடு கேட்டுக் கொள்வார். பின் ஆர அமர இருந்து எழுதுவார். எழுதிய பின் மீண்டும் என்னிடம் படித்துக் காண்பிப்பார். நான் 'அருமை' என்று பாராட்டுவேன். அவர் உள்ளம் பூரிப்பார். இப்படி எத்தனையோ இனிய நாள்கள் என் நினைவுக்கு வருகின்றன.

தம் நூல்களுக்கு முன்னுரை வேண்டு மென்று நண்பர்கள் வருவார்கள். அந்த நூல்களை என்னிடம் கொடுத்துப் "படித்துப் பார்த்துக் குறிப்பு எழுதுங்கள்" என்பார். நான் எழுதிக் கொடுப்பேன். அவர் உடனே கருத்தினைச் சொல்ல மாட்டார். அவரே ஒரு முறை நூல் முழுவதையும் நன்கு படிப்பார். பின் என்னை அழைத்து "உங்கள் கருத்துக்கள் மிகவும் சரி, நான் நினைப்பதை அப்படியே எழுதியிருக்கிறீர் களே!" என்று வியந்து பாராட்டுவார். கலை, இலக்கியம் போன்றவற்றில் எங்கள் இருவருடைய கருத்தும் ஏறக்குறைய

ஒன்றாகவே இருக்கும். அரசியல் காரியங்களில் மட்டும் நான் அவர் போக்கில் தலையிடுவதில்லை. எனது வரம்பறிந்து ஒதுங்கிக் கொள்வேன்.

'நெஞ்சு மறக்குதில்லையே' 'நாடகக்கலை' முதலான நூல்களை அவர் எழுதும்போது உடனிருந்து உதவும் பேறு எனக்குக் கிடைத்தது. இவற்றில் சில பகுதிகள் என் இல்லத்தில் வைத்தே எழுதப் பெற்றன என்பதில் எனக்குப் பெருமை.

1953-க்குப் பின் புதிய நாடகங்கள் உருவாக்கிய போதெல்லாம் நாடகச் சுவடிகளைப் படித்து ஆராய்ந்து காட்சிகளை வகுப்பதற்கு, திரு. சண்முகம் அவர்கள் என்னையும் திரு. பகவதி அவர்களையும் அழைத்துக்கொண்டு தனியே உணவு விடுதியின் அறையொன்றிலோ, வேறு தனி இடத்திலோ சில நாள்கள் தொடர்ச்சியாக ஆய்வுப் பணி செய்து முடிவுகாண்பார்.

எந்தச் சிறப்பு நிகழ்ச்சிகளுக்கும் அழைப்பு வந்தால் அதனை மதித்து வருகை தந்து பெருமைப் படுத்தும் பண்பிலும் இவர் சிறந்து விளங்கினார். வரஇயலாமற்போனால் கட்டாயம் செய்தியாவது அனுப்பி வைக்கத் தவற மாட்டார்.

இவர் கலைமாமணி மட்டுமல்லர்; தலை சிறந்த இரசிக மாமணியுங்கூட. முத்தமிழ்க் கலைகளை இவர் மனமாரச் சுவைத்து வாயாரப் பாராட்டுவார். எந்த அரங்கிலும் இவரது வெண்கலச் சிரிப்பொலி தனியே செவிகளைக் கவரும். தொழில்முறை நடிகர்களை மட்டுமன்றிப் பயில்முறை நாடக மன்றங்களையும் நடிகர்களையும் இவர் உளமாரப் பாராட்டி ஊக்கம் கொடுத்த சிறப்பைக் கலையுலகம் நன்கறியும். உடனுக்குடன் முக்கிய நிகழ்ச்சிகளின்போது நான் எழுதிக் கொடுக்கும் பாடல்களையும் பழைய இலக்கியப் பாடல்களையும், அக்கணமே பண்ணமைத்துப் பாடி அவையோரை மெய் சிலிர்க்க வைப்பார்.

இரவு எவ்வளவு நேரம் ஆனாலும் தெளிவாகச் சுவையாக நாட்குறிப்பு எழுதிவிட்டுத்தான் துயில் கொள்ளச் செல்வார். இவரது 25 ஆண்டுகால நாட்குறிப்பு ஒரு வரலாற்றுக் களஞ்சியம் போலவே பயன்படக் கூடியது.

இந்த நாட்குறிப்புகளையும், இவரோடு இணைந்து பழகிய இருபத்தைந்து ஆண்டு அனுபவத்தையும் கொண்டு திரு. பகவதி அண்ணாச்சி அவர்களின் துணையோடு, திரு. சண்முகம் அவர்களின் "எனது நாடக வாழ்க்கை" என்ற நூலின் இரண்டாம் பாகத்தை யானே எழுதி முடிக்க எண்ணியுள்ளேன்.

1957 இல் திரு அவ்வை சண்முகம் நாடகக் குழுவினருடன் யானும் சிங்கப்பூர், மலேயாவில் ஏறக்குறைய நான்கு மாதங்கள் சுற்றுலா மேற்கொள்ளும் பேறு பெற்றேன். இந்தக் கலையுலாவைப் பற்றி, திரு. டி. கே. எஸ். அவர்களின் பெயரையும் இணைத்து எழுதப்பெற்ற பயண நூல் இப்பொழுது அச்சிலுள்ளது. இந்த நூலின் முதல் ஆறு படிவங்களுக்குப் பிழை திருத்தும் பணியினைக்கூட மருத்துவமனைக்குச் செல்லுமுன் திரு அவ்வை அவர்கள் ஆவலோடு நிறைவேற்றியது குறிப்பிடத் தக்கது. இந்த நூலில் எனது பெரும் பொறுப்பைப் பற்றி ஒரு முன்னுரையைத் தாமே எழுதித்தர விரும்புவதாகத் திரு சண்முகம் கூறியிருந்தார். நூலுக்கு முன்னுரை எழுது முன்பே இவரது கலைவாழ்வுக்கு முடிவுரை எழுதப்படுமென்று யாரும் எதிர்பார்க்கவில்லை.

அரிய நூல்களைக் கண்ணும் கருத்துமாகப் பேணி வந்த இவரது நூலகத்தில் ஏறக்குறைய மூவாயிரம் நூல்கள் உள்ளன. மிகப் பழைய நாடக நூல்கள் இந்த நூலகத்தில் உள்ளபடியால் திரைப்படத் துறையில் உள்ளவர்கள் பழைய சுவடிகளைத் தேடி இவரிடம் வருவது வழக்கம். சுவடிகள் மட்டுமல்ல, பழைய நாடகக் கலைஞர்களின் படங்களும் இவரிடம் தான் பத்திரமாகச் சேமித்து வைக்கப் பட்டுள்ளன.

மேற்கண்ட நெறிமுறைகளை விடாமல் பின்பற்றி வந்த பெருமையில் இவருக்கு ஈடாகச் சொல்ல வேறு எவரும் இலர் என்று திண்மையாகச் சொல்லலாம்.

தமிழ்நாடு அரசு ஏற்பாடு செய்த சுற்றுலா வார விழாவில் புது உட்லன்சு உணவு விடுதியில் 20—1—1973 இல் அயல் நாட்டுப் பயணிகளுக்காக அளிக்கப்பட்ட வரவேற்பு விழாவே திரு சண்முகம் கலந்து கொண்ட கடைசிப் பொது நிகழ்ச்சி. மாண்புமிகு அமைச்சர் திரு மன்னை நாராயணசாமி அவர்கள் தலைமையில் நடந்த இவ்விழாவில் திரு சண்முகம் அவர்களின் சிற்றுரையும் ஓர் இலட்சியப் பேச்சாகவே இருந்தது. தமிழகக் கலைஞர்களை வெளிநாடுகட்கு அனுப்பிக் கலையின் பெருமையைப் பரப்புவதற்காக அரசு ஏற்பாடு செய்ய வேண்டுமெனத் திரு. சண்முகம் வலியுறுத்தினர்.

முத்தமிழ் வித்தகரான திரு. தி. க. சண்முகம் அவர்களின் கலைவாழ்க்கை நெறி முறைகளைக் கலைஞர்கள் மட்டுமன்றித் தமிழ் அன்பர்கள் அனைவருமே இயன்றவாறு பின்பற்றுதல் சாலச் சிறந்ததாகும்.

# என் சண்முகம் எங்கே?

ஔவை சண்முகம் என்னைத் தனியாக விட்டுவிட்டுப் போய்விட்டார்! ஆம்; என்னை அழவைத்து விட்டு, அவர் அமரராகிவிட்டார்!

சண்முகத்தை மறக்கத்தான் முயல்கிறேன்; என் மனம் மறக்கமாட்டேன் என்கின்றது!

என்னை வழியனுப்ப வேண்டிய என் இளவலை, நான் வழியனுப்பி விட்டேன்! 67 வயதில் என்னால் தாங்கிக்கொள்ள இயலாத இந்தத் துன்பத்தை ஏனோ இறைவன் எனக்குத் தந்துவிட்டான்!

என் தம்பி சண்முகம் தன் தம்பி பகவதி பின் தொடர கம்பீர நடைபோட்ட அந்தக் காட்சியை இனி எப்போது காண்பேன்? அண்ணனை இழந்து வருந்தும் அந்தத் தம்பிக்கு ஆறுதல் கூறுவதெப்படியோ? நான் ஆறுதல் பெற்ற பின்பல்லவா அவருக்கு ஆறுதல் கூறவேண்டும்? நான் ஆறுதல் பெறுவதெப்போது?

தங்கள் பொதுச் செயலாளரின் பிரிவால் வேதனைப்பட்டு விம்மியழும் கழகத்தோழர்களுக்குத்தான் நான் எப்படி ஆறுதல் கூறுவேன்? என் கண்ணீர் நின்ற பின்னல்லவா, அவர்கள் கண்ணீரை நான் துடைக்க முடியும்? அவர்கள் தங்கள் கண்ணீரைத் தாங்களே துடைத்துக் கொண்டு ஆறுதல் பெறுவார்களா? அதைத் துடைக்கும் ஆற்றல் என் கைக்கு இன்னமும் வரவில்லையே!

"தோழர்களே! நம்முடைய பொதுச் செயலாளர் தன் வாரிசாகத் தம் தம்பி பகவதியை நமக்குத் தந்துவிட்டுப் போயிருக்கிறார். அவரைப் பயன்படுத்தி மகிழுங்கள்.

நம் சண்முகனார் நாடகங்களில் நடித்துக் கொண்டிருந்த போதே 1961இல் நடந்த 'தமிழ்நாடு' பெயர்ப் போராட்டத்தில் கலந்துகொண்டு, கைதியானார்.

இருதயம் பலவீனப்பட்டிருந்த நிலையிலும்—உணர்ச்சி வயப்படத்தக்க நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளக் கூடாதென்று மருத்துவர்கள் எச்சரித்திருந்தும் 1970 ஆகஸ்டு 20இல் மாநில சுயாட்சிப் போரில் கலந்துகொண்டு கைதியானார்.

அமரராகிவிட்ட கலைஞருக்கு—கழகப் பொதுச் செயலாளருக்கு—என் இணை பிரியாத் தோழருக்கு அஞ்சலி செலுத்துகின்றேன்.

வாழ்க, ஔவை சண்முகம் புகழ்!

—ம. பொ. சிவஞானம்

*செங்கோல், 25-2-73.*

# கப்பல் கவிழ்ந்தது!

(அ. செகதீசன்)

வீணைமுரிந் திற்றதுவோ! யாழை மீட்டும்
விரல் ஒடிந்து விட்டதுவோ! கடவுட் காகும்
காணிக்கை கைதவறிச் சிதைந்த தேயோ!
கலைக்காட்சி மூடியதோ! சிரிப்புக் கொத்து
வாணியவள் நாணிழந்து விம்மி ளுளோ!
வான்மணிகள் பொடிந்தனவோ! சாவு வெள்ளம்
சாணிருந்து தலைசாய்த்து விட்ட தேயோ!
சண்முகமே! தவறினையோ! ஐயோ! ஐயோ!

தென்றல்மகள் தீய்ந்தாளோ! வைரத் திங்கள்
தேகமெலாம் கரிந்தாளோ! மணிவி ழாவின்
மன்றல்வினை மாறியதோ! தேவா ரத்தேன்
மடைஅடைந்து போனதுவோ! கந்த கோட்ட
முன்றிலெலாம் அழுதகண்ணீர்க் குளமோ! தங்க
முத்தமிழும் தெருத்தெருவாய் அலைந்த தேயோ!
வென்றுவந்த தேர், பாடை யாக லாமோ!
விதிப்பகையே! விளக்கணைத்துப் படிக்க லாமோ?

கூற்றுவனே இதயம்உனக் கில்லை என்றே
கொள்கையுரம் கொண்டதமிழ்ச் சண்மு கத்தின்
மாற்றமிலா இதயத்தில் கையை வைத்தாய்!
"மனிதன், இவன் கலையுலகில் புகழின் உச்சி
ஏற்றத்தில் மரணமிலா வாழ்வு கண்டான்!"
என்றெழுந்த பொருமையினல் எமனே! ஆருச்
சீற்றத்தில் இக்கொடுமை செய்ய லாமா?
சீ! சீ! நீ பழிகொண்டாய், செத்தே போவாய்!

ஆதிமுதல் நாடகத்தின் தலைவ ரேருய்
அருந்தொண்டே ஆற்றிக்கொண் டிருந்தாய்! இன்றே
பாதியிலே நாடகத்தை முடித்தெங் கேயோ
பறந்திட்டாய்! கலைமகள்தான் நாளும், எந்தத்
தேதியிலே நீ திரும்பி வருவாய் என்றே
திசைநோக்கு வாள்! இல்லை; பின்தொ டர்வாள்
போதியின்கீழ் அமர்ந்ததனி முதல்வன், ஞான
புத்தன்போல் நின்னிதயம் அடைக சாந்தி!

—செங்கோல். 25—2—73

# இரங்கற்பாக்கள்

## என்று நாம் காண்போம்

**ஔவை நடராசன்**

பெண்முகத்தை ஔவைப் பெருமாட்டி தன்னினிய
தண்முகத்தைக் காட்டித் தமிழ்தந்து—மண்முகத்தில்
நின்றவியற் பண்கூத்தை நேர்வைத்த சண்முகத்தை
என்றுநாம் காண்போம் இனி.

## பேரிழப்பு

**கவிஞரேறு வாணிதாசன்**

வீட்டகத்து நல்லொளியைப் பிறப்பிக்க வேண்டி
வெவ்வேறு நோக்கோடு கலையழகி ஞேடு
*நாட்டகத்தை மக்கட்கு நனிதந்த மேலோன்
நடிகமணி நம் தி க. சண்முகமாம் ஔவை !
கூட்டகத்தை விட்டெங்கோ புள்பறந்த தைப்போல்
கூற்றுவனின் கொடுமைக்கே ஆளாகி ஈமக்
காட்டகத்தை அடைந்தனனே ! உளந்தாங்கப் போமோ !
கலையுலகப் பேரிழப்பு ! கண்கலங்கு தந்தோ !

## தண்டபாணிக் குரவன் மாண்பார் சீடன்

**புலவர் தி. மு. சங்கரலிங்கம்**

அவ்வையெனும் நாடகத்தில் அவர்பெருமை தனைவிளக்கி
அப்பேர் கொள்ளும்
செவ்வையுறு தி. க. சண் முகப்பெயரோய்! நடிப்பிசையில்
தேர்ச்சி பெற்றோய் !
பவ்வநிகர் அன்புடையாய் ! பத்மஸ்ரீ விருதுற்றாய் !
பகர்மெய்ப் பண்போய் !
இவ்வைய கத்தினிடை நினைக்காணல் இனியுண்டோ ?
இயம்பு வாயே.

வண்ணமுடன் தமிழ்க்கவிசொல் தண்டபா ணிக்குரவன்
மாண்பார் சீடன்
விண்ணவர்சொல் சங்கரதா சுப்புலவன் அருள்மாண்பு
மேவப் பெற்றாய் !

---

*நாடகம் என்பது எதுகை நோக்கி நாட்டகம் எனலாயிற்று.

மண்ணவர்கள் அப்புனிதர் சீரறிய விழாச்செய்கால்
மகிழ்ந்து வந்துன்
எண்ணமதை எடுத்துரைத்தாய்! இன்றவரோ டொன்றலுற்றாய்!
என்றும் வாழி !

## அகிலம் போற்றும் செவ்வைக் கலைஞர்

### தி. செ. முருகதாச சுவாமிகள்

கலையுலகில் நாடகநற் கலையைமிக வளர்த்துக்
கவின்ஔவை ராசரா சச்சோழன் கதையை
நிலைநிறுத்திச் சங்கரதாஸ் மாதவன் பேர்உலகில்
நிலவிடப்பல் நாடகத்தை நடித்தவன்றன் உருவச்
சிலைமதுரை யினில்நிறுவித் தண்டபா ணிப்பேர்
திகழ்பெரியோன் றன்விழா சென்னையினில் நிகழ்கால்
உலைவிலன்புத் தம்பிபக வதியுடனே வந்திட் (டு)
உரையாற்றும் டி. கே. சண் முகம்உலகில் மறைந்தார்.

ஔவைசண்மு கப்பேர் அகிலம் சொலஇருந்த
செவ்வைக் கலைஞர்தந் தேகம்விட்—டிவ்வையம்
ஏங்கவிண்ணோர் நாடகத்தின் ஏற்றமறி யச்செய்ய
நீங்கலுற்றார் விண்ணூரி னில்.

## என் செய்வோம்!

### ஞா. தேவநேயப் பாவாணர்

இலக்கியமும் வரலாறும் எல்லாரும் இன்பமிகத்
துலக்கமுடன் கண்டறிந்து தொல்பெரியார் வாழ்ந்தபொது
நலக்குறிக்கோள் கொண்டொழுக நடித்தகலைச் சண்முகனார்
கலக்கமுற நமைப்பிரிந்த கடுந்துயருக் கென்செய்வோம்!

செவ்வைநடிப் புடனிசையும் சேர்தமிழ ரில்லையெனும்
கவ்வையற எவ்வகையுங் களங்கொண்ட முத்தமிழர்
அவ்வையிடைச் சண்முகனார் அரியசெய லோவியனார்
எவ்வமுற நமைப்பிரிந்தார் இணையில்லார் என்செய்வோம்!

தமிழ்நாடு தமிழாட்சி தான்பெறவே காலமெலாம்
தமிழோடு தமிழாகித் தமிழரசுத் தூணாகி
நிமிரோசை மரைத்திருவாம் நெடுமொழிசேர் சண்முகனார்
அமிழ்தான தமிழ்கவல அகன்றுவிட்டார் என்செய்வோம்!

# அண்ணனே வெண்ணீருனார் !

குு. மா. பாலசுப்பிரமணியம்

நடிப்புக்கோர் இலக்கணமாய்த் திகழ்ந்த மன்னன்
 நற்பண்பின் நிலைக்களனாய் இருந்த அண்ணன்
படிப்பினையால் பலகலைஞர் நடிகர் கூட்டம்
 படைத்தபெருங் கல்லூரிக் கிணையோர் ஆசான்
துடிப்புடனே தமிழினத்தின் உரிமை காக்கத்
 துள்ளிநின்ற தி க.சண் முகத்தின் நெஞ்சத்
துடிப்பினிலே கோளாறு தீர்ந்த தென்றே
 துணிவுற்றோம்; நொடியினிலே துவண்டா ரந்தோ !

பார்வையிலே மனம்கவரும் விழிகள் எங்கே?
 பாதிநெற்றி வேர்வைபடும் வெண்ணீ றெங்கே ?
ஆர்வமுடன் உரையாடும் செவ்வாய் எங்கே?
 அமைதியுடன் புன்னகைசெய் வதனம் எங்கே ?
கார்வைமிகும் மணிக்குரலின் கானம் எங்கே?
 கதருடைக்கே அழகுதரும் மேனி எங்கே?
நேர்மையெனும் திருவடிவம் எங்கே? எங்கள்
 நெஞ்சத்தின் நிம்மதியும் எங்கே எங்கே?

பூவினிலும் மென்மையுள்ள உடலை அங்கே
 புகைநெருப்பில் போட்டன்றோ பொசுக்கி விட்டோம்
தேவதைபோல் நமைநோக்கும் விழிகள் பொல்லாத்
 தீப்பிழம்பில் வெந்ததுவும் கொடுமை யன்றோ ?
பாவனையால் அபிநயம்செய் திருமு கத்தைப்
 படர்ந்துவந்த தீநாக்கு விழுங்கிற் றேயோ ?
ஆவலுடன் வெண்ணீற்றை அணியும் அண்ணன்
 அழகுடலே வெண்ணீறாய் ஆயிற் றம்மா !

கனிவுடனே தமிழ்மன்னன் அதியன் தந்த
 கருநெல்லிக் கனிபோலே அவ்வை யண்ணன்
மணிக்கட்டின் புறத்தேயோர் உருளை யுண்டு
 மலர்விழியின் இமையருகே மருவொன் றுண்டு
இனியசுவை விருந்தினிலே அண்ணன் மட்டும்
 எல்லாரும் எழுந்தபின்பும் ரசிப்பதுண்டு!
எனைஅன்பாய்க் கேலிசெய்து நகைப்ப துண்டு
 இனியந்த அழகையெலாம் எங்கே காண்பேன்!

## செங்கதிர் எங்கே?

**கவிஞர் பூங்குன்றன்**

செந்தமிழ் மேடை என்றும்
சிறப்புறச் செய்த செம்மல்
இந்தநன் னாட்டின் எல்லா
இடத்திலும் நடித்த செல்வன்
நொந்ததோர் கலையை எந்த
நொடியிலும் நினைத்துப் பேணி
அந்தமில் புகழைத் தேடி
அளித்தவன் எங்குற் றானோ?

அனந்தையில் பிறந்தான்; ஆண்டோர்
ஐந்தினில் அரங்க மேறித்
தினந்தினம் நடித்தான்; என்றும்
திளைத்திடும் கலையின் மேன்மை
மனந்தனில் கொண்டான்; போற்றும்
மாத்தமிழ் இசையால் மக்கள்
இனந்தனைக் கவர்ந்தான்; எங்கள்
இனியவன் எங்குற் றானோ?

பன்னூறு மேடை மீதில்
பாங்குற அவ்வை யாக
முன்னமே முதுமை கொண்டான்;
முதுமையை அதனால் வேண்டான்;
என்னயான் சொல்வேன் ஐயா!
இக்கால அவ்வை போனாள்!
மன்னனாய் நடித்து நல்ல
மனிதனாய் வந்தான் எங்கே?

அங்கத்தில் குறையோ பெற்ற
அழகினிற் குறையோ இல்லை;
எங்குமே வடுவோ நோயோ
எப்போது மிருந்த தில்லை;
இங்கவன் இல்லை என்றால்
எங்குதான் போயி ருப்பான்?
செங்கதிர் போல மீண்டும்
சிறந்தவன் வருவான் வாழ்க!

## குரலைக் கேட்டுக் குயிலே என்பேன்

**கவியோகி சுத்தானந்த பாரதியார்**

தமிழின் அரங்கத் தங்க மணிக்குரல்
அமிழ்தின் இனிய அருந்தமிழ்க் கலையின்
வேனிற் சோலையில் விளம்பும் கிஞ்சுகம்
அழகும் அன்பும் பழகும் பழனம்
முத்தமிழ் வளமை முகிழ்த்த புலமை
பொருநரும் பாணரும் போற்றும் பெருந்தகை
நாடகச் சிற்பி, நண்பர் சண்முகம்
ஆடகப் பெருமான் அடிபணி யன்பன்
அவனடி சேர ஆவியா யினனே
என்னிடம் சண்முகம் இனிதுறும் போதெலாம்
நூல்களை அளிப்பேன் பால்வடி முகத்திற்
புன்னகை ததும்பப் பொன்மொழி கூறி
எனதுபாட் டொன்றை இனிதுறப் பாடுவார்.

பாடும் உருவம் படுத்துமண் ணுயினும்
பாலும் தேனும் பாலித் தொழுகும்
குரலைக் கேட்டுக் குயிலே என்பேன்
இன்பக் குரலிசை என்றும் பருகி
அன்பநீ வாழி அமரநீ வாழி
என்று நாளும் இசைக்குமென் அன்பே
ஆறுண்டு முதல் அறுபது வரையில்
கலைக்கே வாழ்ந்து நிலைப்பே றெய்திய
ஆன்மா அம்பலத் தாடும் கூத்தன்
மலரடி மேவி மாண்புறத் தமிழ்க்கலை
நல்வரம் வேண்டிப் பல்லாண் டிசைத்து
வாழிய தமிழகம் வளம்பல பொலியவே!

## தீர்ந்தது என்ன தீர்ப்பு ?

**சந்தக் கவிமணி தமிழழகன்**

தெய்வத் தமிழுக்குத்
 தீராத பேரிழப்பாய்க்
கைவைத்தனன் கொடுமை ;
 காலன்தான் — செய்வதினி
என்னென்றே ஏங்குகிறோம்
 எங்களன்புச் சண்முகனார்
மின்னென்றே போனதுயர்
 மீது. (1)

அன்றிருந்த அவ்வை
    அருள்வடிவம் கண்டதில்லை
என்றிருந்த போதும்
    இதுகுறையை—நன்றிருந்து
கூத்தால் கலையால்
    குறையா ஒழுக்கத்தால்
தீர்த்தானும் தீர்ந்ததென்ன
    தீர்ப்பு ? (2)

பேயாக எத்தனையோ
    போயிருக்க இங்கெமக்குத்
தாயாய் விளங்கவந்த
    சண்முகத்தை—நீயாது
காரணங்கள் பற்றிக்
    கவர்ந்தனை ?சொல் வெங்கூற்றே,
ஈரமுன்கண் இல்லா
    இயல்பு ! (3)

## எங்கே ?

### இரா. இளங்குமரன்

''இயலெங்கே ? இசையெங்கே ? நாட கந்தான்
    எங்கெங்கே ?'' என்றென்று தேடி ஓடி
அயலெங்கும் திரியாமல் ஆரத் துய்க்க
    அமைந்துள்ள ஓரிடமாய் 'அமைந்த' தெங்கே ?

''புயலெங்கே ? மழையெங்கே ? புதுவெள் ளத்தின்
    போக்கெங்கே ?'' என்பாருக் 'கிங்கே' என்ற
'நய'மெங்கே ? நற்றமிழ 'ஔவை' எங்கே ?
    'நாடகத்தின் கோ'வெங்கே ? எங்கே ? எங்கே ?

## என்று காண்பேன் ?

### கு. சா. கிருட்டிணமூர்த்தி

கலைமகளின் தலைமகனே ! நாடகத் தாய்
    கண்டெடுத்த நன்முத்தே ! நடிக ருக்குள்
விலைமதியாக் கற்பகமே ! பார தத்தின்
    விடுதலைக்கும் பங்களித்து உயர்ந்த மேலோய் !
பலதுறைக்கும் கலைத்துறையைப் பயன் படுத்திப்
    பயிற்சிதந்தும், கலைஞர்களை மதித்தும போற்றுங்
கலைமணியே ! சண்முகமே ! உன்னை எந்நாள்
    காண்பதினி என்றுள்ளங் கலங்கு தையா !

எவ்வெவர்பாற் பழகிடினும் அவர்பாற் காட்டும்
இனிய நட்பில் மயங்கியிரண் டறக்கலந்து
ஒவ்வொருவ ருளமு மவ்வை சண்முகம்தன்
ஒருவனுக்கே யுரியநண்ப னென்று எண்ணும்
செவ்வியபே ரன்பினுக்குச் சிகர மானோய்!
செந்தமிழ் பண்பினுக்கோர் நிலைய மானோய்!
கவ்வியுன்றன் பொன்னுடலிற் கலந்த வெந்தீக்
கனலின் வெம்மை தணிவ தெந்நாள்—தமிழர்நெஞ்சில்?

"பெருமைகொள்வாய் தமிழா நீ" யெனுமென் பாட்டைப்
பேசரிய "ஒளவையார்" நன்னா டகத்தில்
அருமைமிகு காட்சிதனில் அமைத்துக் காட்டி
அங்கவையும் சங்கவையும் பாடும் போது
பொருள்நயத்தில் மனமகிழ்ந்து மயங்கு வார்போல்
பூரித்துத் தலையசைத்து உணர்ச்சி பொங்கிக்
குரலெடுத்துக் குதித்துவிசை கூட்டும் வேளை
கொட்டகையே யதிரும்! இனி என்று காண்பேன்?

## நிதியை இழந்தோம்

### எழில் முதல்வன்

### விருத்தம்

கதராடை இலங்கும் மேனி;
கனிவான பேச்சு; வாயில்
சதிராடும் முரல் கொண்ட
சண்முகப் பெரியோய்! உன்னை
வீதிவந்தே அள்ளிக் கொண்ட
வேதனை தாள வில்லை!
நிதிதன்னை இழந்தாற் போலே
நெட்டுயிர்ப் பெறிகின் றோம்யாம்! 1

நாடகக் கலைவ ளர்த்த
நற்பெரும் கலைஞ னே! நல்
ஆடகப் பொன்னே போலும்
அருங்குணம் கொண்ட நல்லோய்!
ஈடிலா இழப்பே; நெஞ்சம்
இரங்காத காலன் உன்றன்
நாடகம் காண எண்ணி
நயந்தழைத் தேகிட் டானோ? 2

## வித்தக அவ்வை வியலுருவே!

**வித்துவான் தி. சு. ஆறுமுகம்**

(கவிஞர் சிவதாசன்)

**நேரிசை வெண்பா**

ஒப்பரிய அவ்வை உயர்ராச ராசனொடு
செப்பரிய செக்கிழுத்த செம்மலிவர்—இப்புவியில்
மாண்டநாள் என்றெனிலோ மண்டுபுகழ் சண்முகநீ
மாண்டநாள் என்றே மதி.

முத்தமிழ் வல்லானே மோகனச் சண்முகனே
வித்தக அவ்வை வியனுருவே—இத்தரையில்
ஒன்றுதமிழ்க் கூத்தின் உயிர்மூச்சே நின்பெயர்தான்
நின்றுதழைத் தோங்குக நீண்டு.

## நீடு நின் நாமம் வாழ்க!

**கலைமாமணி கவிஞர் ஆறுமுகனுர்**

செந்தமிழ்த்தாய் பெற்றெடுத்த செல்வனே சண்முகனே!
சந்தக் கவிஞன் சங்கரதாஸ் மாணவனே!

தமிழ்நா டகமேடை தழைத்துயர்ந்து பேரோங்க
அமுதம்போ லேபுதுமை ஆக்கிவைத்த ஆசானே!

தேசபக்தர் ம. பொ. சி. சிந்தை கவர்ந்தவனே!
மாசில்லா நல்வாழ்வு வாழ்ந்துபுகழ் கொண்டோனே!

பேரறிஞர் அண்ணு பெருமதிப்புக் குற்ருேனே!
சீரார்ஜீ வானந்தம் தியாகம் புகழ்பவனே.

தேசபக்தி! தெய்வபக்தி! செந்தமிழிலே பக்தி!
மாசற்ற வாழ்க்கை! வாழ்ந்து சிறந்தவனே!

அவ்வை வேடம்பூண்டு அழகுதமிழ் பேசுகின்ற
செவ்வைசேர் நின்னுருவைத் தேசத்தில் யார்மறப்பார்?

பாரதியார் பாடல்களைப் பாடி ரசித்திடுமுன்
ஆர்வத்தை அன்பைஇனி யாரிடத்தில் யாம்காண்போம்?

மலர்ந்தமுகம் இன்சொல் மாருத பேரன்பா!
நிலந்துதிக்க வாழ்ந்து நிலைத்தபுகழ் பெற்ருேனே!

கலைஅன்னை உன்பிரிவால் கண்ணீர் வடிக்கின்ருள்
நிலைகுலைந்து மெய்க்கலைஞர் நெஞ்சம் துடிக்கின்ருர்.

சமத்துவ சகோதரத்வம் தன்னுளத்தே கொள்ளாதார்
மமதைதிமிர் அகந்தை வடிவிலிருப் போர்கள்

சீராரும் தேசபக்தி தெய்வபக்தி யற்றோர்கள்
ஊரடித்துத் தின்னும் உலுத்தர் கொடியவர்கள்

இரக்ககுணம் மனத்தே இம்மி யளவுமிலார்
அரக்கர்குணப் பேயுடலார் ஆஷாடபூதிகள் தாம்

எண்ணற்ற பாவிகள் இங்கிருக்க நின்னுயிரைக்
கண்ணற்ற காலன் கவர்ந்ததுதான் விந்தையன்றோ?

மீண்டும் தமிழகத்தில் மேலோனே நீபிறக்க
ஈண்டு விழைகின்றோம்! இறையருளைப் போற்றுகின்றோம்!

நீடுநின் நாமம் நிலைத்தோங்கி வாழியவே!
நாடக நற்கலைகள் நனிசிறந்து வாழியவே!

## சண்முகவேள் நாமம் வாழ்க

### கவியரசு முடியரசன்

வாழ்க்கைதனில் நடிக்காத நடிகன் பொய்ம்மை
வஞ்சனைகள் பிடிக்காத கலைஞன் தீய
பாழ்ச்சிந்தை பற்றாத இசைஞன் எங்கள்
பைந்தமிழில் வற்றாத உணர்வன் நெஞ்சில்
காழ்ப்பொன்றும் அறியாத தமிழன் தீமை
கடுகளவும் தெரியாத தொழிலன் அன்னான்
வாழ்க்கையெலாம் முத்தமிழில் தோய்ந்தான் அவ்வை
வடிவழகன் சண்முகவேள் நாமம் வாழ்க.

## வெற்றிடத்தைப் பெற்றோமே!

### புலவர் தணிகை உலகநாதன், ஜே. பி.

கலையுலகின் பெருவிளக்கே! அணைந்தாய் அந்தோ!
கல்லாத பேருக்கும் நாட கத்தால்
நிலையான நேர்வழியைக் காட்டி நாட்டில்
நீள்தமிழின் மணம்பரப்பி வாழ்ந்த செம்மல்!
தலையான நாடகநற் கலைவி ளங்கத்
தலைமுறைக்கே வாழ்வெல்லாம் அர்ப்ப ணித்தாய்!
விலையில்லா டி.கே.எஸ். மணியே! இந்நாள்
வெற்றிடத்தைப் பெற்றோமே! என்ன செய்வோம்.

கடலலேயும் நாணமுறும் குரலேக் கேட்டால்;
கனிச்சாறும் பின்னடையும் கனிவைக் கண்டால்
திடமான உறுதியுடன் தமிழைப் போற்றும்
செந்தமிழர் அரசுக்குத் துணையாய் நின்றாய்
மடமையினைக்—கண்மூடி வழக்கந் தன்னை—
மங்காத நடிப்பொளியால் மங்கச் செய்தாய்!
கடல்கடந்தும் தமிழ்ப்பண்பை வெளிநாட் டாரும்
கவர்ச்சியுறப் பரப்பிமிகு புகழைப் பெற்றாய்

வெண்ணீறு பொலிகின்ற நெற்றி எங்கே?
விளங்குதமிழ்ப் பண்பாட்டின் நெஞ்சம் எங்கே?
பண்ணாகப் பொழிகின்ற மொழிகள் எங்கே?
பலருக்கும் வழிகாட்டும் பள்ளி எங்கே?
கண்ணான டி.கே.எஸ். அண்ணா! எங்கள்
கலைமணியே! கற்பகமே! மறைய மாட்டாய்
எண்ணியுனை மனக்கோயில் தனிலே வைத்து
எந்நாளும் நின்புகழைப் பாடி நிற்போம்.

## நாடகக் கலையின் ஒளிவிளக்கு

### வித்துவான் பெ. சுப்பையா

நாடகமாம் கலைத்துறையில் நற்றொண் டாற்றி
நற்றமிழாம் இசைக்கலைக்கு உயிர்ப்பை யூட்டி
வேடமதாம் இராசேந்திர சோழ ராக
மேன்மை ஔவை உருத்தாங்கி வந்தபோது
தேடரிய அவர்கள்தாம் வந்தா ரென்று
திகைப்புறவே அவர்நடிப்பு இருக்கு மென்றால்
ஈடற்ற டி.கே.எஸ். பெருமை சொல்ல
இங்கொருவர் இலையன்றே எந்த நாளும்!

எங்கெங்கே எவ்விடத்தில் தமிழர் வாழ்வு
இருக்கின்ற இடமெல்லாம் அவரின் நெஞ்சில்
தங்கியே இருக்கின்ற தகைமை யாளர்
தரணியிலே நாடகத்தால் தகுதி யுற்றார்
தங்கநிகர் பண்பனையார் தமிழில் ஆர்வம்
தன்மூச்சாய்க் கொண்டுழைத்த மான வீரர்
பொங்குதமிழ் ஔவை என்றே பூரிப்போடு
பொருத்தியே அவர்பெயரை இணைத்துச் சொன்னார்.

எழில்முகத் தோற்றத்தில் இனிய பார்வை
எப்போதும் புன்முறுவல் இனிக்கும் பேச்சு
குழந்தையின் உள்ளம்போல் இனிய பண்பு
கொள்கையிலே நிலைத்துவிட்ட தமிழர் கொள்கை

அழகான துறையென்று நாட கத்தை
அன்றேற்று இன்றுவரை அமைதி கண்டார்
விழிப்பூட்டும் "மனிதராக" வாழ்ந்து காட்டி
மேன்மையுற மன்னிப்பான் மனிதன் என்றார்.

"தோன்றிற் புகழொடு தோன்றுக" என்றே
தூயகுறள் வழிநின்ற கலைஞர் ஆவார்
ஆன்றபுகழ் மலைமீது ஒளியாய் நின்றார்
அழியாத சுவடுகளை மனிதர் வாழ்வில்
தான்பதித்துப் பிரிந்து விட்டார் சண்முகனார்
தமிழ்த்தொண்டே இலக்கியமாய்த் திகழ்ந்து நின்றார்
ஊன்உருக்கும் வீணையினில் நாதம் போனால்
ஒப்பற்ற இசைவிரும்பிக் கேட்பா ருண்டோ?

உலகமதில் இணையற்ற நடிக ராக
ஒப்பற்ற எழுத்துலகில் எழுத்த ராக
இலகொளிரும் நாடகப்பே ராசிரி யராய்
இந்தியா விடுதலைக்காம் போராட் டத்தில்
கலைமூலம் பணிசெய்த கவிஞர் தொண்டர்
கதர்வெற்றி தேசபக்தி என்னும் பேரால்
நிலையான உணர்ச்சியினை நிமிர்த்தி விட்ட
நித்திலமாம் சண்முகரை நினைத்து வாழ்வோம்.

மணிவிழாக் கண்டமா மேதை யன்னார்
மாண்தா மரைச்செல்வர் பட்டம் பெற்றார்
அணிநாஞ்சில் நாடதனைத் தமிழ கத்தில்
அணைத்திணைத்து மகிழ்வதற்கே பாடு பட்டார்
பணிசெய்ய மேலவையில் ஒருவ ரானார்
பண்புடைய தந்தைவழி பயின்று நின்றார்
துணிவுடைய சண்முகனார் மறைந்தா ரென்றால்
தொல்கலையாம் நாடகத்திற் குயிர்ப்பு ஏது?

## உத்தம நண்பன்

**நாரண துரைக்கண்ணன்**

இருபத் தொன்பான் ஆண்டுகளாய்
இதயந் தனிலே இடம் பெற்றோன்
நெருநல் மறைந்ததை நினைதோறும்
நெஞ்சம் நைந்தே நெக்குருகும்
உறவு தனக்கிங் கிவன்போலோர்
உத்தம நண்பன் யார்உரைப்பேன்?
அருமைச் சண்முகன் பண்புகளென்
னகத்தை விட்டே யகலாவே!

# நாடகச் செல்வரும் நற்றமிழ்க் கழகமும்

நாடகச் செல்வர் அவ்வை. தி. க. சண்முகம் அவர்கட்கு, நற்றமிழ் வளர்ச்சியின் பொருட்டு நாளும் விழுப்பணி யாற்றிவரும் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் பாலும் அதன் ஆட்சியாளரான தாமரைச் செல்வர் வ. சுப்பையா பிள்ளை அவர்கள் பாலும் பேரீடுபாடுண்டு. கழகம் நடத்தும் விழாக்களுக்கெல்லாம் அவர்தம் தம்பியார் திரு. தி. க. பகவதி அவர்களுடன் வருகை தந்து சிறப்பிப்பதுண்டு.

கழகப் பொன் விழா, மனோன்மணீயம் சுந்தரம் பிள்ளை விழா, கா. சு. பிள்ளை ஆராய்ச்சி மன்றத் திறப்பு விழா போன்ற பல விழாக்களில் அவ்வையவர்கள் கலந்துகொண்டு கடவுள் வாழ்த்து, தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடல்களைத் தம் மணி போன்ற குரலில் பாடி மகிழ்வித்தார். கழக விழாக்களில் அமைக்கப் பெறுங் காட்சிகளைக் கண்டு பேருவகையோடு பாராட்டுபவர்களில் தலையாயவர் அவ்வையவர்களாவர்.

அவ்வையவர்கள், கழகம் நடத்திவரும் மறைமலையடிகள் நூல் நிலையத்தையும் மறைமலையடிகள் கலைமன்றத்தையும் தம் தலைவர் சிலம்புச் செல்வர் ம. பொ. சிவஞானம் அவர்களுடன் பார்வையிட்டுத் தலைவரவர்கள் எழுதிய கருத்துரைகளின் கீழ்த் தாமும் தம் தம்பியரும் கையெழுத்திட்டுள்ளனர்.

**மறைமலையடிகள் நூல்நிலையத்தைப் பற்றிய கருத்துரை (10-11-65)**

''மறைமலையடிகள் நூல்நிலையத்தையும் அடிகளார் படித்த, பயன் படுத்திய நூல்களையும் காணும் பேற்றினை இன்று பெற்றேன். கழகச் செயலாளர் அவர்களின் அன்பால் இப்பேற்றினைப் பெற்றேன். தமிழ் நூல்களுக்கென இப்படி ஒரு சிறந்த நூல் நிலையத்தினை அமைத்த கழகத்தாரையும் அதற்கென முன்னின்றுழைத்த செயலாளரையும் வாழ்த்தி வணங்குகின்றேன். இந் நிலையம் வளர்க; வாழ்க.

**மறைமலையடிகள் கலைமன்றத்தைப் பற்றிய பாராட்டுரை: (1-11-69)**

''பல்லாவரம் மறைமலையடிகள் கலைமன்றத்தைப் பார்வையிடும் பேறு பெற்றோம். உண்மையில் மன்றத்தின் அமைதியான சூழ்நிலை எங்களைப் பெரிதும் கவர்ந்தது. அடிகளாரின் அருளுணர்வு இந்த மன்றத்தில் இருந்து வருவதாகவே எண்ணுகின்றோம். தமிழ் மொழிக்கு அடிகளார் ஆற்றியுள்ள பணிக்கு இந்த மன்றம் சிறந்த நினைவுச் சின்னமாகும்.'' திரு சுப்பையா பிள்ளையவர்கள் அடிகளின் புகழ்பரவ ஆற்றிவரும் பணி போற்றத்தக்கதாகும். எங்கள அஞ்சலி மறைமலை அடிகளுக்கு எங்கள் நன்றி கலந்த வணக்கம் சுப்பையா பிள்ளைக்கு!

**நாடகப்போட்டி ஆய்வுக் குழுவில் ஏற்றபங்கு:**

பேராசிரியர் மனோன்மணீயம் சுந்தரம் பிள்ளைக்குப்பின் அது போன்ற நாடகம் எழவில்லையே என்பதற்காகக் கழகம் அண்மையில் நாடகப் போட்டி ஒன்றை நடத்தியது. அப்போட்டிக்கு வந்த நாடகங்களில் சிறந்த நாடகத்தைத் தேர்ந்தெடுப்பதற்கு, அமைக்கப் பெற்ற குழுவில் நம் புகழ்மிகு கலைஞர் அவ்வை யவர்களும் உறுப்பினராவார். அதன் முதல் கூட்டம் 24-11-72 அன்று மறைமலையடிகள் நூல் நிலையத்தில் நடைபெற்றபோது அதில் அவ்வையவர்கள் தம் தம்பியாரோடு வந்து பல நல்ல கருத்துரைகளை வழங்கினார். கழகம் செய்த நற்பணிகளுக் கெல்லாம் பேருதவியாக இருந்த அவ்வையவர்களின் மறைவு கழகத்திற்கு ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும். அவர்தம் குடும்பத்தார்க்கு எங்கள் ஆறுதலுரை கூறுகின்றோம். அவர்தம் ஆருயிர் ஆடல்வல்லான் அடிகளில் அமைதியுறுவதாக.

# சென்னைத் துறைமுகத்தில் மிதக்கும் நூற்காட்சி

கல்வியையும் சமயத்தையும் பரப்ப ஒரு சில கிறித்துவ இளைஞர்கள் சேர்ந்து உருவாக்கிய திட்டத்தின் விளைவாகவே 'லோகோஸ்' என்ற 'மிதக்கும் நூற்காட்சி'யைத் தாங்குங் கப்பல் உருவானது. தொண்டு ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு இத்திட்டம் உருவானதால் ஊதியமின்றி உழைக்கும் தொண்டர்களைக் கொண்டே இக்கப்பல் பணி நடைபெறுகின்றது. கப்பல் தலைவர் முதல் கப்பலைச் செலுத்தும் பொறியாளர் வரை அனைவரும் ஊதியமின்றிப் பணியாற்றுகின்றனர். அவர்கள் குடும்பத்தோடு கப்பலிலேயே வாழ்வதற்கும் அவர்தம் உண்டி உறையுள் ஆகிய அனைத்துக்கும் வசதி செய்யப்பட்டுள்ளது.

சென்னையில் மார்ச் 1 முதல் 17 வரை தங்கியுள்ள இக் கப்பலில் அமைத்திருக்கும் நூற்காட்சியை மாண்புமிகு கல்வியமைச்சர் டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தொடங்கி வைத்தார்கள். மேனாடுகளில் வெளியாகியுள்ள பல ஆங்கில நூல்கள் காட்சியில் இடம்பெற்றுள்ளன. சமயம், தத்துவம், வரலாறு, அறிவியல் போன்ற பல துறைகளிலும் காட்சியில் நூல்கள் உள்ளன. சிறுவர்கள் கருத்தையும் கண்களையும் கவர்கின்ற வகையில் பலவண்ணங்களில் அச்சிடப்பட்ட படங்கள் கொண்ட நூல்கள் காட்சியில் காற்பகுதி இடத்தைப் பிடித்துக் கொண்டன. நாள்தோறும் ஆயிரக்கணக்கான மக்கள் இக் காட்சியைக் கண்டு களிக்கின்றனர். நுழைவுக் கட்டணம் ரூபா ஒன்றாகும். அங்குள்ள புத்தகங்களை விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

இக் காட்சியைச் சிறப்பாக அமைத்திருப்பவர் காட்சி அலுவலரான திரு. ஆர்லி எல் ராலின்ஸ் ஆவார். அவர் அமெரிக்கர். சமயத்தைப் பரப்பும் ஆவலில் இம் முயற்சியில் ஈடுபட்டுள்ள இளைஞர்.

'மிதக்கும் நூற்காட்சி'யைக் காணச் சென்றிருந்த கழக ஆட்சியாளர் தாமரைச் செல்வர் வ. சுப்பையா பிள்ளை அவர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க காட்சி அலுவலர் திரு ராலின்ஸ் மறைமலையடிகள் நூல் நிலையத்தை 7-3-73 காலை பார்வையிட்டுப் பாராட்டினார்.

**மறைமலையடிகள் நூல் நிலையத்திற்குப் பாராட்டு**

'I have visited this greatest of liabraries with its ancient and very rare collection of books on so many subjects as well as its modern publications. My gracious and most informing host has made this a most learning occasion in my life, Great is the profit of my visit here, A truly remarkable collection. My thanks and appreciations are yours for your kind hospitality.

Harley L. Rollins.
Exhibition Officer
M. V. LOGOS

**பாராட்டுரையின் தமிழாக்கம்**

'நூலகங்களுள் மிகப்பெரிய இந் நூலகத்தையும் பல்வேறு பொருள்களைப் பற்றிய மிகப் பழைய, கிடைத்தற்கரிய தொகுப்புகளோடு அவற்றைப் பற்றிய புதிய நூல்கள் இருப்பதையும் நான் பார்வையிட்டேன். என் வாழ்க்கையில் பல நல்ல கருத்துக்களைக் கற்றுக் கொள்ளும் வாய்ப்பை இன்று எனக்கு அளித்தார்கள். இங்கு வந்ததனால் எனக்குக் கிடைத்த பேறு மிகப் பெரியதாகும். தாங்கள் காட்டிய அன்புக்கு நன்றியும் பாராட்டுதல்களும்.

ஆர்லி எல். ராலின்ஸ்,

# தமிழ்த் தாத்தா டாக்டர் உ. வே. சாமிநாதையர் 119ஆம் வெள்ளணி விழா

4—3—73 ஞாயிற்றுக்கிழமையன்று தமிழ்நாட்டு நல்வழி நிலையச் சார்பில் மயிலைக் கற்பகாம்பாள் கலியாண மண்டபத்தில் தமிழ்த் தாத்தா டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்களின் 119ஆவது பிறந்த நாள் விழா சீருஞ்சிறப்புமாகக் கொண்டாடப்பெற்றது.

திரு. நெல்லை இராசானந்தம் அவர்கள் அனைவரையும் வரவேற்று அரிய உரையாற்றினர். திரு. தமிழ் முத்து வரவேற்புரை படித்தளித்தார். 'கலைமகள்' ஆசிரியர் திரு. கி. வா. சகந்நாதன் அவர்கள் விழாவிற்குத் தலைமையேற்று திரு. ஐயர் அவர்களின் தமிழ்த்தொண்டு பற்றிச் சீரிய உரையாற்றினர். சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் திரு. நெ. து. சுந்தரவடிவேலு அவர்கள் துவக்க உரையாற்றினர்.

சிலம்புச் செல்வர் ம. பொ. சி., டாக்டர் ஐயர் அவர்களின் திருவுருவப்படத்தைத் திறந்து வைத்துப் பேசினர். பேராசிரியர் டாக்டர் மெ. சுந்தரம் அவர்கள் சிறப்புரை ஆற்றினர். உயர்நீதி மன்ற நடுவர் கிருட்டிணசாமி ரெட்டி அவர்கள் வாழ்த்துரை வழங்கினர். திரு. நாரண துரைக்கண்ணன் அவர்கள் தலைமையில் கருத்தரங்கும், திரு. கே. இராமமூர்த்தி அவர்கள் தலைமையில் கவியரங்கும், தண்டமிழ்க் கொண்டல் சாமிநாதன் அவர்கள் தலைமையில் பட்டி மன்றமும் சிறப்பாக நடைபெற்றன.

அவ்வை நடராசன் அவர்கள் மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் கருணாநிதி யவர்களிடமிருந்து வந்திருந்த வாழ்த்துக் கவிதையைப் படித்தார். முன்னாள் தமிழக முதல்வர் திரு. பக்தவத்சலம் அவர்கள் அனுப்பியிருந்த செய்தியில், "கட்சிக் கண்ணோட்டமின்றி ஆழ்ந்த பக்தியோடு தமிழ்ப் பெரியார்களைத் தவறாமல் கொண்டாடி வருகின்ற அன்பர் திரு. நெல்லை இராசானந்தம், இப்போது தமிழ்த் தாத்தாவான டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்களின் திருநாளைக் கொண்டாட முன்வந்திருப்பதைப் பாராட்டுகிறேன்" என்று குறிப்பிட்டிருந்தார். இரவு 9 மணியளவில் விழா இனிது முடிந்தது.

## வெள்ளணி விழா

திரு. ஐயர் அவர்களின் 119ஆவது பிறந்த நாள் வெள்ளணி விழா 6-3-73இல் திருவான்மியூரில் டாக்டர் உ. வே. சா. நூல்நிலையத்தில் நடைபெற்றது. விழாவிற்கு நூலக இயக்குநர் திரு. தில்லை நாயகம் அவர்கள் தலைமை தாங்கி ஐயரவர்களின் தமிழ்த்தொண்டு பற்றிச் சீரிய உரை நிகழ்த்தினர். உலகத் தமிழ் ஆராய்ச்சிக் கழகப் பொறுப்பாளர் டாக்டர் கா. மீனாட்சிசுந்தரம் அவர்கள் சிறப்புரை ஆற்றினர். கலைமகள் ஆசிரியர் திரு. கி. வா. சகந்நாதன் அவர்கள் ஐயர் அவர்களின் உருவச் சிலையினைத் திறந்து வைத்து ஐயர் அவர்களின் அரிய தமிழ்த் தொண்டுகளைப்பற்றி உணர்ச்சி ததும்ப உரையாற்றினர்.

# மழை வேண்டல்

1965இல் தமிழகத்தில் ஏற்பட்ட வறட்சியினால் முன்னமே மழை வேண்டி அருளாளர்கள் பாடிய பதிகங்களும் பாடல்களும் குறிப்புகளோடு தொகுக்கப்பெற்றன. தற்காலப் பெருங் கவிஞர்கட்கெல்லாம் எழுதி மழை வேண்டிப் பாடுமாறு வேண்டுகோள் அனுப்பி வைக்கப் பெற்றது. புலவர் சிலர் மழை வேண்டிப் பாடிய பாமாலைகள் கிடைத்தன. சிலர் தாம் பாடிய அன்றே மழை பெய்ததாக எழுதியுள்ளனர். இவை எல்லாவற்றையுந் தொகுத்து 'மழை வேண்டல்' என்ற தலைப்பில் நூலொன்று கழக வெளியீடாக அச்சிடப்பெற்றது.

27-11-1966இல் அதனைச் சென்னை மாவட்ட நூலகக் கட்டிடத்தில் வேளாண்மைத்துறைச் செயலர் உயர்திரு வி. கார்த்திகேயன் ஐ. ஏ. எஸ். அவர்கள் நூலின் சிறப்புகளைப் பற்றி எடுத்துக்கூறி வெளியிட்டனர்.

தேவார ஆசிரியர் இருவர் பெருமழைப் புலவர் பொ. வே. சோமசுந்தரனார் பாடியுள்ள அம்மானைப் பாடல்களைப் பாடும்போது வானத்தில் கருமுகில் எழுந்து பரவியது. நூலை வெளியிடுகையில் மழை கொட்டுக் கொட்டெனப் பெய்தது. எல்லாரும் திருவருட் பாங்கினை நினைந்து வியப்புங் களிப்பும் எய்தினர்.

"வேண்டுவார் வேண்டுவதே ஈவான் கண்டாய்"

"வேண்டத்தக்க தறிவோய்நீ வேண்ட முழுதும் தருவோய்நீ"

என்னும் அருள் மொழிகள் எங்ஙனம் பொய்க்கும்!

இப்போது தமிழ்நாட்டில் ஓரளவு மழை பெய்து உணவுப் பொருள்கள் கிடைக்கப் பெறினும், மின்சார உற்பத்திக்கு வேண்டிய அளவு மழை பெய்ய வேண்டிய இடங்களில் பெய்யாமையால், மின்சார உற்பத்தி மிகவுங் குறைந்து தொழிற்சாலைகள் இயங்காமல், தொழிலாளர்கள் வேலையில்லாமலும், வயல்கட்கு நீர் பாய்ச்சிப் பயிரிட முடியாமலும், வீடுகட்டுதற்கு சிமந்து கிடைக்கப் பெறுமலும், நாளும் மக்கட்கு வேண்டிய பொருள்களைப் படைக்க முடியாமலும் மக்கள் துன்புறுகின்றனர். இன்றியமையாது மக்கட்கு வேண்டிய பொருள்களின் விலை இருமடங்கு மும்மடங்கு உயர்ந்துவிட்டது.

எனவே, திருக்கோயில்களிலெல்லாம் மழை வேண்டிப் பாடிச் சிறப்பு வழிபாடு ஆற்றும்படி சுற்றறிக்கை அனுப்புமாறு கழக ஆட்சியாளர் 27-2-73இல் அறநிலைய அமைச்சரவர்கட்கும் ஆணையரவர்கட்கும் வேண்டுகோள் அனுப்பி வைத்தனர். அதன்படி 1-3-73இல் அறநிலைய ஆணையரவர்கள் ந. க. 13752/73 அ 2. எண்ணுள்ள சுற்றறிக்கை வழி ரூ 2-50 விலையுள்ள 'மழை வேண்டல்' என்னும் நூலை வாங்கித் திருக்கோயில்களிலெல்லாம் மழை வேண்டல் திருப்பதிகங்களைப் பாடிச் சிறப்பு வழிபாடு செய்யும்படி அறிவித்திருக்கின்றனர்.

கழக ஆட்சியாளர் சென்னை வானொலி நிலையத் தலைவரவர்கட்கும் 8-3-1973இல் மழை வேண்டல் நூலை அனுப்பி நாடோறும் காலையில் இசைவாணர்களைக் கொண்டு மழை வேண்டல் திருப்பதிகங்களைப் பாடச் செய்து ஒலிபரப்புமாறு வேண்டி எழுதியிருக்கிறார்கள்.

# செய்திகளும் குறிப்புகளும்

## மறைமலையடிகள் நகர்

மக்கட்டொகை மிகுதியால் சென்னை மாநகர்க்கு ஏற்பட்டிருக்கும் இட நெருக்கடியினையும், இடர்ப்பாடுகளையும் தவிர்க்கும் பொருட்டுச் சென்னைக்கு மேற்கே 30 கல் தொலைவில் எல்லா வசதிகளும் நிரம்பிய துணைநகர் ஒன்றை அமைக்கத் தமிழக அரசினர் திட்டமிட்டுள்ளனர். இதற்குச் செங்கற்பட்டு மாவட்டம் காட்டான் குளத்திற்கு அருகிலுள்ள விரிந்ததோர் நிலப்பரப்பைத் தேர்ந்தெடுத்துள்ளனர். இத் துணைநகர் 'தமிழ்ப் பேரறிஞர் மறைமலை நகர்' என அழைக்கப்படும் என்று 26-2-73 இல் தமிழக சட்டமன்றத்தில் மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் அறிவித்தனர்.

அடிகளாரின் பெயரில் நகர் அமைவது பாராட்டத்தக்கதோர் அரிய பணியாகும். அடிகளார்க்கு நினைவுச் சின்னம் அமைப்பது பற்றியும் முன்னரே குறிப்பிட்டுள்ளோம். அதனையும் இவ்வரசு விரைந்து செயல் படுத்தும் என நம்புகிறோம். புதிதாக அமைக்கப்படும் நகர்க்கு '**மறைமலை யடிகள் நகர்**' என்ற முழுப் பெயரையே சூட்டும்படி வேண்டுகிறோம். இல்லையேல் வேறொருவரைக் குறிப்பதுபோலாகிவிடும்.

## 'ஸ்ரீரங்கம்' 'திருவரங்க'மாகும்

'ஸ்ரீரங்கம்' என்னும் ஊரின் பெயரைத் திருவரங்கம் என்று மாற்றத் தமிழக அரசு முனைந்துள்ளது. இது போன்று தமிழ் நாட்டிலுள்ள சில ஊர்களின் பெயர்களைத் தனித் தமிழில் மாற்றவேண்டும் எனத் தென்னிந்திய தமிழ்ச் சங்கம் விடுத்த வேண்டுகோட்கிணங்க இந்தப் பெயர் மாற்றத்தினைச் செய்ய நடுவண அரசின் ஒப்புதல் கேட்டிருப்ப தாகவும், ஒப்புதல் கிடைத்ததும் பெயர் மாற்றப்படும் என்றும் சென்ற திங்கள் இறுதியில் தமிழக சட்டமன்றத்தில் வருவாய்த்துறை அமைச்சர் மாண்புமிகு ப. உ. சண்முகம் அவர்கள் தெரிவித்தார்கள்.

இங்ஙனம், வடமொழியிலுள்ள தமிழக ஊர்களின் பெயர்களைத் தனித் தமிழில் மாற்றி யமைக்க வேண்டுமென்பது தென்னிந்திய தமிழ்ச் சங்கத்தின் நெடுநாளைய விருப்பம். அதன் வேண்டுகோளின்படி முன்னமே திரிபுற்ற பல ஊர்ப் பெயர்களும், புகைவண்டி நிலையப் பெயர்களும் மாற்றப் பெற்றன. மேலும் மாற்றப்பெறுத வேதராணியம், கும்பகோணம், விருத்தாசலம், மாயூரம் முதலிய ஊர்ப் பெயர்களை மாற்ற முன்வந்த தமிழக அரசினைப் பாராட்டுகிறோம்.

## நூலகத்திற்கு அன்பளிப்பு

பாகனேரியில் திரு. மு. விசுவநாதன் செட்டியார் அவர்களிடம் பெரிய தொரு நூல் நிலையம் முண்டு. அதில் பல்லாயிரக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள நூல்கள் உள்ளன. அந் நூல்களைப் பொதுச் சொத்தாக்கக் கருதித் திரு. செட்டியார் அவர்கள் அண்மையில் அந் நூல் நிலையத்தை இராமநாதபுரமாவட்ட நூலக ஆணைக்குழுவிடம் அன்பளிப்பாக அளித்து விட்டனர். நூலக ஆணைக்குழுத் தலைவர் திரு. பில்லப்பன் அவர்களிடம் நூல்களையும் நூலகத்திற்குரிய புழங்கு பொருள்களையும் வழங்கினர். இந் நூலகம் வழங்கு விழா சிவகங்கையில் நடைபெற்றது. விழாவிற்கு மாவட்டக் கல்வி அதிகாரிகள் திருமதி மனோன்மணி அம்மையார், திரு. ராஜா, பி. இராமன் எம். எல். சி., தங்கபாண்டியன் எம். எல். சி.,

ஒன்றியத் தலைவர் உடையப்பா, உ. சுப்பிரமணியன், காதர்பாட்சா எம். எல். ஏ. ஆகியோர் வந்திருந்தனர்.

## மறைமலையடிகள் நூல்நிலையத்துக்குப் புத்தக நன்கொடை

திருச்சி வரகனேரி திரு. பொ. மாணிக்கவாசகம் பிள்ளையவர்கள் சென்ற ஆண்டில் 50 நூல்கட்கு மேலும் 22-2-73இல் 114 நூல்களும் மறைமலையடிகள் நூல் நிலையத்துக்கு அன்பளிப்பாக வழங்கியுள்ளனர். அவர்கட்குத் தென்னிந்திய தமிழ்ச் சங்கம் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ளுகிறது.

## கல்கத்தாப் பல்கலைக்கழகத்தில் தமிழ்

சென்னைப் பல்கலைக் கழகத்தில் தாகூர் பெயரில் தமிழ் சிறப்பிடம் பெற்றிருப்பதுபோல், கல்கத்தாப் பல்கலைக் கழகத்திலும் தமிழுக்குச் சிறப்பிடம் அளித்தல் வேண்டும் என்று கல்கத்தாவிலுள்ள தமிழறிஞர்கள் சிலர் அண்மையில் அங்கு நடைபெற்ற பாரதி தமிழ்ச் சங்கத்தின் 32 ஆவது ஆண்டு விழாவின்போது மேற்குவங்க முதல்வர் திரு. சித்தார்த்த சங்கர் ரே யிடம் தமது விருப்பத்தைத் தெரிவித்தனர். அவரும் அதற்கு ஆவன செய்வதாகக் கூறினார். இந்தியில் மொழி பெயர்க்கப்பட்டுள்ள சுப்பிரமணிய பாரதியாரின் பாடல்களை அவ் விழாவில் அவர் வெளியிட்டார். அதுகாலை பாரதியாரின் பாடல்கள் தாகூரின் பாடல்களுக்கு இணையாக உள்ளன என்றும் பாராட்டினார்.

---

# மதிப்புரை

## கட்டுரைக் களஞ்சியம்

**ஆசிரியர்:** பா. வளன் அரசு M. A., **வெளியீடு:** கதிரவன் பதிப்பகம், 13, சிவன்கோயில் வடக்கு வீதி. பாளையங்கோட்டை, திருநெல்வேலி-2.

**கிடைக்குமிடம்:** திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற் பதிப்புக் கழகம், லிட்., 1/140, பிராட்வே, சென்னை-1. விலை ரூ. 2-00.

எண்ணியதை எண்ணியாங்கு நிரல்பட எழுதிக் கற்போர்க்குத் தெளிவும் இன்பமும் அளிக்கும் ஆற்றல் கட்டுரை வன்மை எனப்படும். உயர்நிலைப் பள்ளி மாணவர்களும் கல்லூரி மாணவர்களும் இத்தகைய ஆற்றலைப் பெற்றிருத்தல் மிகமிக இன்றியமையாததாகும். அதற்குத் துணைபுரியும் வகையில் அமைந்துள்ளது இக் கட்டுரைக் களஞ்சியம். மொழி, இலக்கியம், அறிவியல், பொருளியல், வரலாறு இன்னபிற இன்றியமையாத் துறைகள் பற்றிய 37 கட்டுரைகள் இதன்கண் அடங்கி யுள்ளன. மாணவர் பல நூல்களைக் கற்றுப் பெறவேண்டிய பொது அறிவினை இக் கட்டுரைக் களஞ்சியத்தினின்றே பெற்றுப் பயன் பெறுமளவிற்குப் பல நல்ல கட்டுரைகளைத் தொகுத்துத் தந்துள்ளார் ஆசிரியர். கட்டுரைகள் அனைத்தும் எளிய இனிய தமிழில் அமைந் துள்ளன. மாணவருலகம் இதனைப் படித்துப் பயன் பெறுமாக.

---

திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்
கழகத்திற்காக, சென்னை 2/140, பிரகாசம் சாலை, அப்பர் அச்சகத்தில்
திரு. வ. சுப்பையா அவர்களால் அச்சிடப்பெற்றது.
ஆசிரியர்: வ. சுப்பையா.

**செந்தமிழ்ச் செல்வி பற்றிய உரிமை விளக்கம்—1956 ஆம் ஆண்டுச் சட்டம் - விதி 8 - படிவம் 4 இல் கண்டுள்ளபடி**

---

1. வெளியிடும் இடம் : 1/140, பிரகாசம்சாலை, சென்னை 1.
2. வெளியீட்டு முறை : திங்களிதழ்
3. அச்சிடுவோர் பெயர் : அப்பர் அச்சகம்
   இனம் : இந்தியர்
   முகவரி : 2/140, பிரகாசம்சாலை, சென்னை 1.
4. வெளியீட்டாளர் பெயர் : திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிட்டெட்.
   இனம் : இந்தியர்
   முகவரி : 1/140, பிரகாசம்சாலை, சென்னை - 1
5. ஆசிரியர் பெயர் : திரு. வ. சுப்பையா பிள்ளை
   இனம் : இந்தியர்
   முகவரி : 1/140, பிரகாசம்சாலை, சென்னை - 1.
6. இதழ் உரிமையாளர்கள், மூலதனத்தில் நூற்றுக்கு ஒரு விழுக்காட்டிற்கு மேற்பட்ட பங்குடைய பங்காளிகள் ஆகியோரின் பெயர்களும் முகவரிகளும் :

1. திரு T. S இராமலிங்கம் பிள்ளை, M. A., B. L.
   ஒய்வு பெற்ற சட்டத்துறைச் செயலாளர்,
   7, லேடி தேசிகாச்சேரி சாலை, ஆழ்வார்பேட்டை,
   **மைலாப்பூர், சென்னை 4.**
2. திரு வ. சுப்பையா பிள்ளை
   6, பவழக்காரத் தெரு, சென்னை - 1.
3. திருமதி சு. மங்கையர்க்கரசி
   6, பவழக்காரத் தெரு, சென்னை - 1.
4. திரு R. M. S. கோபாலகிருஷ்ண பிள்ளை
   வணிகர், சாத்தான்குளம்,
   (திருநெல்வேலி மாவட்டம்)
5. திரு M. K. சிவகாமிநாத பிள்ளை
   நான்காவது மாடி, புரோச் கட்டிடம்,
   பிரின்சஸ் தெரு பம்பாய் - 2.
6. திரு N. S. சுந்தரம், பார்-அட்-லா,
   134, தெற்கு இராச வீதி, தூத்துக்குடி.
7. திரு. மு. காசிவிசுவநாதன் செட்டியார்
   வங்கியார், பாகனேரி, (இராமநாதபுரம் மாவட்டம்)
8. திருமதி கா. லட்சுமி ஆச்சி
   (திரு. காசிவிசுவநாதன் செட்டியார் மனைவி)
   பாகனேரி.

9. திரு. பெரி. அழ. மு. நா நாராயணன் செட்டியார்
உரிமையாளர், பாரி அச்சகம், 127, பிரகாசம் சாலை, சென்னை.

10. டாக்டர் அழகப்ப செட்டியார்
கல்வித்துறை அறக்கட்டளை,
காரைக்குடி, (இராமநாதபுரம் மாவட்டம்.)

11. திருமதி க. வடிவழகி
(திரு. இரா. கலியாணசுந்தரம் மனைவி)
3, மேட்டுத் தெரு, சென்னை-1.

12. திருமதி வள்ளியம்மை ஆச்சி
(திரு. N. பழனியப்பன் மனைவி)
கொப்பனாபட்டி, பொன்னமராவதி,
(திருச்சி மாவட்டம்)

13. திருமதி மு. வயிரமணி
(திரு இரா. முத்துக்குமாரசாமி மனைவி)
3, மேட்டுத் தெரு, சென்னை-1.

14. திருமதி பழ மீனாட்சி ஆச்சி
(திரு. S. M. பழனியப்ப செட்டியார் மனைவி)
11, ரட்லண்ட் கேட், 2-வது தெரு,
சென்னை-6.

15. திரு S. Ct. சிதம்பரம் செட்டியார்
162, ஆவினாசிசாலை, கோயமுத்தூர்-1.

16. திருமதி வள்ளியம்மை ஆச்சி
(திரு.கண்ணப்பசெட்டியார்மனைவி) நாயனார் குளத்தெரு,
நாட்டரசன் கோட்டை, (இராமநாதபுரம் மாவட்டம்)

17. திரு T. S. ஐம்புலிங்கம் செட்டியார்
திருப்பூர் இல்லம், கோயமுத்தூர்.

18. திரு Rm. K. Rm. இராமசாமி செட்டியார், வங்கியார்.
திட்டை, (தஞ்சை மாவட்டம்)


19. திரு. இரா. கலியாணசுந்தரம், பி.எஸ்.ஸி.
3, மேட்டுத்தெரு, சென்னை-1.

20. திரு. இரா. முத்துக்குமாரசாமி, எம்.ஏ., பி லிப்.
3, மேட்டுத்தெரு, சென்னை-1.

மேலே தரப்பட்டுள்ள விளக்கங்கள் அனைத்தும் எனது முழு நம்பிக்கைக்கும் அறிவுக்கும் ஏற்ப உண்மையானவை என வ. சுப்பையா பிள்ளையாகிய யான் உறுதியளிக்கிறேன்.

12—3—1973 (ஒப்பம்) வ. சுப்பையாபிள்ளை
பதிப்பாளர்

# கழக நூல்களுக்குத் தமிழக அரசு பரிசு
(7-4-'73)



'சட்டத் தமிழ்' நூலுக்கு முதற் பரிசு பெற்ற
திரு. மா. சண்முக சுப்பிரமணியம், பி.ஏ.பி.எல்.




'சங்க இலக்கியத்தில் விலங்கின விளக்கம்'
இரண்டாவது பரிசு பெற்ற திரு. பி. எல். சாமி, பி.எஃசி.



'தமிழக சாவகக் கலைத் தொடர்புகள்'
இரண்டாவது பரிசு பெற்ற
நுண்கலைச் செல்வர் அ. இராகவன்



**'கொசு ஒழிப்பு' நூலுக்கு இரண்டாவது பரிசு பெற்ற**
**திரு. க. வ. முத்தையா, எம். ஏ.**




பரிசு பெற்ற கழக நூல்கள் நான்கிற்கும்
பதிப்பாசிரியர் திரு. வ. சுப்பையா சான்றிதழ்கள் பெறுதல்

# கழக நாடகப் போட்டி



'மனோன்மணீயம்' தந்த

**பேராசிரியர் சுந்தரம் பிள்ளை**



கழக நாடகப் போட்டியில்

ரூ. 1000 பரிசு பெற்ற

'அனிச்ச அடி' நாடகத்தை இயற்றிய

**திரு. புலவர் ஆ. பழனி**

மீ. சு. உயர்நிலைப் பள்ளி

காரைக்குடி.